பல்கலைக்கழக மானியக்குழு (UGC) அங்கீகாரம் பெற்ற மாதஇதழ்
New Centurian Ungal Noolagam ISSN 2394-7535-108

நியூ செஞ்சுரியின்

# உங்கள் நூலகம்

மாத இதழ்

New Centurian Ungal Noolagam (Tamil English - Bilingual Monthly)

மலர் : 16 Vol : 16 | இதழ் : 02 Issue : 02 | www.ncbhpublisher.in | மே 2024 May 2024 | விலை Price ₹ 45/- | ஆண்டு சந்தா Annual Subscription ₹ 540/-



## பெரியாரின் புரட்சிகரக் கருத்துக்களை இந்திய அளவில் கொண்டு செல்வதில் நாம் தோற்றுள்ளோம்

அ.மார்க்ஸ்

# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடுகள்




₹ 55/-




₹ 290/-




₹ 185/-




₹ 350/-




₹ 525/-




₹ 100/-


**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**

41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.

☎ 044 - 26251968, 26258410, 48601884 www.ncbhpublisher.in | email: info@ncbh.in


**கிளைகள்**

அம்பத்தூர் 044 - 2635 9906, ஸ்பென்ஸர் பிளாசா 044-28490027, மதுரை 0452 - 2344106, 4374106, திருநெல்வேலி 0462 - 2323990, 4210990, திண்டுக்கல் 0451-2432172, கோயம்புத்தூர் 0422 2380554, சேலம் 0427-2450817, ஈரோடு 0424-2256667, கிருஷ்ணகிரி 04343-234387, ஓசூர் 04344 - 245726, ஊட்டி 0423 - 2441743 திருச்சி 0431 - 2700885, தஞ்சாவூர் 04362-231371, புதுக்கோட்டை 04322-227773, விழுப்புரம் 04146-227800, பாண்டிச்சேரி 0413 2280101, வேலூர் 0416-2234495, நாகர்கோவில் 04652 -234990.



கற்றது கைம்மண்ணளவு
கல்லாதது உலகளவு

**நியூ செஞ்சுரியின்**

# உங்கள் நூலகம்

**மாத இதழ்**

*திருவள்ளுவராண்டு 2055*

*மலர் - 16 இதழ் - 02 - மே 2024*

ஆசிரியர்

**த.ஸ்டாலின் குணசேகரன்**

பொறுப்பாசிரியர்

**சண்முகம் சரவணன்**

ஆசிரியர் குழு

பேராசிரியர் ஆ.சிவசுப்பிரமணியன்
முனைவர் ச.சுபாஷ் சந்திரபோஸ்
முனைவர் ந.முத்துமோகன்
முனைவர் மு.இராமசுவாமி
முனைவர் நா.இராமச்சந்திரன்
முனைவர் பா.ஆனந்தகுமார்
முனைவர் ஞா.ஸ்டீபன்
ப.குராஜன்
முனைவர் இரா.அறவேந்தன்
முனைவர் இரா.காமராசு
முனைவர் உ.அலிபாவா

இதழ் வடிவமைப்பு

*கா. குணசேகரன்*

நியூ செஞ்சுரி வாசகர் சங்கம்
பதிவு எண் : 21/2005/ 11/2/2005
16 (142). ஜானி ஜான்கான் ரோடு.
இராயப்பேட்டை. சென்னை - 600 014
ungalnoolagam@gmail.com
இணைய தள முகவரி: www.ncbhpublisher.in

தனி இதழ் ₹ 45.00. ஆண்டு சந்தா ₹ 540.00
மாணவர்களுக்கு ₹ 500.00
ஆயுள் சந்தா ₹ 5400.00
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 4050.00

*சந்தா தொகையை*
**New Century Reader's Sangam**
**Central Bank of India**
**Ambattur Branch. Chennai - 600 050**
**A/c.No. 1035249018**
**IFSC Code : CBIN0282161**
*என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.*

உங்கள் நூலகம் பற்றிய விமர்சனக் கடிதங்கள்,
உங்கள் நூலகத்திற்கான படைப்புகள், கட்டுரைகள்,
நூல் விமர்சனங்கள், மதிப்புரைக்கான நூல்கள்
ஆகியவற்றைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு வேண்டுகிறோம்.

**பொறுப்பாசிரியர்**
**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், (பி) லிட்.,**
**41-பி. சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்.**
**அம்பத்தூர். சென்னை - 600 050.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**


## உள்ளே...


**1** ஏழ்மையும் ஏற்றத்தாழ்வும்
ஆசிரியர் குழு........04

**2** பெரியாரின் புரட்சிகரக் கருத்துக்களை இந்திய அளவில் கொண்டு செல்வதில் நாம் தோற்றுள்ளோம்
அ.மார்க்ஸ்........06

**3** சித்தாவுக்கு முன்பாகவே இராவணன் உருவாக்கிய சிந்தாமணி மருத்துவம்
டாக்டர் சு.நரேந்திரன்........16

**4** தமிழ்ப் பொதுவெளிக்கு தாராபுரம் தந்த அறிவுக்கொடை எஸ்.வி.ராஜதுரை
வீ.அரசு........21

**5** மகேந்திரவர்மன் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறான்
அ.கா.பெருமாள்........27

**6** தென்கிழக்காசியாவின் வரலாற்றாசிரியர் ஆர்.ஏ.எல்.எச்.குணவர்த்தனா
கி.இரா.சங்கரன்........34

**7** தமிழ்ஒளியின் காப்பியங்களில் சாதி எதிர்ப்பு
முனைவர் க.சேகர்........40

**8** இணைய இதழ்கள்: ஆறாம் திணை நினைவுகள்
மூ. அப்பணசாமி........44

**9** தமிழக வட்டார வழக்குச் சொற்கள்
முனைவர் ச.முத்துமாரி........48

**10** மனைவிமார்களின் வேலை நிறுத்தம்
ராஜ்ஜா........52

**11** கவனிக்கத்தக்க சிறுகதைகள்
முனைவர் க.கிருஷ்ணமூர்த்தி........56

**12** நூற்றாண்டு: ஜனமித்திரன் இதழ் (1924 2024)
அண்டனூர் சுரா........60

**13** தகவமைப்பதற்கான முன்னெடுப்புகள் சிறுபாணாற்றுப்படையை முன்வைத்து
முனைவர் சூ.ஜா.இதயராஜா........64

**14** TIE OF TRUST AND HOPE IN FRIENDSHIP: THE RESTORATION OF SAFE ENVIRONMENT IN MEREDITH RUSSO'S IF I WAS YOUR GIRL
N. Archana & Dr. V.M. Saranya........70



THE CONSTITUTION OF INDIA

PREAMBLE

WE, THE PEOPLE OF INDIA, having solemnly resolved to constitute India into a SOVEREIGN SOCIALIST SECULAR DEMOCRATIC REPUBLIC and to secure to all its citizens:

JUSTICE, social, economic and political;

LIBERTY of thought, expression, belief, faith and worship;

EQUALITY of status and of opportunity; and to promote among them all

FRATERNITY assuring the dignity of the individual and the unity and integrity of the Nation;

IN OUR CONSTITUENT ASSEMBLY this twenty-sixth day of November, 1949, do HEREBY ADOPT, ENACT AND GIVE TO OURSELVES THIS CONSTITUTION.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முகப்பு




1900-2021இல் மேல்மட்ட 10% கீழ்மட்ட 50% வருமானப் பங்குகள்

# ஏழ்மையும் ஏற்றத்தாழ்வும்

இந்திய அரசியலமைப்புச் சட்டம் அதன் முகப்பிலேயே அதன் குடிமக்கள் அனைவருக்கும் நீதியையும் அத்தோடு சுதந்திரம், சமத்துவம் சகோதரத்துவம் ஆகியவற்றையும் அளிக்க உறுதி கூறுகிறது. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் – ஆங்கிலத்தில் *Liberty, Equality and Fraternity* என்ற தாரக மந்திரம் ஃபிரெஞ்சுப் புரட்சி உலகுக்கு அளித்த கொடை. அன்பு, பாசம், காதல், நட்பு எல்லாம் மானுடம் மானுடமாய் உருவெடுத்த காலமாய் இருக்கும் மனித உணர்வுகள்தாம். ஆனால் நவீன மானுடத்தின் புதிய உணர்வும் தாகமும், ‘சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்’! அரசியலமைப்புச் சட்ட வரைவுக் குழுவின் தலைவர் என்ற வகையில், டாக்டர் அம்பேத்கர் 1949 நவம்பர் 25 அன்று இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் வரைவை அறிமுகம் செய்து பேசினார். சமத்துவமும் சகோதரத்துவமும் நிலவாத இந்தியாவில் இந்த உறுதிமொழியின் முக்கியத்துவத்தை விளக்கிய டாக்டர் அம்பேத்கர் ஒரு எச்சரிக்கையையும் வழங்கினார். சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவை தனித்தனியே பிரிக்க இயலாதவை; ஒன்றில்லாமல் ஒன்று சாத்தியமில்லை என்பதையும் தனக்கே உரித்தான மேதமையோடு விளக்கினார். அரசியலமைப்புச் சட்டத்தின் ஆட்சி இல்லையென்றால் கொந்தளிப்பும் அராஜகமும் கோலோச்சும் பூமியாக இந்தியா மாறிவிடும் அபாயத்தையும் அவர் எடுத்துக் கூறி எச்சரித்தார்.

இந்த மும்மந்திர முழக்கத்தை உலகிற்கு வழங்கிய பிரெஞ்சு தேசமே 1958 ஆம் ஆண்டுதான் அதனைத் தனது அரசியலமைப்புச் சட்டத்தின் பகுதியாக்கியது என்பதைப் பார்க்கும்போது டாக்டர் அம்பேத்கரின் மேதமையையும் அவரது சொல்லுக்கு அன்றைய ஆட்சியாளர்கள், குறிப்பாக அன்றைய பிரதமர் நேரு அவர்கள் வழங்கிய மதிப்பு, மரியாதையையும் வியக்காமல் இருப்பது இயலாது. வெறுமனே வார்த்தைக்கான மதிப்பு மட்டுமல்ல; அரசின் செயலிலும் அந்த காத்திர உணர்வு ஓரளவுக்கேனும் செயல்பட்டது என்பதே வரலாறு. வேறுபல காரணங்களால் நேரு மற்றும் அவருக்குப் பின்னால் வந்த ஆட்சிகளின் செயல்கள் அல்லது செயலின்மை விமர்சிக்கப்பட்டாலும் 1947–1980 காலத்தில் இந்திய சமூகத்தின் பொருளாதார ஏற்றத்தாழ்வு அதற்கான புள்ளி விவரங்கள் அடிப்படையில் குறைந்தது என்பதை சமீபத்தில்

வெளியான ஆக்ஸ்ஃபாம் ஏற்றத்தாழ்வு அறிக்கையும் *(Oxform Report of Inequality)* பதிவு செய்கின்றது. அது மட்டுமல்லாது ஆக்ஸ்ஃபாம் அறிக்கையும் தாமஸ் பிக்கெட்டியின் உலக ஏற்றத்தாழ்வு ஆய்வகம் *(World Inequality Lab - Hosted by Paris School of Economics)* வெளியிட்டுள்ள அறிக்கையும் *(Income and Wealth Inequality in India, 1922-2023: The Rise of the Billionaire Raj)* 1991 ஆம் ஆண்டிற்குப் பிறகான இன்றைய நிலையை கவலை தரும் வகையில் விளக்கியுள்ளன.

மார்ச் மாதம், தாமஸ் பிக்கெட்டி தலைமையிலான உலக சமத்துவமின்மை ஆய்வகம், "இந்தியாவில் வருமானம் மற்றும் செல்வ சமத்துவமின்மை, 1922-2023: பில்லியனர் ராஜ் உருவாக்கம்" என்ற தலைப்பில் ஒரு ஆய்வு அறிக்கையை வெளியிட்டது. "வேகமாக வளர்ந்து வரும் பொருளாதாரம்" என்பதையே அரசும் பெரும்பாலான மையநீரோட்ட ஊடகங்களும் தினசரி மந்திரம் போல் ஓதி வருகின்றன. இந்த வளர்ச்சி இந்தியர் அனைவருக்கும் உரியதென தோற்றமளிக்க, அரசாங்கமும் ஊடகங்களும் 25 கோடி மக்கள் வறுமையிலிருந்து தப்பிக்க உதவியதாகக் கூறி வருகின்றனர். ஆனால் இந்தியாவில் 2012 முதல் வருமான, வறுமைக் கணக்கெடுப்போ, மதிப்பீடோ அரசு செய்யவில்லை. எனவே அரசின் கூற்று நம்பகத்தன்மை அற்றதாக உள்ளது.

சுதந்திரத்திற்குப் பின் அமைந்த அரசாங்கம் வறுமையையும் ஏற்றத்தாழ்வையும் குறைக்க எடுத்த நடவடிக்கைகள் போதுமானதல்ல என்றாலும், "முதல் 10% பணம் படைத்தவர்களின் தேசிய வருமானத்தின் பங்கு 1951 இல் 37% ஆக இருந்தது 1982 இல் 30% ஆகக் குறைந்துள்ளது" என்று அந்த ஆய்வறிக்கை கூறுகிறது. ஆனால் இதற்குப் பிறகு செல்வம் சிலரிடத்தில் குவிவதும் செறிவாவதும் அதிகரித்தது. 1990களில் இருந்து நடந்த இந்தப் போக்கு காரணமாக தேசிய வருமானத்தில் முதல் 10 சதவீதத்தினரின் பங்கு சமீபத்திய ஆண்டுகளில் 60 சதவீதமாக உயர்ந்தது. அதே நேரம், கீழ்மட்டத்தில் உள்ள 50 சதவீதத்தினரின் பங்கு குறைவாகவே தொடர்கிறது. 2022-23இல், வருமானம் மற்றும் செல்வத்தில் சமத்துவமின்மை திகைப்பூட்டுகிறது: முதல் 1 சதவீதம் பேர் இந்தியரின் சராசரி வருமானத்தை விட 23 மடங்கு சம்பாதிக்கிறார்கள். பணக்கார 10,000 இந்தியர்கள் சராசரியாக ரூ 48 கோடி சம்பாதிக்கிறார்கள்., இது இந்திய சராசரியை விட 2,069 மடங்கு அதிகம். "2022-23 ஆம் ஆண்டில், முதல் 1 சதவீதத்தினரின் வருமானம் மற்றும் செல்வப் பங்குகள் (22.6% மற்றும் 40.1%) இது எந்தக் காலத்திலும் இந்தியா காணாத ஏற்றத்தாழ்வு எனக் கூறும் அறிக்கை, இந்தியாவின் முதல் 1%இன் வருமானப் பங்கு உலகிலேயே மிக அதிகமாக உள்ளது என்றும் கூறியுள்ளது.

இந்தியாவில் கோடீஸ்வரர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. 1991 இல், இந்தியாவில் ஒரு கோடீஸ்வரர் மட்டுமே இருந்தார். 2011ல், எண்ணிக்கை 52ஐ எட்டியது, அடுத்த ஒரு தசாப்தத்தில் 2022ல் 162 ஆக மூன்று மடங்காக அதிகரித்தது. "இந்தக் காலகட்டத்தில், இந்தியாவின் நிகர தேசிய வருவாயில் ஒரு பங்காக இந்தத் தனிநபர்களின் மொத்த நிகரச் செல்வம் 1991இல் 1%க்கு கீழ் இருந்து உயர்ந்தது. 2022இல் 25% ஆக உயர்ந்துள்ளது" என்று அந்த ஆய்வறிக்கை கூறுகிறது. இந்த சமத்துவமின்மை 1922க்கு முன், பிரிட்டிஷ் ராஜ் காலத்தில் காணப்பட்டது. அதனால்தான் ஆசிரியர்கள் தங்கள் ஆய்வறிக்கைக்கு "பில்லியனர் ராஜ்" என்று பெயரிட்டுள்ளனர்.

ஆக்ஸ்ஃபாம் நிறுவனத்தின் இந்தியா குறித்த அறிக்கையும் *(India - Subliment of Dawos Report 2019)* இதனை உறுதிப்படுத்துகின்றது: "இந்திய பில்லியனர்களின் மொத்த சொத்து, நிதியாண்டிற்கான இந்தியாவின் மொத்த யூனியன் பட்ஜெட்டை விட அதிகமாக உள்ளது.... கடந்த 12 மாதங்களில், 119 இந்திய பில்லியனர்களின் மொத்த செல்வம் சுமார் 8 இலட்சம் கோடி அதிகரித்துள்ளது. இந்தத் தொகை நாட்டின் ஒருங்கிணைந்த (மத்திய மற்றும் மாநிலங்கள்) நேரடி வரி வருவாய் (2016-17 இல் சுமார் 8.5 லட்சம் கோடி) அளவிற்கு சமம்... என்னும் தரவுகள் அதிர்ச்சி அளிப்பவையாக உள்ளன.

மறுபுறத்தில் வேலையின்மை, ஏழ்மை, விலைவாசி உயர்வு ஆகியவை குறித்த விவரங்கள் நம் முகத்தில் அறைகின்றன. சர்வதேசத் தொழிலாளர் நிறுவனம் *(ILO)* அளித்துள்ள வேலையின்மை குறித்த அறிக்கை மிகவும் அச்சமூட்டுவதாக இருக்கின்றது. அதுவும் படித்த இளையோர் மத்தியில் உள்ள வேலையின்மை, கல்வி இல்லாதோர் மத்தியில் உள்ள வேலையின்மையைக் காட்டிலும் அதிகம் என்பது பெரும் அச்சமூட்டும் செய்தி.

ஆனால் எல்லாவற்றையும் காட்டிலும் மோசமான நிலை ஒன்று உள்ளது. அது, கைப்புண்ணாக நமக்குத் தெரிய வேண்டிய இந்த மோசமான சமூக நிலையை நாம் ஐ.எல்.ஓ, ஆக்ஸ்ஃபாம், தாமஸ் பிக்கெட்டி கண்ணாடிகள் மூலம் அறிய வேண்டியிருக்கின்றது. வறுமையும், வேலையின்மையும், ஏற்றத்தாழ்வுகளும் மையநீரோட்ட ஊடகங்களில், கலை இலக்கியங்களில் பேசுபொருளாக, கதையாடலின் கருக்களாக இல்லை எனும் நிலை. அவற்றைக் குறித்துப் பேசவது சமகால மோஸ்தர் இல்லை; ஃபேஷன் இல்லை எனும் உளப்பாங்கு நிலவுகிறது. குரலற்றவர்களின் குரலாக இருக்க வேண்டியது மக்கள் நலன் நோக்குள்ள கலை இலக்கியப் படைப்புகள், அமைப்புகள், ஊடகங்கள், பதிப்பகங்களின் கடமை. அந்தக் கடமை நமக்கு அதிகரித்துள்ளது. நாம் அதற்கு முகம் கொடுத்தாக வேண்டும்.

**- ஆசிரியர் குழு**



# பெரியாரின் புரட்சிகரக் கருத்துக்களை இந்திய அளவில் கொண்டு செல்வதில் நாம் தோற்றுள்ளோம்

**- அ.மார்க்ஸ்**

**நேர்காணல்: ஜி.சரவணன்**

தமிழ்ச்சூழலில் 'நிறப்பிரிகை', 'பின்நவீனத்துவம்' 'உண்மை கண்டறியும் குழு' போன்ற புதிய செயல் உருவாக்கங்களை எண்ணுந்தோறும் கூடவே நினைவுக்கு வருபவர் அறிவார்ந்த செயல்பாட்டாளரான அ.மார்க்ஸ். நாற்பதாண்டுகளுக்கும் மேலாக விளிம்புநிலை மக்களுக்கான எழுத்து, பேச்சு, ஆய்வு, களச் செயல்பாடுகள், மனித உரிமைப் போராட்டங்கள் எனத் தொய்வில்லாமல் தொடர்ந்து இயங்கி வருபவர் பேராசிரியர் அ.மார்க்ஸ். எந்தச் சூழ்நிலையிலும் அஞ்சாமல் அதிகாரத்திற்கெதிரான குரலை ஒலித்துக்கொண்டேயிருக்கும் அவரை சென்னை அடையாறிலுள்ள அவரது இல்லத்தில் சந்தித்தோம்.

**தமிழகக் கலை இலக்கிய அரசியல் சூழலில் ஒரு மாற்றுப் போக்கை முன்வைத்தது 'நிறப்பிரிகை'-யின் செயல்பாடுகள். அதைப்பற்றி இன்றைய தலைமுறையினர் அறிந்துகொள்ளும்படிக் கூறலாமா?**

*நிறப்பிரிகையின் முதல் இதழ் 1990 அக்டோபரில் வெளிவந்தது. அதன் முதல் தலைப்புக் கட்டுரை "ரஷியா, சீனா மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களும் அவை மார்க்சியத்தின் முன் எழுப்பியுள்ள கேள்விகளும்" என்பது. நிறப்பிரிகை முன்வைத்த பல முக்கிய மாற்றங்களில் ஒன்று 'கூட்டுக் கட்டுரை' என்கிற ஒரு வடிவம். இதற்குமுன் யாரும் இப்படியான முயற்சி எதையும் செய்ததாக நினைவில்லை. அன்றைய சூழலில் மேலுக்கு வந்துள்ள ஒரு முக்கியமான பிரச்சினையை எடுத்துக்கொண்டு அது குறித்து பலரும் விவாதித்து,*

அதனூடாகக் கூடிய அளவிற்கு ஒரு பொது முடிவை முன்வைப்பது என்பது அதன் நோக்கம். மாற்றுக் கருத்துக்களாக முன்வைக்கப்பட்டவையும் கூட உரிய முக்கியத்துவத்துடன் அதில் சேர்க்கப்படும். தமிழகத்தில் எந்த ஊரில், என்ன தலைப்பில், எந்தத் தேதியில் விவாதம் நடைபெறும் என்பதும் முன்னதாகவே நிறப்பிரிகை இதழ்களில் வெளியிடப்படும். அவ்வாறு முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் மிக்க நடுநிலையுடன் வெளியிடப்படும். இந்த முதல் இதழிலேயே சோவியத் மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்டிருந்த மாற்றங்கள் இப்படி விவாதத்திற்கு முன்வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்க ஒன்று.

ஒவ்வொரு விவாதத்தின் போதும் வந்து கலந்து கொள்ளும் தோழர்களுக்கு தேநீர் மற்றும் மதிய உணவும் அளிக்கப்படும். எந்த ஊரில் விவாதம் நடக்கிறதோ அந்தப் பகுதித் தோழர்களில் யாரேனும் ஒருவர் அல்லது குழுவினர் செலவுகளைப் பகிர்ந்து கொள்வார்கள். நண்பர் வேல்சாமி இதழ் அச்சிடுவதற்கு ஒரு தொகை அளிப்பார். அச்சிட்டு வினியோகிக்கும் பொறுப்பு ஒரு குறிப்பிட்ட காலம் வரை ரவிக்குமாரின் பங்காக இருந்தது. அவரது கட்டுரைகளும் அவ்வப்போது நிறப்பிரிகையில் வெளி வரும். பின் ஒரு கட்டத்தில் அவர் விலகிக் கொண்டார். அப்படி இடைக் காலத்தில் விலகிக் கொண்ட இன்னொருவர் நண்பர் பொதியவெற்பன்.

பல்வேறு நம்பிக்கைகள், கருத்துக்கள் கொண்ட நண்பர்களும் இப்படிப் பல்வேறு மட்டங்களில் இப்படி இந்தக் கூட்டுக் கட்டுரை முயற்சியில் பங்கு பெற்றது மறக்க இயலாத ஒன்று.

குகி வா தியாங்கோவின் “துப்பாக்கியும் பள்ளிக்கூடமும்”, எழுத்தாளர் பிரேமின் “புரட்சியை நோக்கி சில உளவியல் சிந்தனைகள்” தோழர் கேசவனின் “சோஷலிசம் மற்றும் முதலாளிய மீட்சி” குறித்த நூல் ஆய்வு, “மார்க்சியமும் தேசிய இனப் பிரச்சினையும் குறித்து இன்று கவனத்தில் எடுக்க வேண்டிய படிப்பினைகள்” என்கிற தலைப்பில் எழுதப்பட்ட என் விரிவான கட்டுரை முதல் இதழில் வெளிவந்த போது பெரிய அளவில் அது அக்கால கட்டத்தின் கவனத்தை ஈர்த்தது.

தொடர்ந்து அருணன், சாரு நிவேதிதா, ரவிக்குமாரின் “அதிமனிதர்களும் குப்பைக் கூளங்களும்” என்கிற வரலாறு எழுதுதல் உள்ளிட்ட கட்டுரைகள், வில்கம் ரெய்ச், ரொமிலா தாபர் முதலானோரின் முக்கிய கட்டுரைகள் முதலியவை குறித்த கட்டுரைகளின் பெயர்களை எல்லாம் சொல்லி மாளாது. நண்பர் நாகார்ஜுனனின் பங்களிப்பும் குறிப்பிடத்தக்கன. இலக்கிய இணைப்பு, பெண்ணியம்

> “யார் தன்னுடைய முதலாளி என்றுகூடத் தெரியாத அளவிற்கு இன்றைய தொழிலாளி ஆக்கப்பட்டுள்ளான். எல்லா வரையறைகளும் இன்று தெளிவற்றதாக ஆகியுள்ளன. இதன் பொருள் தொழிலாளி வர்க்கம் அதன் பொருளில் அழிந்துவிட்டது என்பதோ, இல்லை, அமைப்பு ரீதியாகத் திரள சாத்தியமற்றதாக ஆகிவிட்டது என்பதோ அல்ல.”

தொடர்பான கட்டுரைகள் என நிறப்பிரிகையின் அன்றைய முயற்சிகளைச் சொல்லிக் கொண்டே போகலாம். நீண்ட பாரம்பரியம் மிக்க தமிழ் இலக்கிய முயற்சிகள் குறித்து எவ்வளவோ சொல்லலாம். அவற்றுள் சமீப காலத்தின் ஆக முக்கியமான ஒரு முயற்சியாக ‘நிறப்பிரிகை’ அமைந்ததை யாரும் மறுக்க இயலாது.

**இன்றைய சூழலில் நிறப்பிரிகை போன்ற ஒரு மாற்று இயக்கத்தின் தேவை மற்றும் அதற்கான சாத்தியங்கள் பற்றிக் கூறுங்களேன்...**

மாற்று இயக்கங்களின் தேவை மிக மிக முக்கியம் என்பதற்கு நிறப்பிரிகை ஒரு எடுத்துக்காட்டு. ஒரு குறிப்பான அரசியல் நோக்குடன் நிறப்பிரிகை செயற்பட்டபோதும் அது என்றும் ஒரு கட்சிப் பத்திரிகையாக மாறவில்லை. இதன் பொருள் கட்சிப் பத்திரிகைகளைக் குறைத்துச் சொல்வதல்ல. இலக்கியக் களத்தில் கம்யூனிஸ்டுகள், திராவிட இயக்கத்தினர் ஆகியோரின் பங்குகள் அதில் முக்கியமாக இருந்துள்ளன. அவற்றுக்கான தேவைகளையும் நாம் புரிந்துகொள்கிறோம். எனினும் குறிப்பான கட்சி அடையாளங்களுடன் இறுக்கமாக நில்லாமல் இலக்கியப் பத்திரிகைகள் செயல்படும் போதுதான் பன்முகத் தன்மையுடன் அவை வெளிப்பட முடியும்.

> *மார்க்சியம் தோற்றுவிட்டதாகக் குதூகலிப்போர் இரண்டு அம்சங்களைக் கணக்கில் கொள்ள வேண்டும். இந்த வீழ்ச்சி வெறும் தொழிலாளி வர்க்கக் கோட்பாடுகளின் வீழ்ச்சி மட்டும் அல்ல. எல்லாச் சமூக அறங்கள் மற்றும் சமூக நீதிகளின் வீழ்ச்சி.*

அதனூடாக புதிய, நவீனக் கருத்துக்களை பல தரப்பினரிடமும் கொண்டு செல்ல முடியும்.

விவாதங்கள், புதிய கருத்துக்களை நடுநிலையோடு அணுகுதல் முதலியன ஒரு கட்சிக்காரருக்கு முக்கியமில்லை என்பதல்ல. இலக்கியம் முதலானவற்றில் அப்படியாக சற்றே நெகிழ்ச்சியான ஒரு அணுகல் முறை சில பத்தாண்டுகளைக் காட்டிலும் இப்போது மார்க்சிஸ்டுகள் மத்தியில் உருவாகியுள்ளதை நாம் உணர முடிகிறது. எனினும் அப்படியான ஒரு நிலை எல்லா மட்டங்களிலும் உருப்பெறவில்லை என்றே நான் உணர்கிறேன்.

**மனித உரிமை, சமூகநீதி, உண்மை கண்டறியும் குழு என்று களச் செயல்பாடுகளில் தீவிரமாக இயங்கி வருபவர் நீங்கள். அதன் பயன் விளைவுகள் எப்படியானதாக இருந்திருக்கிறது?**

மனித உரிமைக் களத்தில் சுமார் முப்பதாண்டுகளுக்கும் மேலாக நான் செயல்பட்டு வருகிறேன். மனித உரிமைச் செயல்பாடுகளின் ஊடாக உடனடியான பயன்கள் உண்டு. முப்பதாண்டுகளுக்கும் மேலாகச் செயல்பட்டு சுமார் எழுபதுக்கும் மேற்பட்ட மனித உரிமை மீறல்கள் குறித்து நானும் எனது குழுவினரும் அறிக்கைகள் சமர்ப்பித்துள்ளோம். மனித உரிமைப் பிரச்சினைகளில் பெரும்பாலும் அடித்தள மக்கள், தாழ்த்தப்பட்டோர், சிறுபான்மையினர். பெண்கள் ஆகியோர்கள்தான் பாதிக்கப்படுகின்றனர். மனித உரிமை அமைப்புகளுக்கு அரசு ஆதரவுகள் கிடையாது. இருந்த போதிலும் சொந்தச் செலவில் குழுக்களை அமைத்து பாதிக்கப்பட்டவர்களின் மீதான அத்துமீறல்களை நண்பர்களின் ஒத்துழைப்புடன் நாங்கள் செய்தி ஆக்கி உள்ளோம்.

பாதிக்கப்பட்ட மக்கள் சில நேரங்களில் தங்களின் பாதிப்புகளை மிகைப்படுத்திச் சொல்லலாம். அவற்றை எல்லாம் மிக நுணுக்கமாக நாங்கள் ஆய்வு செய்து வன்முறைக்கு ஆளானவர்களின் மீதான பாதிப்புகள், அந்தப் பாதிப்பிற்குக் காரணமானவர்கள் என்பதை எல்லாம் வெளிக் கொணர்ந்துள்ளோம். மனித உரிமைக் களச் செயல்பாட்டாளனின் ஒரே பலம் அவனது நேர்மைதான். எனினும் பல அதிகாரிகள் நாங்கள் கூறுபவற்றைக் கவனத்துடன் கேட்டு உரிய நடவடிக்கை எடுத்துள்ளனர். எனினும் அப்படியானவர்களின் எண்ணிக்கை குறைவு.

குறிப்பாக அரசு, காவல்துறை அத்துமீறல்கள், என்கவுண்டர் படுகொலைகள் ஆகியவற்றில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைப்பதில்லை. இது குறித்து மனித உரிமை அமைப்பினர் பேசினால் மட்டும் போதாது. அரசியல் கட்சிகள் பேச வேண்டும். நடுநிலையாளர்கள் குரல் கொடுக்க வேண்டும்.

மதுரையில் சில ஆண்டுகள் முன் சுமார் பத்துக்கும் மேற்பட்ட சிறுபான்மையினர் மீது பொய் வழக்குகள் போடப்பட்டு அவர்கள் பல காலம் வழக்குகளில் துன்புறுத்தப்பட்டபோது நாங்கள் அளித்த அறிக்கையை மேற்கோள் காட்டி அது தொடர்பாக ஆய்வு செய்த அதிகாரி, அவர்கள் மீதான வழக்குகளை ரத்து செய்ததோடு இழப்பீடுகள் வழங்க ஆணையிட்டது குறித்து நான் சில கட்டுரைகளில் விரிவாக எழுதியுள்ளேன்.

**தொழிற்சங்கச் செயல்பாடுகளால் பல்வேறு இடையூறுகளைச் சந்தித்துச் சாதித்தவர் நீங்கள். அதைப் பற்றி...**

அது என்னுடைய தனிப்பட்ட சாதனை அல்ல. அது அரசு கல்லூரி ஆசிரியர் கழகத்தின் சாதனை. நான் அவ்வமைப்பின் தலைவர்களில் ஒருவன் மட்டுமே. அது ஒரு காலம். அப்போது சாத்தியமாகிய சில இன்று சாத்தியமற்றுப் போயுள்ளன. சுமார் மூன்று முறை எங்கள் அரசு கல்லூரி ஆசிரியர் அமைப்பு போராடி சில நூறு ஆசிரியர்களை நிரந்தரம் ஆக்கியது. அது சங்கத்தின் மிகப்பெரிய சாதனை. ஆனால் இன்று அதெல்லாம் சாத்தியமில்லாத நிலை ஏற்பட்டுள்ளதையும் நாம் கவனத்தில் கொள்வது அவசியம். ஒரே பணியில் முழு ஊதியமும் பெறும் நிரந்தரப் பேராசிரியர்கள் எனவும் அதைவிட மிகமிகக் குறைவான ஊதியத்துடன் அதே அளவு வேலை செய்யும் ஒப்பந்த ஆசிரியர்கள் எனவும் இன்று கல்லூரிகளில் நியமிக்கப் படுகின்றனர்.



அதுமட்டுமல்லாமல் எந்த நேரத்திலும் இந்த ஒப்பந்த ஆசிரியர்கள் பணி நீக்கம் செய்யப்படும் நிலையும் இன்று உள்ளது. ஒரே வேலைக்கு இப்படி இரு வேறு ஊதியம் முதலிய கொடு அநீதி இன்று இயல்பாகி விட்டது. தொழிற்சங்கங்களால் இந்தக் கொடுமையை ஒழித்துக்கட்ட இயலாத நிலை இன்று ஏற்பட்டுள்ளது. இருபது ஆண்டுகளுக்கு முன் நிலைமை அவ்வாறு இல்லை. நான் அரசு கல்லூரியில் ஆசிரியராக இருந்தபோது எனது தொழிற்சங்க நடவடிக்கைகளுக்காகவும், மன்னார்குடி அரசு கல்லூரியில் தலித் மாணவர்களுக்கு அவர்கள் தங்கிப் படிக்கும் வகையில் ஆதரவாக நின்றதற்காகவும் இரண்டு முறை வெகுதூரத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டேன். என் பிள்ளைகள் பள்ளியில் படித்த காலத்தில் அவர்களோடு இருக்க இயலாத நிலை ஏற்பட்டதோடு ஓராண்டு காலம் என் ஊதிய உயர்வும் நிறுத்தப்பட்டது. அவ்வளவுதான். மற்றபடி பெரிய பிரச்சினை எதையும் நான் சந்திக்கவில்லை. அன்று ஒரே பணிக்கு தற்காலிக ஆசிரியர்களுக்கு ஒரு ஊதியம், நிரந்தர ஆசிரியர்களுக்கு ஒரு ஊதியம் என்றும் வேறுபாடுகள் இல்லை. இன்று எல்லாம் மாறிவிட்டது.

**ஆனால் இன்றைக்கு அதிகாரத்தை எதிர்க்கும் பல போராட்டங்கள் எதிர்பார்க்கும் வெற்றியை அடைய இயலாததற்கு என்ன காரணம்?**

உலகளாவிய சோஷலிசத்தின் வீழ்ச்சி இதில் முக்கிய பங்கு வகிக்கிறது. இதை வெறும் தொழிலாளி வர்க்கக் கோட்பாட்டின் வீழ்ச்சியாக மட்டும் கருத வேண்டியதில்லை. இன்னொன்றையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இப்போது வெறும் சோஷலிசம் மட்டும்தானா வீழ்ச்சி அடைந்துள்ளது.

தொழிலாளர் போராட்டங்கள் மட்டும்தானா சரிந்துள்ளன. அரசின் கட்டுப்பாடுகள் உதிர்ந்து குறைவதற்குப் பதிலாக அவை இன்னும் இறுக்கமாகப் பிணைந்து தேசங்களைக் கடந்த ஒன்றாகவும் உருமாறி வருகிறது. ஜனநாயகம் இன்று உலகளாவிய ஒரு நெருக்கடியை எதிர் கொண்டுள்ளது. இன்றைய சூழலை நாம் இப்படித்தான் புரிந்து கொள்ளல் வேண்டும். முதலாளி, தொழிலாளி, ஏகாதிபத்தியம், காலனியம், நவ காலனியம் எல்லாம் முன்னைப்போல இறுக்கமாக வரையறுக்கப்பட்ட "தெளிவுடன்" நம்முன் காட்சி அளிப்பதில்லை.

யார் தன்னுடைய முதலாளி என்றுகூடத் தெரியாத அளவிற்கு இன்றைய தொழிலாளி ஆக்கப்பட்டுள்ளான். எல்லா வரையறைகளும் இன்று தெளிவற்றதாக ஆகியுள்ளன. இதன் பொருள் தொழிலாளி வர்க்கம் அதன் பொருளில் அழிந்துவிட்டது என்பதோ, இல்லை, அமைப்பு ரீதியாகத் திரள சாத்தியமற்றதாக ஆகிவிட்டது என்பதோ அல்ல. மார்க்ஸ் காலத்திற்கும் நமக்கும் இடையே அடிப்படை மாறிவிடவில்லை. ஆனால் சூழல்கள் பெரிதும் மாறியுள்ளன. வால்ஸ்ட்ரீட் மற்றும் அதை ஒட்டி உலகெங்கிலும் நடந்த போராட்டங்களை எல்லாமும் நாம் முற்றாகப் புறக்கணித்துவிட வேண்டியதில்லை. மார்க்சின் காலத்தில் இல்லாத இம்மாற்றங்களை எல்லாம் கணக்கில் கொண்டு மார்க்சியத்தை நவீன சிந்தனைகளுடன் நாம் வளர்த்தெடுக்க வேண்டும்.

**இப்போதைய சூழ்நிலையில் மார்க்சியம் எனும் கருத்தாக்கத்தின் தேவை குறித்த தங்களின் பார்வை?**

மார்க்சியச் சிந்தனைகளின் தேவை இன்று அதிகம் ஆகி உள்ளது என்பதுதான் என் கருத்து. சென்ற நூற்றாண்டில் சோவியத் யூனியனின் வீழ்ச்சி, வார்சா ஒப்பந்தம் அழிக்கப்பட்டு அதனுடைய அங்கங்கள் முதலாளிய நாடுகளின் கூட்டணியான 'நேட்டோ' வில் *(NATO)* இணைதல், கம்யூனிச மற்றும் சோஷலிச முயற்சிகள் வலுவிழந்து உலகம்

முதலாளியப் பாதையை நோக்கித் திரும்புதல் எல்லாம் நடந்துள்ளன. புரட்சிக்குப் பிந்திய சமுதாயங்கள் எல்லாம் வீழ்ந்துவிட்டன. லத்தீன் அமெரிக்க நாடுகள் உட்பட எல்லாம் சந்தைப் பொருளாதாரத்தை ஏற்றுக் கொண்டுவிட்டன என்பதெல்லாம் உண்மைதான். சோஷலிசம் வீழ்ந்துவிட்டதாகவும் இனி நாகரிகங்களுக்கு இடையேயான மோதல்கள் *(clash of civilization)* மட்டுமே சாத்தியம் எனவும் சாமுவேல் ஹட்டிங்டன் முதலான முதலாளியக் கருத்தியலாளர்கள் கூவுகிற காலம் இது என்பதும் உண்மைதான்.

இன்னொரு பக்கம் இந்தப் பின்னணியில் தொழிலாளி வர்க்கமும், பொது மக்களும் சென்ற நூற்றாண்டில் பெற்றெடுத்த அனைத்து சமூகப் பாதுகாப்புகளும் இன்று அழிந்து வருகின்றன. நிரந்தர வேலை, ஓய்வூதியம், தொழிற்சங்க உரிமைகள், சமூகப் பாதுகாப்பு, கல்வி, மருத்துவ உரிமைகள், சமூகப் பாதுகாப்பு என்பனவெல்லாம் இன்று காலாவதியாகி விட்டன.

மார்க்சியம் தோற்றுவிட்டதாகக் குதூகலிப்போர் இரண்டு அம்சங்களைக் கணக்கில் கொள்ள வேண்டும். இந்த வீழ்ச்சி வெறும் தொழிலாளி வர்க்கக் கோட்பாடுகளின் வீழ்ச்சி மட்டும் அல்ல. எல்லாச் சமூக அறங்கள் மற்றும் சமூக நீதிகளின் வீழ்ச்சி. மார்க்சியம் தோற்றுவிட்டதாகச் சொல்வோர் யாரும் இதுவரை மார்க்ஸ் முன்வைத்த முதலாளிய விதிகள் எவ்வாறு பொய்யாகிவிட்டன என்றெல்லாம் நிறுவியதே இல்லை.

மார்க்ஸ் சொன்னதுபோல முதலாளியம் தொடர்ந்து நெருக்கடிகளைச் சந்தித்துக் கொண்டுதான் உள்ளது. 2008 இல் உலகைக் குலுக்கிய பொருளாதார நெருக்கடியை நேரில் அனுபவித்தவர்கள்தானே நாம். மார்க்சியம் தோற்றுவிட்டதாகச் சொல்வோர் அதற்கு முன்வைக்கும் ஒரே ஆதாரம் சோஷலிசக் கட்டுமானங்களின் வீழ்ச்சி ஒன்றுதான். ஆனால் மார்க்சியம் என்றும் சோஷலிசக் கட்டுமானம் எப்படி இருக்கும் என்றெல்லாம் சொன்னதில்லை. பல்வேறு புரட்சிக்குப் பிந்திய நாடுகள் பல்வேறு வழிகளில் சோஷலிசக் கட்டுமான முயற்சிகளை மேற்கொண்டன. சுற்றிலும் முதலாளியக் கட்டுமானங்களின் மத்தியில் அவை போராடித் தன்னை நிலை நிறுத்திக் கொள்ள வேண்டியவையாக இருந்தன. அவற்றை வழி நடத்திய கம்யூனிஸ்ட் கட்சிகள் சில தவறுகளும் செய்தன. பாட்டாளிவர்க்கச் சர்வாதிகாரம் எனச் சொல்லி மக்களின் ஜனநாயக உரிமைகள் பறிக்கவும் பட்டன. இப்படியான தவறுகள் மற்றும் அதன் விளைவுகள் ஆகியன மட்டுமே மார்க்சியத்தின் தோல்வியாகிவிடாது.

**உலகளவிலும். இந்தியாவிலும், இன்றைய இடதுசாரிகளின் நிலை பற்றி உங்கள் மதிப்பீடு?**

நிறைய மாற்றங்கள் இன்று ஏற்பட்டுள்ளன. தாங்கள் மேற்கொண்ட தவறுகளையும் அவர்கள் உணர்கின்றனர். ஆனால் மார்க்சியத்திற்கு ஏற்பட்ட பின்னடைவு என்பது இதற்குத் தீர்வல்ல என்பதையும் மார்க்சியத்திற்குப் பிந்திய இன்றைய உலகம் இன்னும் ஆபத்தானது என்பதையும் அவர்கள் உணர்கின்றனர். அது குறித்து அவர்களின் கட்டுரைகள் சிலவற்றை நான் மொழிபெயர்த்து ‘நவதாராளவாதம்’ எனும் பெயரில் நூலாகவும் வெளிவந்துள்ளது. இன்றைய நவதாராளவாதத்தின் ஆபத்துக்களை அந்த மொழிபெயர்ப்புகளில் நான் விரிவாகக் கூறியுள்ளேன்.

**பௌத்தம், இஸ்லாமியம், மார்க்சியம், பெரியாரியம், தலித்தியம், அம்பேத்கரியம், காந்தியம், எனப் பல்வேறு தளங்களில் பேசியும், எழுதியும், இயங்கியும் வருகிறீர்கள். இவற்றுக்கு இடையேயான ஒற்றுமை என எதைக் கருதுகிறீர்கள்?**

எல்லாவற்றிலும் உள்ள நல்ல அம்சங்களை நாம் எடுத்துக்கொள்ள வேண்டியதுதான். நீங்கள் இக்கேள்வியில் குறிப்பிட்டுள்ள அத்தனை தளங்களிலும் உள்ள முக்கியமானவற்றையும், நமது சூழலில் முக்கியத்துவம் அளிக்க வேண்டியவற்றையும் நான் மிக விரிவாகவும், தெளிவாகவும் என் நூல்களின் ஊடாக முன்வைத்துள்ளேன். “இவரென்ன ஒரே நேரத்தில் கார்ல் மார்க்சையும் பேசுகிறார், இவற்றையும் பேசுகிறார்” எனத் தொடக்க காலங்களில் விமர்சித்தவர்கள் எல்லாம் இன்று இதனை ஏற்றுக் கொள்டுள்ளனர்.

என் தந்தை ஒரு நாடு கடத்தப்பட்ட கம்யூனிஸ்ட். ஒரு கூலித் தொழிலாளியாக ஒன்றாக இருந்த மலேசியா - சிங்கப்பூர் சென்ற அவர் அங்கு செயல்பட்ட கம்யூனிஸ்ட் கட்சியில் “தூக்கில் தொங்கிய கணபதி” முதலானோருடன் இயங்கியவர். அன்றைய பிரிட்டிஷ் அரசு கொடூரமாக கம்யூனிஸ்ட்களை வேட்டை ஆடியபோது என் தந்தையும் தேடப்பட்டார். போரில் உடைந்த கப்பலொன்று இந்தியா வழியாகச் சென்றபோது அதில் தமிழ்த் தாயகத்திற்கு அவர் வந்தார். இங்கும் அப்போது பிரிட்டிஷ் ஆட்சிதான் நடந்தது. அது அப்போது அவரைக் கைது செய்தது. எனினும் அடுத்த சில நாட்களில் அது இந்தியாவுக்குச் சுதந்திரம் அளித்துவிட்டுச் சென்றபோது அவரும் விடுதலை செய்யப்பட்டார். நாடு கடத்தப்பட்டு இந்தியாவிற்கு அனுப்பப்பட்ட ஒரு தோழரையும் அவர் தம்பியையும் தன் மகனாக ஏற்று தன் சொந்தங்களில் அவர்களுக்குத் திருமணம் செய்வித்துக் கடைசிவரை அவர்களோடு ஒரே குடும்பமாய் வாழ்ந்தவர் அவர்.

மதிப்பிற்குரிய தோழர் கே.டிகே தங்கமணி அவர்கள் சிங்கப்பூர் வந்து சுமார் இரு மாத காலம்

தங்கியபோது அப்பாவின் பொறுப்பில் இருந்த கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்திலும் அவர் தங்கி இருந்தார். இதர தோழர்களுடன் என் தந்தையும் அவரும் எடுத்துக் கொண்ட புகைப்படம் ஒன்று இன்றும் என்னிடம் உள்ளது. தஞ்சை மாவட்டத்தில் உள்ள பாப்பாநாடு எனும் சாலை ஓரக் கிராமத்தில் அப்பாவின் இறுதிக்காலம் கழிந்தது. அன்றைய ஒன்றாக இருந்த கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் பலரும் என் சிறு வயதில் வீட்டிற்கு வந்து சென்ற நிகழ்ச்சிகளை மறக்க முடியாது. அப்பா எனக்குக் மார்க்ஸ் எனப் பெயரிட்டது மட்டுமின்றி நல்ல பல எழுத்தாளர்களையும் அவர்களின் எழுத்துக்களையும் அறிமுகப் படுத்தியவரும் அவர்தான்.

நாடு கடத்தப்பட்ட கம்யூனிஸ்டாகிய அவர் மகாத்மா காந்தியின் மீதும், நேருவின் மீதும் இறுதி வரை மிக்க மரியாதை கொண்டிருந்தார். 'மார்க்ஸ்' எனும் பெயரை எனக்கு இட கிறிஸ்தவ ஆலயம் மறுத்தபோது, அது குறித்துக் கவலைப்படாமல் என்னை வீட்டிற்குத் தூக்கி வந்தவர் அவர். 'மார்க்ஸ்' எனும் பெயருக்காக திருச்சி கிறிஸ்தவக் கல்லூரி ஒன்று எனக்கு இடமளிக்க மறுத்தபோதும் அவர் அது குறித்துக் கவலைப்படாமல் என்னை அரசு கல்லூரியில் கொண்டுவந்து சேர்த்ததையும் இந்தக் கணத்தில் உங்களோடு பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

**முற்காலத்தைவிட இன்று மதவாத அரசியல் பெரிய அளவில் முன்நகர்ந்து இருக்கிறதே, எதிர்காலத்தில் இதன் நிலை என்னவாக இருக்கும்?**

இது பெரிய அளவில் கவலையையும் வருத்தத்தையும் அளிக்கும் ஒன்று. இந்தப் பின்னணியில்தான் இன்று மதவாத பா.ஜ.க அரசு இங்கு வேரூன்றி உள்ளது என்பது ஒரு மிகப்பெரிய கொடுமை. உங்கள் கேள்வியில் நீங்கள் சொல்லியுள்ளதுபோல உலக அளவில் இப்படியான ஒரு சூழல் உருவாகி உள்ளது உண்மைதான். எப்போது தொடங்கி இப்படியான போக்கு தீவிரமாக உருவாகியுள்ளது எனச் சற்று யோசித்துப் பார்த்தோமானால் உலகளவில் சோஷலிசத்தின் வீழ்ச்சிக்குப் பின்தான் இப்படியான மதவெறி உருப் பெற்றுள்ளது என்பதை உணர முடியும்.

இதன் விளைவுகள் எத்தனை கொடுமையாக இருக்கும் என்பதை விளக்க வேண்டியதில்லை. இந்தியத் துணைக் கண்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் சிறுபான்மை மக்களின் ஆலயங்கள், குறிப்பாக முஸ்லிம் பள்ளிவாசல்கள் தகர்க்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. இது தொடர்வது என்பது மிகவும் ஆபத்தான ஒன்று.

**இன்றைய தமிழ்க் கலை இலக்கியச் சூழல் எவ்வாறுள்ளது?**

குறிப்பிட்டுச் சொல்வதற்குப் பெரிதாக ஏதுமில்லை. நமக்கு ஒரு மிகப் பெரிய கலை இலக்கிய வரலாறு உண்டு. அவற்றின் முக்கியத்துவத்தை இளைய தலைமுறைகளுக்கு அளிப்பது அவசியம்.

**சரி. தமிழ், தமிழர்கள், தமிழகம் குறித்து,,,**

தமிழகம் தன்னளவில் ஒரு மிகப்பெரிய நாடு. நீண்ட வரலாறு உடைய ஒன்று. பல மத நம்பிக்கைகள் உள்ள ஒரு நாடும் கூட. இப்படியான ஒரு சூழலில் இன்று மத வெறியர்கள் மக்கள் மத்தியில் வெறுப்பு அரசியலை வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொண்டுள்ளனர். தமிழ் பேசும் நம் எல்லோரையும், இந்த மண்ணின் மக்களாக இதுகாறும் அறியப்படும் எல்லோரையும் மத அடிப்படையில் ஒருவருக்கு ஒருவர் எதிரியாக நிறுத்தும் அவலம் இன்று ஏற்பட்டுள்ளது. பாபர் மசூதி தகர்க்கப்பட்டது மட்டுமின்றி அரசு ஆதரவுடன் இன்று அந்த இடத்தில் ஆலயம் ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது. அப்படி ஒரு சாரர் இரண்டாம்தரக் குடிமக்களாக ஆக்கப்படுவது ஒட்டுமொத்தத்தில் நாட்டுக்கு நல்லதல்ல. இந்நிலையில் தமிழர்கள் எனும் அடையாளத்துடன் தமிழ் பேசும் மக்கள் அனைவரும் தங்களை அடையாளப் படுத்திக் கொள்வது இன்றைய தேவை ஆகிறது. தமிழ், தமிழர்கள் என்கிற அடையாளத்துடன் நாம் எல்லோரும் ஒன்றாவோம்.

**தங்களது பழைய நினைவுகளை எழுதும்போது அற்புதமான புனைவெழுத்துச் சாத்தியம் இருந்தும் ஏன் அதில் நாட்டம் கொள்ளவில்லை. அல்லது சூழல் இல்லை எனக் கருதுகிறீர்களா?**

"அற்புதமான புனைவெழுத்துச் சாத்தியம்" உள்ளவனாக என்னை வாழ்த்தியமைக்கு முதலில் என் மனமார்ந்த நன்றிகள். புனைவு எழுத்துக்களில் நாட்டம் உடையவன்தான் நான். ஐந்தாவது வகுப்புடன் ஒரு கூலித் தொழிலாளியாக மலேசியா சென்று தொழிற்சங்கம் மற்றும் கம்யூனிஸ்ட் கட்சியில் செயல்பட்ட என் தந்தை மிகச் சின்ன வயதிலேயே புனைவு எழுத்துக்களில் என்னை ஈடுபடுத்தினார். என்னுடைய கட்டுரை ஒன்றில் நாடு கடத்தப்பட்ட என் தந்தையின் வளர்ப்பு மகன் ஒருவரைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளேன். அவர் பாப்பாநாடு எனும் என்னுடைய ஊரில் உள்ள பஞ்சாயத்து போர்டில் வேலை செய்தபோது நான் மிகவும் தாராளமாக அங்கு சென்று அங்குள்ள நூலகத்திலிருந்து புத்தகங்களை எடுத்து வருவேன். பெரும்பாலும் ஆங்கில ஆசிரியர்கள் எழுதிய தமிழ் மொழிபெயர்ப்பு நூல்கள்தான் அங்கு அதிகம் இருந்தன. அவற்றை ஆர்வத்தோடு படித்து

வந்தேன். ஆனந்த விகடன், குமுதம் முதலான நூல்கள் வீட்டுக்கு வரும்.

அப்போது ஒரு இதழில் எழுத்தாளர் ஜெயகாந்தனின் ஒரு நீண்ட சிறுகதை வெளிவந்திருந்தது. அதை சுட்டிக்காட்டி அப்பா என்னைப் படிக்கச் சொன்னார். அது “சில நேரங்களில் சில மனிதர்கள்” என நினைவு. அது முதல் நான் ஜே.கேயின் ரசிகன் ஆனேன். அந்தக் காலகட்டத்தில் ஏராளமான நாவல்களைப் படித்துத் தீர்த்தேன்.

எழுதும் முயற்சி என்பது எனது கல்லூரி நாட்களில் உருவானபோது நான் தீவிரமான அரசியல் பார்வை உடையவனாக ஆகியிருந்தேன். பின்னாளில் சி,பி,எம் கட்சியில் நான் இணைந்து செயல்பட்ட போது கட்சி இதழில் ஏராளமான கட்டுரைகள் எழுதினேன். இரண்டு கட்டுரைகள் கட்சி நூல்களாகவும் வெளிவந்தன. இப்படித் தொடங்கியதுதான் என் எழுத்துப் பணி. அரசியல் கட்டுரைகளே ஆனாலும், நீங்களே சொல்லி இருப்பது போல, அவை இலக்கியத் தரத்துடன் அது அமைந்துள்ளது என்றால் அதன் பின்னணி இதுதான்.

**இதுவரையிலான ஒட்டுமொத்த திராவிட இயக்க ஆட்சிகளைப் பற்றிச் சொல்ல முடியுமா?**

பெரிதாகச் சொல்ல ஒன்றுமில்லை. நக்சல்பாரி இயக்கத்தில் செயல்பட்ட இடைக் காலத்தில் அவர்களின் “தேர்தல் பாதை திருடர் பாதை” எனும் முழக்கத்தை ஏற்றிருந்தேன். கடந்த பல ஆண்டுகளாக தேர்தல் பாதையை ஏற்றுக்கொண்ட இடதுசாரிக் கட்சிகளுடன் இணைந்து செயல்பட்டு வருகிறேன். வாக்களிக்கும்போது இடதுசாரிக் கட்சிகளுக்கும் அவை அதரவு அளிக்கும் கட்சிகளுக்கும் வாக்களிக்கிறேன். மற்றபடி என் அரசியல் பார்வைகளை வெளிப்படையாக எழுதி வருகிறேன்.

**பெரியார் நினைத்திருந்த பெண் கல்வி, முன்னேற்றம், சமூகநீதி போன்றவற்றை எட்டிவிட்டோமா?**

பெரியார் நினைத்த அளவு இங்கு மாற்றங்கள் ஏற்படவில்லை. ஆனாலும் நீங்கள் குறிப்பிடும் இந்தத் துறைகளில், பிற இந்திய மாநிலங்களுடன் ஒப்பிடும்போது தமிழகத்தில் சில குறிப்பிடத்தக்க வரவேற்புக்குரிய மாற்றங்கள் இங்கு உருவாகியுள்ளன என்றால் அதற்கான பெருமைகள் பெரியாருக்குத்தான் உரியது. பெரியாரின் புரட்சிகரமான கருத்துக்களுக்கு இணையாக இன்றளவும் இந்தியா முழுவதும் யாரையும் சுட்டிக் காட்டிவிட முடியாது. பெரியாரின் முக்கியத்துவத்தையும், அவரது சிந்தனைகளின் கூர்மையையும் எட்டியவர்கள் இங்கு யாரும் இல்லை. எனிலும் பெரியாரின் புரட்சிகரக் கருத்துக்களை இந்திய அளவில் கொண்டு செல்வதில் நாம் தோற்றுள்ளோம் என்றுதான் சொல்ல வேண்டும்.

**சிறுபான்மை, பெரும்பான்மை மதங்களைப் பொருத்தமட்டில் நீங்கள் ஒருபக்கச் சார்பாளர் என்கிற ஒரு சராசரிக் குற்றச்சாட்டு குறித்து...**

சிரிப்புத்தான் வருகிறது. இது சராசரிக் குற்றச்சாட்டு அல்ல. சராசரியைவிடக் கீழான குற்றச்சாட்டு. சிறுபான்மை மக்களுக்கு ஆதரவாகப் பேசி வருகிறேன் என்கிற பொருளில் இது கூறப்பட்டுள்ளது. இன்று சிறுபான்மை மக்கள் எந்த அளவிற்கு ஓரங்கட்டப்பட்டு பல்வேறு வகைகளில் இரண்டாம் தரக் குடிமக்களாகக் கருதப்படும் நிலை உள்ளது என்பதை நாம் ஒருவருக்கு ஒருவர் விளக்கிக் கொண்டிருக்கத் தேவையில்லை. மனச் சாட்சியுள்ள யாரும் இதை ஏற்க முடியாது.

“நானும் கோமாதாவைக் கும்பிடுகிறவன்தான். ஆனால் என்னுடைய கடவுள் எப்படி இன்னொருவரின் கடவுளாக இருக்க முடியும்?” எனக் கேட்ட மகாத்மா பிறந்த நாடு இது. அந்த மகாத்மாவையே சுட்டுக் கொன்ற நாடுதானே இது என்று நீங்கள் திரும்பிக் கேட்டால் என்னிடம் பதில் இல்லை.

**தமிழகத்தில் கார்ல் மார்க்ஸ் சிலை வைக்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?**

உலகமே கொண்டாடும் மாபெரும் சிந்தனையாளனான கார்ல் மார்க்சுக்கு இதுவரை தமிழகத்தில் சிலை வைக்கப்படாமை மிகவும் வருத்தத்திற்குரிய ஒன்று. இது தொடர்பாக ஒரு குழு அமைத்து கடந்த இரண்டு ஆண்டுகளாக நாங்கள் செயல்பட்டு வருவதை அனைவரும் அறிவார்கள்.

தி.மு.க அரசின் முன் எங்கள் கோரிக்கைகளைப் பலமுறை முன்வைத்திருந்தும் அது குறித்து தி.மு.க தலைமை இதுவரை கண்டுகொள்ளவில்லை. ஒரு இரண்டு நிமிடங்கள் ஒதுக்கி எங்களின் வேண்டுகோளுக்குக் காது கொடுத்துக் கேட்கவும் தலைவர்கள் தயாராக இல்லை. எங்களைக் கூப்பிட்டுக் கேட்காவிட்டாலும் பரவாயில்லை. அரசே முடிவெடுத்து அறிவித்தாலே போதும்.

கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களும் எங்கள் கோரிக்கையை முழுமையாக ஏற்று அரசை வேண்டியுள்ளனர். ஆனாலும் நமது ஆட்சியாளர்கள் மவுனம் காப்பது மிகவும் வருத்தத்திற்குரிய ஒன்று.

காரல் மார்க்சுக்குச் சிலை வைக்கக் கூடாது என யாரும் சொல்லப்போவதில்லை. உரிய நடவடிக்கை எடுக்குமாறு அரசை மீண்டும் வேண்டுகிறோம்.

●

# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம்

வழங்கும்

**மகத்தான படைப்பு இம்மாத வெளியீடாக...**

## சங்க இலக்கிய உரைவேறுபாட்டுக் களஞ்சியம்

**20 தலைப்புகள் - 22 தொகுதிகள்**

**மொத்த விலை: ரூ.9000/-**










**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**

41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.

☎ 044 - 26251968, 26258410, 48601884 www.ncbhpublisher.in | email: info@ncbh.in

**கிளைகள்**

அம்பத்தூர் 044 - 2635 9906, ஸ்பென்ஸர் பிளாசா 044-28490027, மதுரை 0452 - 2344106, 4374106, திருநெல்வேலி 0462 - 2323990, 4210990, திண்டுக்கல் 0451-2432172, கோயம்புத்தூர் 0422 2380554, சேலம் 0427-2450817, ஈரோடு 0424-2256667, கிருஷ்ணகிரி 04343-234387, ஓசூர் 04344 - 245726, ஊட்டி 0423 - 2441743 திருச்சி 0431 - 2700885, தஞ்சாவூர் 04362-231371, புதுக்கோட்டை 04322-227773, விழுப்புரம் 04146-227800, பாண்டிச்சேரி 0413 2280101, வேலூர் 0416-2234495, நாகர்கோவில் 04652 -234990.


சங்க இலக்கிய உரைவேறுபாட்டுக் களஞ்சியம் 4
ஐங்குறுநூறு
முனைவர் ம.லோகேஸ்வரன்


சங்க இலக்கிய உரைவேறுபாட்டுக் களஞ்சியம் 5
பதிற்றுப்பத்து
முனைவர் இரா.மகிழேந்தி


சங்க இலக்கிய உரைவேறுபாட்டுக் களஞ்சியம் 6
பரிபாடல்
முனைவர் ம.லோகேஸ்வரன்


சங்க இலக்கிய உரைவேறுபாட்டுக் களஞ்சியம் 7
கலித்தொகை
முனைவர் மு.முனீஸ்மூர்த்தி


சங்க இலக்கிய உரைவேறுபாட்டுக் களஞ்சியம் 8
அகநானூறு
களிற்றியானை நிரை
தொகுதி - 1
முனைவர் மா.பரமசிவன்


சங்க இலக்கிய உரைவேறுபாட்டுக் களஞ்சியம் 9
அகநானூறு
மணிமிடை பவளம்
தொகுதி - 2
முனைவர் மா.பரமசிவன்


சங்க இலக்கிய உரைவேறுபாட்டுக் களஞ்சியம் 10
அகநானூறு
நித்திலக்கோவை
தொகுதி - 3
முனைவர் மா.பரமசிவன்


சங்க இலக்கிய உரைவேறுபாட்டுக் களஞ்சியம் 11
புறநானூறு
தொகுதி - 1
முனைவர் அ.செல்வராசு


சங்க இலக்கிய உரைவேறுபாட்டுக் களஞ்சியம் 12
புறநானூறு
தொகுதி - 2
முனைவர் அ.செல்வராசு


சங்க இலக்கிய உரைவேறுபாட்டுக் களஞ்சியம் 13
திருமுருகாற்றுப்படை
முனைவர் நித்தியா அறவேந்தன்
முனைவர் இரா.அறவேந்தன்


சங்க இலக்கிய உரைவேறுபாட்டுக் களஞ்சியம் 14
பொருநராற்றுப்படை
முனைவர் அ.செல்வராசு


சங்க இலக்கிய உரைவேறுபாட்டுக் களஞ்சியம் 15
சிறுபாணாற்றுப்படை
முனைவர் அ.செல்வராசு


சங்க இலக்கிய உரைவேறுபாட்டுக் களஞ்சியம் 16
பெரும்பாணாற்றுப்படை
முனைவர் இரா.அறவேந்தன்


சங்க இலக்கிய உரைவேறுபாட்டுக் களஞ்சியம் 17
முல்லைப்பாட்டு
முனைவர் நித்தியா அறவேந்தன்


சங்க இலக்கிய உரைவேறுபாட்டுக் களஞ்சியம் 18
குறிஞ்சிப்பாட்டு
முனைவர் நித்தியா அறவேந்தன்


சங்க இலக்கிய உரைவேறுபாட்டுக் களஞ்சியம் 19
நெடுநல்வாடை
முனைவர் இரா.மகிழேந்தி


சங்க இலக்கிய உரைவேறுபாட்டுக் களஞ்சியம் 20
மதுரைக்காஞ்சி
முனைவர் அ.செல்வராசு


சங்க இலக்கிய உரைவேறுபாட்டுக் களஞ்சியம் 21
பட்டினப்பாலை
முனைவர் இரா.மகிழேந்தி


சங்க இலக்கிய உரைவேறுபாட்டுக் களஞ்சியம் 22
மலைபடுகடாம்
முனைவர் மு.முனீஸ்மூர்த்தி

கட்டுரை

# சித்தாவுக்கு முன்பாகவே இராவணன் உருவாக்கிய சிந்தாமணி மருத்துவம்

டாக்டர் சு.நரேந்திரன்



உலக உயிர்கள் உடலும் உள்ளமும், நலம் பெற்று வாழப் பயன்படும் பொருள் மருந்து. இவ்வகை மருந்துகளைக் காலந்தோறும் தோன்றிய சான்றோர்கள் பதிவு செய்து வைத்துள்ளனர்.

படித்தவர்கள், அனுபவம் மிக்கவர்கள் தயாரித்த மருந்துகளும் உண்டு. வீட்டில் இருக்கும் உணவுப் பொருள்களை மருந்தாக்கும் பாட்டி வைத்தியமும் நாட்டு மக்களிடையே இன்னும் இருப்பது குறிப்பிடத்தக்கன.

மருந்தே உண்ணாமல், நோய் தடுக்கும் முறைகளும் நாட்டில் இருந்துள்ளன. நூறாண்டு காலம் வாழும் முறையை வாய்ப்பாடாக நம் முன்னோர் படைத்துள்ளனர்.

**ஓரடி நடவேன் (உச்சி வெயில்)**
**ஈரடிக் கிடவேன் (ஈரமான தரை)**
**இருந்து உண்ணேன் ( உண்ணும் அளவுமுறை)**
**கிடந்து உறங்கேன் (உறக்கம் வந்தபின் உறங்கும் நிலை)**

உயிரைக் கவருபவனைக் கட்டிப்போடும் ஆற்றல் மனிதனுக்கு உண்டு என்பதான மருந்தில்லா மூச்சுப் பயிற்சியை,

**விட்ட எழுத்தால் விடாத எழுத்தால் கட்டவல்லார்**
**காலனைக் கட்டவல்லார்**

என்று நுணுக்கமாகத் திருமூலர் கூறியுள்ளார்.

**வாயடக்க வாழ்வு: மூச்சடக்க முத்தி**

என்ற மரபுத் தொடர் மருந்தில்லாமல், நோய் அண்டாமல், வாழும் வழியைக் கூறுகின்றது. நோயை மருந்தால் தீர்த்துவிடலாம்; பிணியை நீக்க முடியாது. பிணித்துக் கொள்ளும் என்பது முன்னோர் கண்ட முடிவு.

| | | |
|---|---|---|
| **பிறப்பு** | **-** | **பிணி** |
| **காமம்** | **-** | **பிணி** |
| **பசி** | **-** | **பிணி** |

இவை மூன்றையும் தவிர்க்க முடியாததால் பிணி என்ற சொல்லைப் படைத்துள்ளனர்.

இன்றைய உலகில் ஏராளமான மருத்துவமுறைகள் பல சான்றோர்களால் பதிவு செய்யப்பட்டுள்ளன. சித்த மருத்துவம், மூலிகை வைத்தியம், வீட்டு வைத்தியம் என மக்களின் நோய்களைத் தீர்க்கக் கூடியதாக நமது பாரம்பரிய மருத்துவ முறைகள் இருந்துள்ளன. இருப்பினும், சித்த மருத்துவத்திற்கு மிகவும் முந்தைய காலத்தில் தமிழர்களின் மருத்துவ முறையாக இருந்தது இராவண சிந்தாமணி மருத்துவம்தான். இந்த சிந்தாமணி மருத்துவம் இராவணன் உருவாக்கிய மருத்துவ முறையாகும். வரலாற்றில் சித்தரிக்கப்பட்ட காமுக இராவணனின் கதாபாத்திரமே நம்மில் பெரும்பாலோருக்கு கண்முன் வந்து நிற்கும்.

இராவணன் மருத்துவம் தவிர இசை, வானியல், அரசியல். மனோதத்துவம், மந்திரம், ஜோதிடம், அறிவியல், ஓவியம், இலக்கியம் முதலான பத்துக்கலைகளில் நிகரற்று விளங்கியதால் 10 தலை இராவணன் எனக் கூறுவோரும் உண்டு.

மக்கள் நலமாக வாழ ஆய்வு செய்து நோய்வரும் காரணம், அதன் பெயர்கள், தீரும் நோய் வகைகள், தீரா நோய்ப் பிரிவுகள், அதன் குணங்கள், அதற்குரிய மருத்துவம் மற்றும் பொது மருந்துகள் ஆகியவைகளை "நீ தானம்", எனப் பெயரிட்டு இராவணன் நீ சிந்தாமணி மருத்துவம் என்னும் நூலைப் படைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இராவண மருத்துவத்திற்குப் பின்னர் தோன்றிய சித்த மருத்துவத்தில் அக மருந்துகள் 32, புற மருந்துகள் 32 தான் உள்ளன. ஆனால் இராவண சிந்தாமணி மருத்துவத்தில் புற மருத்துவ முறைகள் 74. மேலும் அக மருத்துவங்கள் 60க்கும் மேலும் கூறப்பட்டுள்ளன. மயங்கிய நிலைக்குக் கூட மருத்துவம் இதில் கூறப்பட்டுள்ளது.

சிந்தாமணி மருத்துவத்தில் மூலிகை குறைவாகவும், கடைச்சரக்குகளின் பொருள் பண்பு ஆகியவை விளக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்துடன் மூலிகை அகவழி எனும் மிகப் பெரிய நிகண்டும் உள்ளது. மேலும் மருந்தில்லா மருத்துவ முறையான தொடுவர்ம சிகிச்சை, தட்டுவர்ம சிகிச்சை, வர்ம அடங்கல் முறைகளும் இதில் அடங்கி உள்ளன. மொத்தத்தில் இராவணன் 27 நூல்களைப் படைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

சித்தர் மருத்துவ முறைகளில் திடீர் விபத்துக்கான வர்ம சிகிச்சை முறைகள் இல்லை. ஆனால் சிந்தாமணியில் விபத்துக்கான சிகிச்சை முறைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. முதுகெலும்பு வளைவு, இடுப்பு எலும்பு தேய்மானம், எலும்பு முறிவு, மூளை இரத்தக்கசிவு போன்ற நோய்களுக்கும் இராவண மருத்துவம் தீர்வு சொல்லி இருப்பது குறிப்பிடத்தக்கது.

குழந்தை மருத்துவத்துக்காக, "மதலை வாகடம்", என்ற மருத்துவ நூல் இராவணனின் படைப்பு. இதுபோல் இராவணன் படைத்த நாடி நூல் வடமொழியில் "சிறீ இராவணா நாடி ஹிருதா" என்று வெளிவந்துள்ளது. இந்நூலை தமிழில் மொழி பெயர்த்து சென்னை புதிய புத்தக உலகம் என்ற பதிப்பகம் "இராவண நாடி பரிட்சை" என்ற பெயரில் வெளியிட்டுள்ளது.

இதேபோல் இரா. வாசுதேவன் பதிப்பித்திருக்கும் மற்றொரு நூல் இரச ராச சிந்தாமணி. இந்நூல் முழுக்க முழுக்க இரசத்தை மூலப்பொருளாகக் கொண்ட மருந்துகளைப் பற்றிக் கூறும். சுமார் 120 ஆண்டுகளுக்கு முன்பு தமிழ், மலையாளம். சமஸ்கிருதம் ஆகிய மூன்று மொழிகளிலும் இந்நூல் எழுதப்பட்டிருக்கிறது.

தீநீர் அர்க்க பிரஹாநீர் எனும் இராவணன் எழுதிய பலநூறு ஆண்டுகளுக்கு முந்தைய நூல் மூலிகையிலிருந்து சத்தைப் பிரித்தெடுக்கும் முறையை விவரிக்கிறது. இது ஹோமியோ டாக்டர் ஹானிமேனின் மருத்துவ முறையை ஒத்தது. ஆனால் இராவணின் அர்க்க வைத்திய முறையில் எந்த மூலிகைகளோ, மருத்துவப்பொருட்களோ ஆல்கஹாலில் ஊற வைக்கப்படுவதில்லை. ஆனால் நேரடியாக அந்த மருந்துப் பொருள்களில் இருந்து தயார் செய்யப்பட்ட மருந்துப் பொருள்களின் சத்து மட்டும் பிரித்தெடுக்கப்படுகிறது. இவைகளை ஆங்கில மருந்துகள் போல் நீண்ட காலம் பாதுகாக்க இயலும். இதுபோன்ற மருந்துகள் உட்புற பயன்பாட்டிற்காக நறுமணத் தாவரங்களில் இருந்து வடிகட்டிகளைப் பிரித்தெடுப்பதற்கான நிலையான இயக்க முறைகளை இந்நூல் விவரிக்கிறது. இதுபோல் மூலிகை வேர்களின் சக்திகளையும், அவற்றின் மூலம் குணப்படுத்தும் நோய் சிகிச்சை முறைகளையும் அர்க்க சாஸ்த்ரா என்ற நூல், காயங்களை உடனடியாகக் குணப்படுத்தக்கூடிய







சிந்துரம், மருத்துவம். அத்தியாவசிய எண்ணெய்களின் பல்வேறு சிகிச்சைகளைப் பற்றியும் கூறுகிறது.

தமிழ் மருத்துவ முறைகளில் சூரணம், செந்தூரம், பஸ்பம், தைலம், மூலிகை என்று பல முறைகள் பயன்பாட்டில் இருந்தாலும் அர்க்கம் எனும் மருந்தின் சத்தைப் பிரித்து எடுத்துப் பயன்படுத்தும் முறை தீங்கற்றது. அதேசமயம் வீரியம் கொண்டதாகக் கூறப்படுகிறது.

இப்பொருட்களில் ஆல்கஹால் ஊற்றி வைக்கப்படுவதில்லை. ஆனால் அந்த மருத்துவப் பொருட்களையே அர்க்கமாக்கும் அதாவது வாட்டி எடுத்துப் பாதுகாக்கிறது. அதையே, “ஒலியோரெசின்”, அல்லது “எஸ்ஸென்சியல்” ஆயில் எடுக்கும் முறை என்கிறது, இப்போதைய விஞ்ஞானம்.

இந்நூல்களைத் தவிர ஆண், பெண்களின் உடல் ரீதியான வெளிப்படையான நோய்களுக்கும், பிறப்புறுப்பில் ஏற்படும் நோய்களுக்கும், அதற்குண்டான மருத்துவ முறைகளைக் கூறும் அர்க்க பரிக்ஷா என்ற நூலையும் மனித உடம்பிலுள்ள நரம்புகளைப் பற்றிய சிகிச்சை முறைகளைக் கூறும் “நாடிப்ரிக் ஷா, நாடி விஜன்னா” ஆகிய நூல்களையும் இராவணன் படைத்துள்ளார்.

அவர் தனது அறிவார்ந்த படைப்புகளின் சிறந்த தொகுப்பான “இராவண சம்ஹிதா” என்ற மருத்துவ நூல் குறிப்பிடத்தக்கது. இது ஆயுர்வேத அறிவியலைப் பற்றி பேசுகிறது.

மேலும், மனிதர்கள் தங்களது உடம்பை எப்போதும் நலமாக வைத்துக் கொள்ள ஒரு சில மருந்துகளைத் தினமும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் இராவணன் தன் மருத்துவ முறையில் கூறியுள்ளார். நாம் உண்ணும் உணவில் மூன்று பொருட்களையும் அவற்றுடன் ஐந்து வேர்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்கிறார்.

இதனை, “தூணபகா” என்பர். “து” என்றால் மூன்று. “பகா” என்றால் ஐந்து. அம்மருந்துப் பொருள் வேறொன்றுமல்ல. தமிழர்களின் உணவுப்பொருட்களில் முக்கிய பங்கு வகிக்கும் குறுமிளகு, இஞ்சி, பூண்டு இம்மூன்றும்தான். ஐந்து வேர்கள் கண்டங்கத்திரி, சிறுநெருஞ்சி, சிறு வழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி ஆகும். இதனைச் சிறு பஞ்சமூலம் என்பர். இலங்கையில் இன்றும் இந்த உணவுப் பழக்கம் பின்பற்றப்பட்டு வருகிறது. மேலும் கொத்தமல்லி, சீரகம், கருஞ்சீரகம், கருவாப்பட்டை (இலவங்கப்பட்டை), மிளகு என இந்த ஐந்து பொருட்களையும் உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் இராவணன் கூறுகிறார்.

வடமாநிலங்களில் தற்போதும் “சீதாஹோலி” என்ற உணவுப் பண்டத்தைக்

குழந்தைகளுக்குக் கொடுப்பது வழக்கம். குழந்தைகளுக்கு வயிற்றுப்போக்கு ஏற்படும்போது சத்துக்குறைபாட்டைப் போக்கி இந்த சீதாஹோலியை உண்ணக் கொடுப்பார்கள். இதுவும் இராவணன் தயாரித்தது.

இராவணனின் சிந்தாமணி மருத்துவமுறையில் தமிழகத்தின் தென் எல்லையான கன்னியாகுமரியில் இன்றளவும் சிந்தாமணி வைத்திய சாலைகள் இயங்கி வருகின்றன.

அண்மைக் காலத்தில் இராவண மருத்துவம் குறித்து ஆய்வு செய்து நடைமுறைப்படுத்தி வருபவராகிய குழித்துறை மருத்துவர். கொ.பா. புட்பராசு, இராவணன் சுகாதாரக் களஞ்சியம், நச்சு முறிவு மருத்துவம், தமிழ் மருத்துவத் தொக்கன முறைகள், அவசரக்கால புற மருத்துவ முறைகள், மங்கையர் மருத்துவம் ஆகிய நூல்களை பதிப்பித்து வெளியிட்டுள்ளார். மேலும் இவருடைய முயற்சியில் மதுமேக நிதானம், மஞ்சள் காமாலை ஆகிய நூல்கள் வெளிவந்துள்ளன.

இவைகளுடன் பல நோய்களுக்கான பயிற்சியும் அளிக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதில் குறிப்பிடத்தக்கது இவர் சிந்தாமணி மருத்துவத்திற்கும் சித்த மருத்துவத்திற்குமிடையேயுள்ள வேற்றுமை ஒற்றுமைகளை பட்டியிலிடுகிறார். அதில் மிக முக்கியமான வேற்றுமைகள் சிந்தாமணி மருத்துவம் பிறமொழி கலவாது தூய தனித்தமிழ் மொழியில் இயற்றப்பட்டது. உள்ளதை உள்ளபடியே அறிவியல் முறையில் இயற்றப்பட்டுள்ளது. தமிழர்களின் மருத்துவ அறிவியல் கலையில் இது முதற்கட்ட மற்றும் இரண்டாம் கட்ட மருத்துவமாகும். உலகில் முதன் முதலாக அறுவை மருத்துவத்தை அறிமுகம் செய்த மருத்துவமாகும். எலும்பு முறிவு, நரம்பு சிகிச்சை முறைகள் நூல் ஆதாரத்துடன் முறையாக உள்ளன. கடல் கொண்ட குமரிக் கண்டத்தோடு சேர்ந்த யாழ்ப்பாணத்தில் தோன்றிய ஒரு தனித்தமிழ் மருத்துவ அறிவியல் கலை. அவசர, நாட்பட்ட நோய்களுக்கான பரிகாரங்கள் உள்ளன. பாம்பின் நச்சு நேரடியாகச் சென்னீரில் கலப்பதால் நச்சு முறிவு மருந்தை நேரடியாக உதிரத்தில் செலுத்தும் முறை உள்ளது என்று கூறும் இம்மருத்துவர் இத்துடன் பல வேற்றுமைகளையும் பட்டியலிட்டுள்ளார்.

இவருடைய கூற்றுப்படி இராவணன் எழுதிய இந்த சிந்தாமணி மருத்துவ முறையே குமரி மாவட்ட ஆசான்களால் பின்பற்றப்பட்டு தற்போதைய சித்த மருத்துவமாக உருப்பெற்றது என்றும், இப்போதும் நெல்லையில் செய்யும் சித்த மருத்துவ முறைகளில் இருந்து மாறுபட்டது குமரி மாவட்ட ஆசான்கள் பின்பற்றும் சித்த மருத்துவம் என்றும் தெரிவித்துள்ளார்.



இராவண மருத்துவ முறைகள் வட இந்தியாவில் நடைமுறையில் உள்ளதால் “இராவண சம்ஹிதா” என்னும் பெயரில் இரு பெரும் பிரிவாகத் தொகுக்கப்பட்டு, வடமொழியில் இந்நூல் வெளிவந்துள்ளது. இதுமட்டுமின்றி இராவணன் உருவத்தை அட்டைப் படமாகக் கொண்ட பல மருத்துவ நூல்களும் இந்தியில் வெளிவந்துள்ளன.

இந்தியில் இராவணன் மருத்துவம் வெளிவந்தது போல் சிங்களம், மலையாளம், தெலுங்கு ஆகிய மொழிகளிலும் வெளிவந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**முடிவுரை**

இராவணனின் மருத்துவப் பங்களிப்புகள் குறித்து வரலாற்று ஆய்வாளர்கள் ஆய்வு செய்ய வேண்டும். தமிழகத்தில் அழிந்து வரும் இம்முறை சில இடங்களில் மட்டுமே உள்ளது. தமிழக அரசு சித்த மருத்துவக் கல்லூரி பாடத்திட்டத்தில் இதனைச் சேர்க்க இம்முறை சிறந்ததாக உள்ளதா? என்பதைச் சீர்தூக்க ஒரு குழு அமைக்க வேண்டும். மேலும் இராவணன் எழுதிய நூல்களைத் திரட்டி ஆராய்ந்து வெளிவர முயற்சிகளைத் தொடங்க வேண்டும். அப்போது நம் தமிழ் மருத்துவம் மேலும் சிறக்கும் என்பதில் ஐயமில்லை.

●

கட்டுரையாளர், எழுத்தாளர், சென்னை டாக்டர்
எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழக
சிறப்புநிலைப் பேராசிரியர்.

# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடுகள்




₹ 180/-




₹ 20/-




₹ 120/-




₹ 170/-




₹ 230/-




₹ 500/-

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**

41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.

☎ 044 - 26251968, 26258410, 48601884 www.ncbhpublisher.in | email: info@ncbh.in

கிளைகள்

அம்பத்தூர் 044 - 2635 9906, ஸ்பென்ஸர் பிளாசா 044-28490027, மதுரை 0452 - 2344106, 4374106, திருநெல்வேலி 0462 - 2323990, 4210990, திண்டுக்கல் 0451-2432172, கோயம்புத்தூர் 0422 2380554, சேலம் 0427-2450817, ஈரோடு 0424-2256667, கிருஷ்ணகிரி 04343-234387, ஓசூர் 04344 - 245726, ஊட்டி 0423 - 2441743 திருச்சி 0431 - 2700885, தஞ்சாவூர் 04362-231371, புதுக்கோட்டை 04322-227773, விழுப்புரம் 04146-227800, பாண்டிச்சேரி 0413 2280101, வேலூர் 0416-2234495, நாகர்கோவில் 04652 -234990.



உரை

# தமிழ்ப் பொதுவெளிக்கு தாராபுரம் தந்த அறிவுக்கொடை

# எஸ்.வி.ராஜதுரை

வீ.அரசு

எல்லோருக்கும் அன்பான வணக்கங்கள். எஸ்.வி.ஆர். பற்றிப் பேசுவது மிகவும் மகிழ்ச்சியான ஒன்று. இப்படியான ஏற்பாட்டை சுந்தரும் வேறு பலரும் சேர்ந்து செய்ததற்கு மகிழ்ச்சி அடைகிறேன். நான் எப்படி எஸ்.வி.ஆர்.-ஐ வாசிக்கிறேன்? அல்லது பார்க்கிறேன்? என்றால் தமிழ்நாட்டு சமூக வரலாற்றினூடே இந்த மனிதர் என்னென்ன வேலைகளைச் செய்தார்? அது தமிழ்ச் சமூக வரலாற்றினுடைய ஒரு பகுதியாக எப்படிச் செயல்பட்டிருக்கிறது? அதில் அவருடைய பங்களிப்பு என்ன? என்கிற விவரணப் பூர்வமான தகவல்களை உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன். அந்தத் தகவல்கள் குறித்த விளக்கங்களை செய்வதற்கு இந்த நேரத்தில் வாய்ப்பில்லை. அதனால் எஸ்.வி.ஆர். என்று சொல்லக்கூடிய ஒரு மனிதருடைய 1960கள் தொடக்கம் இன்று வரை ஒரு அறுபது ஆண்டுகள் ஆகிறது. இந்த ஆண்டுகளில், இந்த மனிதர் தன்னுடைய இருப்பை எந்தெந்த மாதிரியான வடிவங்களில் பதிவு செய்திருக்கிறார் என்று ஒரு சிறிய கணக்கெடுப்பு பண்ணலாமென்று நினைத்தேன்.

அப்படிப் பார்க்கிற பொழுது, எனக்கு மூன்று செய்திகள் முக்கியமானவை. அதில் ஒன்று தமிழ்ச் சமூகத்திற்குள் வந்த மார்க்சியம், அந்த மார்க்சியத்தின் மீது இருந்த அவருக்கான ஈடுபாடு, அது சார்ந்து அவருடைய வாழ்க்கை. இரண்டாவதாக பெரியாரியம், அதோடு சார்ந்த அவருடைய வாழ்க்கை. மூன்றாவது தனிமனித வாழ்க்கை சம்பந்தப்பட்ட, குறிப்பாக, தருமபுரி மாவட்டத்தில் குருவிகளை சுடுவதைப் போல நக்சல்பாரி இயக்கத்தைச் சார்ந்த தோழர்களையெல்லாம் சுட்டுக்கொன்ற காலங்களில் அவருடைய பங்களிப்பு, அது பற்றி விரிவாகப் பேசவில்லை. ஆனால் அது அவருடைய வாழ்க்கையில் மிகவும் முக்கியமான பகுதி.

வெங்கட் சாமிநாதன் பற்றிய கட்டுரை ஒன்றில், எஸ்.வி.ஆர் டெல்லிக்குப் போய் பேராசிரியர் ரவீந்திரன் வீட்டில் தங்கி இருந்த பொழுது, 'ரவீந்திரன் காலை சாப்பாடும் இரவு சாப்பாடும் வாங்கிக் கொடுத்துவிடுவார். நண்பகல் சுப்ரீம் கோர்ட் போய், நான் அங்குச் செயல்படுவேன். அப்பொழுது மதிய உணவு என்பது சுப்ரீம் கோர்ட்டில் கிடைக்கக்கூடிய குடிநீர் மட்டும் தான்,' என்று எழுதி இருக்கிறார். அந்த அளவுக்கு அவர் பொருளாதார ரீதியான சிக்கல்களையும் "தான் எப்படி எதிர்கொண்டேன்; வாழ்ந்தேன்" என்பது பற்றிய செய்திகளையும் பதிவு செய்திருக்கிறார்.

முதல் கட்டத்தில், மார்க்சியம் எனும் தத்துவ மரபு தமிழ்ச் சூழலில் தொழிற்படுகிற முறையினூடாக அவர் அதை எப்படி உள்வாங்குகிறார்? அதை எப்படி வெளிப்படுத்த விரும்புகிறார்? அதற்காக அவர் என்ன செய்தார்? அது ஒரு முக்கியமானதாக எனக்குப் படுகிறது. கடந்த அறுபது ஆண்டுகளில் எஸ்.வி.ஆர் என்ன பண்ணி இருக்கிறார் என்று ஒட்டுமொத்தமாக சேர்த்து வைத்து, சமகால வரலாற்றோடு அதை இணைத்துப் பார்க்கிறபொழுதுதான் எஸ்.வி.ஆருடைய செயல்கள் குறித்த ஒரு பிரம்மாண்டம் நமக்குத் தெரியும்.

எஸ்.வி.ஆர். அறுபதுகளின் இறுதியில் தமிழ்ச் சூழலில், இந்திய சூழலில் உருவான மார்க்சிய, லெனினிய இயக்கத்திற்கு, திராவிட இயக்கத்தில் செயல்பட்ட நிறைய அறிவாளிகள், பேராசிரியர்கள் என பெரிய குழுவே போனது என்பது வரலாறு. அதைப் பற்றி விரிவாகச் சொல்லமுடியும். இன்குலாப் போன்றவர்கள் இதைப் பற்றி நிறைய எழுதி இருக்கிறார்கள். அந்தக் குழுவைச் சார்ந்தவர்தான் எஸ்.வி.ஆரும். திராவிட இயக்கச் சிந்தனை மரபோடு, செல்வாக்கோடு வளர்ந்து வருகிற காலங்களில், இடதுசாரி சிந்தனை மரபுகளை உள்வாங்குகிற சூழல் உருவானது. மார்க்சிய லெனினிய மரபு அறுபதுகளின் இறுதி, எழுபதுகளில் உச்சக்கட்டத்திற்குப் போகிற பொழுது எஸ்.வி.ஆர். போன்ற இளைஞர்கள், அந்த அலை சார்ந்த சிந்தனை மரபுக்குள் தங்களைத் தவிர்க்க முடியாமல் இணைத்துக்கொள்கிற வரலாறு, தமிழ்நாட்டில் நடந்திருக்கிறது. தமிழ் ஆளுமைகள் பல பேரை அப்படிச் சொல்லலாம். அவர்கள் இன்று அப்படித் தொடர்கிறார்களா என்பது வேறு செய்தி. ஆனால் அன்றைக்கு அது நடந்தது.

அப்படி நடக்கிறபொழுது, இங்கு இரண்டு செய்திகளைப் புரிந்து கொள்ளவேண்டும். ஒரு மனிதன் தத்துவார்த்த மரபு சார்ந்த நடைமுறை வாழ்க்கையில் கட்சி, அமைப்பு இவற்றோடு செயல்படுகிற, வாழ்முறை என்பது ஒன்று. இன்னொன்று அந்தத் தத்துவம் சார்ந்து படிப்பது, எழுதுவது, பதிவு செய்வது, வெளியிடுவது என்பது. இவை இரண்டும் என்றைக்குமே ஒரே படிநிலையில் செயல்படாது. கள ஆய்வாளராக இருக்கக்கூடிய பலருக்கு எழுதுவது வருவதில்லை. அதேபோன்று நிறைய எழுதிக் குவிக்கிற செய்திகள் உள்ளவர்கள் கள ஆய்வாளர்களாக இருப்பார்களென்று சொல்வதற்கில்லை. இரண்டும் இணைந்து இருக்கக்கூடியவர்கள் குறைவானவர்கள்தான். என்னைப் பொறுத்தவரை எஸ்.வி.ஆரின் கள ஆய்வு ஒரு பக்கமும் எழுத்துப் பணி இன்னொரு பக்கமும் என்று சொல்லலாம். இந்தப் பின்புலத்தில் அவருடைய பதிவுகள் மிக அதிகமாக இருப்பதாக எனக்குப் படுகிறது.

எழுபதுகளில் தமிழ்நாட்டுச் சூழலில், புலமைத்துவப் பின்புலம் என்று சொல்கிறபொழுது, என்ன நடந்தது என்று சொன்னால், திராவிட இயக்க மரபிலிருந்து இடதுசாரி மார்க்சிய லெனினிய நக்சல்பாரி இயக்கத்துக்கு பல இளைஞர்கள் வந்தனர். அதேபோன்று இங்கு இருக்கக்கூடிய ஆதிக்க சாதிப் பார்ப்பனியப் பின்புலமுடைய, ஐரோப்பிய பின்புலத்தில் வரக்கூடிய பல்வேறு விதமான அறிவுப் புலங்களை உள்வாங்கிய - பின் காலனிய மரபு உருவாயிற்று என்று சொல்வார்கள். அந்தக் காலம் என்பது, உலகம் முழுவதும் புதிய அறிவு சார்ந்த கருத்து மரபுகளைக் கொண்டுவந்து ஒவ்வொரு சமூகத்திலும் சேர்த்த காலம். அந்தக் காலம் சார்ந்து ஐரோப்பிய பின்புலத்தில் நடந்த சிந்தனை மரபுகளெல்லாம், நம்முடைய மரபுகளோடு இணைத்துப் பேசுகிற பொழுது, அதில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் மார்க்சும், ஏங்கெல்சும் உருவாக்கித் தந்த அந்த மரபு, லெனின் உள்வாங்கிய மரபு, மாவோ உள்வாங்கிய மரபு, சேகுவேரா உள்வாங்கிய மரபு ஆகியவை வேறு வேறு என்பது நமக்குத் தெரியும். ஆனால் நம்மைப் போன்ற மூன்றாம் உலக ஒடுக்கப்பட்ட நாடுகளில் இந்த மரபு உருப்பெறுகிற பொழுது, இது எப்படியெப்படியெல்லாம் பரிமாணங்களைப் பெறுகிறது என்ற கட்டம் தான் அன்றைய எழுபதுகள்.







எழுபதுகளில் இங்கு செயல்பட்டுக் கொண்டிருந்த குறிப்பாக பார்ப்பனியப் பின்புலத்தில் உருவாகிய குழு என்பது ஒரு பக்கம். இன்னொரு பக்கம் மார்க்சியக் கருத்து சார்ந்து உருவான ஒரு மரபு. இத்தன்மை ஐம்பதுகளிலிருந்தே தமிழ்ச் சூழலில் வளமான மார்க்சியப் படிப்பும் எழுத்தும் சார்ந்த எழுத்தாளர்கள் உருவான வரலாறு என்பது உண்டு. இந்த இரண்டு குழுக்களின் மோதல் வடிவமாக எழுபதுகளில் உண்டான பல செயல்களைச் சொல்லலாம். ஒன்று வானம்பாடி இயக்கம் போன்ற கவிஞர்கள். இன்னொன்று வானம்பாடிக் கவிஞர்கள் சார்ந்த கருத்து நிலைகளை எதிர்த்த கசடதபற குழு. இப்படியான குழுவினர் இருந்த கட்டம். இதில் எஸ்.வி.ஆர். கசடதபற என்று சொல்லக்கூடிய புலமைத்துவ மரபு சார்ந்த குழுவில் தொடர்புடையவராக இருந்தார் என்று கருத முடியும்.

கசடதபற பத்திரிகையை நடத்தியவர்களில் எஸ்.ராமகிருஷ்ணனும் அடங்குவார். இந்த கிரியா ராமகிருஷ்ணன்தான் எஸ்.வி.ஆர். எழுத்துக்கு மதிப்பளித்து செயல்பட்டவர். எனவே அவர் ஒரு பதிப்பகத்தைத் தொடங்கி நூல் கொண்டு வர வேண்டும் என்கிறபோது எஸ்.வி.ஆரின் 'எக்ஸிஸ்டென்ஷியலிசம்' புத்தகமாக வருகிறது. ஆனால் எஸ்.ராமகிருஷ்ணனோ அதைச்சார்ந்த மரபில் இருக்கக்கூடிய நண்பர்களோ மார்க்சியத்தை உள்வாங்கியவர்களாகவோ அல்லது அதை மதிப்பவர்களாகவோ சொல்ல முடியாது. ஆனால் அவர்களிடம் இன்னொரு பார்வை இருந்தது. மார்க்சியம் சம்பந்தப்பட்ட உலகம் தழுவிய அளவில் வரக்கூடிய புதிய புதிய விமர்சனங்களைத் தங்களுடைய பத்திரிகைகளிலும் பேச்சுகளிலும் கொண்டுவரவேண்டும், எழுத வேண்டும் என்று திட்டமிட்டுக் கசடதபற -வில் செய்தார்கள். சோவியத் ரஷ்யா நிகழ்வுகளை விமர்சனம் செய்யும் கட்டுரைகளை கசடதபற பத்திரிகையில் விரிவாகப் பதிவு செய்கிறார்கள். அந்தக் கட்டுரைகளை வாசிக்கிற மரபிலிருந்துதான் எஸ்.வி.ஆரைப் பார்க்க முடிகிறது.

மேற்குறித்த எழுபதுகளின் பின்புலத்தில் மார்க்சியத்தை அதன் வேறு சொல்லாடல்களிலும் நாம் பேச முடியும், எழுத முடியும் என்ற கண்ணோட்டம் வருகிற பொழுதுதான் 'இருத்தலியல்', *(Existentialism)* 'அந்நியமாதல்' போன்ற கருத்தாக்கங்களும் மார்க்சியம் பேசுகிறவர்களுக்கு முக்கியமான களம் என்ற ஒரு உரையாடல் தமிழ்ச் சூழலுக்குள் வருகிறது. அதற்கு முக்கியமான காரணம் கோவை ஞானி, எஸ்.என்.நாகராஜன் ஆகியோர். இந்தக் குழுவோடு எஸ்.வி.ஆர். சேர்ந்து செயல்பட்ட அந்த மரபு, பின்புலமாக இருக்கிறது. கிளாசிக்கல் மார்க்சியம் என்று சொல்லக்கூடிய மார்க்சிய சொல்லாடல்களிலிருந்து வேறு வகையாக மார்க்சியத்தைச் சார்ந்து விவாதிக்கக்கூடிய கருத்து நிலைகளைப் பற்றியும் பேச வேண்டும், எழுத வேண்டும் என்ற ஒரு உந்துதல் அவர்களுக்கு உருவாகியிருந்தது. அதன் வெளிப்பாடாகத்தான் கிரியா ராமகிருஷ்ணன் வெளியிட்ட எக்ஸிஸ்டென்ஷியலிசம் 1975-இல் எஸ்.வி.ஆரின் முதல் புத்தகமாக வெளிவருகிறது.

எஸ்.வி.ஆர் அந்த நூலில் சொல்லுகிறார். ஐரோப்பிய பின்புலத்தில் இரண்டு தன்மைகள் ரொம்ப முக்கியமாக உருப்பெறுகிறது. ஒன்று கிரேக்க மரபு சார்ந்த அறிவுப் பாரம்பரியம், அந்த கிரேக்க மரபு தான் உலகம் முழுக்க - ஐரோப்பிய - அமெரிக்க எல்லாச் சூழல்களிலும் உருவான அறிவுப் பாரம்பரிய மரபு. அது அரிஸ்டாட்டில், பிளாட்டோவில் இருந்து உருவாகி வருகிற மரபு. இன்னொரு பக்கம் யூதர்கள், யூதர்கள் உருவாக்கக்கூடிய நம்பிக்கை, இந்த நம்பிக்கை சார்ந்த சமயம், சமயம் சார்ந்த உரையாடல், இந்த இரண்டு மரபும் வருகிறது. இந்த இரண்டு மரபினுடைய உரையாடலை இணைத்துச் செய்யக்கூடிய ஒரு வேலையை எக்ஸிஸ்டென்ஷியலிஸ்ட் என்று சொல்லக்கூடிய இருத்தலியல் சார்ந்த மனிதர்கள் உரையாடத் தொடங்குகிறார்கள். வெறுமனே கிரேக்க சிந்தனை மரபுக்கு மட்டும் தாங்கள் சொந்தக்காரர்கள் இல்லை; சமய நம்பிக்கை மரபு சார்ந்த செய்திகளைப் பற்றியும் பேச வேண்டும் என்கிற நிலை உருவானது.

அந்த நூலின் முன்னுரை என்கிற முதல் பகுதியிலே எஸ்.வி.ஆர். எழுதுகிற அந்த வரிகள் பின்கண்டவாறு அமைகிறது. "மனித வாழ்க்கை உருவாக்கிய படுமோசமான நிலைகளின் எல்லைக்குச் சென்று பார்த்த பிறகு இறுதி துயரத்தில் மூழ்கிவிடாமல் புதிய பரிகாரத்தை உருவாக்க முனைந்தவர்களே இந்த எக்ஸிஸ்டென்ஷியலிஸ்ட்" என்று சொல்கிறார். இந்த வாழ்க்கை, வாழ்க்கையில் கிடைக்கக்கூடிய பல விஷயங்கள், இதில் இருக்கிற உரையாடல்கள், இதில் மார்க்சியம் என்ன சொல்லுகிறது என்பதைப் பற்றி பேசக்கூடிய சிந்தனை மரபைச் சார்ந்தவர்கள், குறித்த உரையாடல்கள் ஆகியவை இடம்பெறுகின்றன. ஒரு விஷயத்தை நாம் புரிந்து கொள்ளவேண்டும். உலகத்தில் எக்ஸிஸ்டென்ஷியலிசமாக இருக்கட்டும், அந்நியமயமாதலாக இருக்கட்டும், பிறகு உருவான பின்நவீனத்துவ மரபுகளாக இருக்கட்டும், இப்படி எல்லா சிந்தனை மரபுகளையும் பேசியவர்கள் மார்க்சிய அறிஞர்கள்தான் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. மார்க்சியம் படித்தவர்கள், அதை உள்வாங்கியவர்கள், அந்தப் பின்புலத்தில் இருந்தவர்தான் செய்திருக்கிறார்கள் என்று சொல்லலாம். வேறு தத்துவ மரபு இங்கே என்ன உருவாகி இருக்கிறது? இன்னொரு மரபு சமயம்தான், மதம்தான், நம்பிக்கைதான், அந்த மரபுக்கு மாற்றான மரபுதான் மார்க்சியம். இது உலகம் அறிந்த விஷயம். எனவே இந்த இரண்டு மரபுகளுக்கு இடையிலான ஊடாட்டத்தில் இருத்தலியல் சார்ந்த விஷயத்திற்குள் இருந்து மார்க்சியம் சார்ந்த பயணத்தை எஸ்.வி.ஆர். தொடங்குகிறார்.

அந்தக் காலத்தில் அவருக்கு இருந்த மார்க்சிய ஈடுபாட்டில், ஒரு சின்ன புத்தகம் எழுதி இருக்கிறார். அது ஒரு நல்ல புத்தகம். 'மார்க்சியம் ஒரு அறிமுகம்' என்று 1975-இல் எக்ஸிஸ்டென்ஷியலிசம் எழுதிவிட்டு 1977-இல் மார்க்சியம் ஒரு அறிமுகம் என்கின்ற ஒரு குட்டி புத்தகம், அதை மனோ என்கிற பெயரில் வெளியிட்டிருக்கிறார். அதில் மார்க்சினுடைய மூலதனம், உபரி லாபம், அது சம்பந்தப்பட்ட சரக்கு, உற்பத்தி, விநியோகம் சார்ந்து உருவாக்கக்கூடிய செவ்வியல் மார்க்சிசத்தையெல்லாம் வகுப்பு எடுப்பது போன்று எழுதி வெளியிடுகிறார். அவருடைய நிலைப்பாடு என்பது மார்க்சியம். அதே சமயத்தில் உலகம் தழுவிய அளவில் அந்த தத்துவ மரபு சார்ந்து பேசக்கூடிய வேறு விஷயங்களை வெளிக்கொண்டு வருவது என்கிற அந்தப் பயணத்தைத் தொடங்குகின்றார். இந்தப் பயணம் 1983-இல் அந்தப் புத்தகத்தையே மிக விரிவாக விரித்து எழுதுவதாக அமைகிறது. தொடக்கத்தில் சிறிய அளவில் எழுதிய இந்தப் புத்தகத்தைப் பிறகு 1983-இல் அதே கிரியா பதிப்பகத்தின் மூலமாகப் பெரிய அளவிலான புத்தகமாக உருவாக்குகிறார்.

இந்த சமயத்தில் 'பரிமாணம்' என்ற ஒரு பத்திரிகை வருகிறது. இந்தப் பத்திரிகையில் ஞானி, எஸ்.வி.ஆர்., எஸ்.என்.நாகராஜன் போன்றவர்கள் இந்த உரையாடலை விரிவுபடுத்துகிறார்கள். அப்பொழுதுதான் சோவியத் தகர்கிறது. சோவியத் தகர்ச்சியும் மார்க்சியம் பற்றிய இவர்களுடைய பயணமும் சந்திக்கிற பொழுது, இவர்கள் எல்லோரும் மார்க்சியம் வேறு ஒரு வடிவத்தில், வேறொரு தத்துவ மரபில் பேச வேண்டி இருக்குமோ என்ற கேள்வியை எழுப்புகிறார்கள். அந்தக் கேள்வியால் தான் அந்நியமயமாதலிலும் இருத்தலியலிலும் தேடத் தொடங்குகிற பயணத்தில் எஸ்.வி.ஆர். பயணிக்கிறார். அந்தப் பயணம் மிக முக்கியமானது.

இந்த கட்டத்தில் அவர் எங்கே சென்று கொண்டிருக்கிறார் என்றால், அப்போதைய சிந்தனை மரபில் வருவதுதான் கிராம்ஷி. கிராம்ஷி பற்றிய விஷயங்களை 1991-இலேயே தொடங்குகிறார். அப்போது கீதாவும் எஸ்.வி.ஆரோடு இணைந்து அதைச் செய்கிறார்கள். கிராம்ஷி வாசிப்பு என்பதை அவர்கள் தொடர்ந்து செய்து 2010-இல் 'கிராம்ஷி புரட்சியின் இலக்கணம்' என்ற புத்தகத்தை கொண்டு வந்திருக்கிறார்கள். செவ்வியல் மார்க்சியத்திலிருந்து மார்க்சியத்தை அடுத்த கட்டத்திற்கு வளர்த்தெடுப்பதில், குறிப்பாக குடிமைத்துவப் (சிவில் சொசைட்டி) பண்பாடு சார்ந்த விஷயங்களில் எவ்வளவு முக்கியத்துவம் இருக்கிறது என்பது பற்றி மார்க்சிய சொல்லாடல்களை உலகத்திற்கு வழங்கியவர் கிராம்ஷி.

கிராம்ஷியினுடைய பயணத்தினூடாக, இன்னொரு உலகத்தை அவர்கள் கண்டுபிடிக்கிறார்கள். கிராம்ஷி பேசக்கூடிய 'ஆர்கானிக் இன்டலெக்சுவல்' என்று சொல்லக்கூடிய ஒரு பாரம்பரிய பண்பாட்டு மரபில் உருவாகி வரக்கூடிய, அறிவுப் பாரம்பரியத்தின் ஒரு தன்மையாக, தத்துவ மரபாகப் பலவற்றை நாம் தேடுகிறபொழுது பெரியார் கிடைக்கிறார் என்று சொல்கிறார்கள். அது மிகவும் முக்கியமான விஷயம். பெரியாரை வேறு வடிவத்தில் பார்க்க வேண்டும் என்பது கிராம்ஷியைப் படிக்கிறபொழுது தமக்குள் உருப்பெற்றது என்பதைப் பதிவு செய்கிறார்கள். இந்த வகையில், அவர்கள் சார்த்தரையும், அதேபோல அல்தூசரையும், வேறு பலரையும் தமிழ்ச் சூழலுக்கு அறிமுகப்படுத்துகிறார்கள். இவர்களுடைய தத்துவ மரபு ஓட்டத்தில் எக்ஸிஸ்டென்ஷியலிசத்திலிருந்து கிராம்ஷிக்குள் போகவேண்டிய கட்டாயம் நிகழ்கிறது.

இன்றைய மார்க்சிய தத்துவ மரபில் பல மார்க்சியப் புரிதல்களை நமக்குத் தெளிவுபடுத்தியவர் கிராம்ஷி என்பது இன்றைக்குப் பலராலும் ஏற்றுக்கொள்ளப்படுகிற கருத்தாக இருக்கிறது. செவ்வியல் மார்க்சியத்திலிருந்து கிராம்ஷியினுடைய மார்க்சியம் எங்கே மாறுபடுகிறது? எங்கே முக்கியமாக

இருக்கிறது? நம்மைப் போன்ற உழைக்கும் மக்களை அதிகமாகக் கொண்ட மூன்றாம் உலக நாடுகளில், கிராமங்கள் நிறைந்த பகுதிகளில் கிராம்ஷி போன்ற மரபு, மாவோ சொன்ன மரபிலிருந்து வளர்ச்சிபெற்ற ஒரு மரபாக நமக்குக் கிடைக்கிறது என்ற உரையாடலை இன்று நிகழ்த்துகிறார்கள். அந்த கிராம்ஷியை எஸ்.வி.ஆர். தொடர்கிறார். தொடர்ந்து பதினைந்து இருபது ஆண்டுகள் இரண்டு பேரும் சேர்ந்து மிகச் சிறிய புத்தகமாக, 1991-இல் எழுதியதை அதற்குப் பிறகு 2010-இல் மிகப்பெரிய புத்தகமாகக் கொண்டுவந்திருக்கிறார்கள். அதனுடைய மறு வெளியீட்டை நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம் கொண்டுவந்துள்ளது.

கிராம்ஷி வழியாக அவர் பெரியாருக்குள் பயணம் செய்கிறார். அது முக்கியமான பயணம். கிராம்ஷியினுடைய பயணத்திற்குள் செல்கிற பொழுது, பெரியார் கிடைத்தவுடன் 1990-களில் தமிழ்ச் சூழலில் பெரிய மாற்றம் நடந்தது. இங்கே அம்பேத்கரும் பெரியாரும் மறு கண்டுபிடிப்புக்கு உள்ளாகிறார்கள். குறிப்பாக மார்க்சியவாதிகள், பெரியாரைப் பேச வேண்டும், பெரியாரோடு உறவாட வேண்டும். பெரியார் சாதி ஒழிப்புக்காக முன்னெடுத்த விஷயங்களை முன்னெடுக்க வேண்டும் என்ற கருத்து மரபு உருவாகிறது. அதில் முக்கியமான பங்களிப்பு செய்த ஒரு குழு என்பது நிறப்பிரிகைக் குழு. பெரியார் பற்றிய அவர்கள் வெளியிட்ட கட்டுரைத் தொகுப்பு முக்கியமானது. அந்த மரபுக்குள்ளிருந்து பெரியார்; சுயமரியாதை - சமதர்மம் என்ற கோட்பாடுகள் சார்ந்து மார்க்சியம் என்பது அடிப்படையில் சமதர்மத்தைப் பேசுகிற ஒரு கோட்பாட்டின் அடி வட்டம்தான். அந்த சமதர்மம் என்ற மரபு சார்ந்து, தமிழ்ச் சூழல் சார்ந்து, கிராம்ஷி சொல்லக்கூடிய தத்துவ மரபு சார்ந்து பெரியாருக்குள் நாம் எப்படிப் போகமுடியும் என்கிற உரையாடலை, அந்தப் புத்தகத்தில் உருவாக்குகிறார்கள் கீதாவும் எஸ்.வி.ஆரும்.

எனவே இவர்களின் பயணம் என்பது மார்க்சியத்தோடு இணைந்த பெரியாரை எடுத்துச் செல்வது என்பதாக அமைகிறது. எனவே அது சார்ந்து பெரியார் குறித்த 1999 வாக்கில் ஆங்கிலப் புத்தகம் வெளிவருகிறது. *"Towards a Non - Brahmin Millennium: from Iyotheethaas to Periyar"* என்கிற புத்தகத்தை வெளியிடுகிறார்கள். பிறகு மீண்டும் 'சுயமரியாதை சமதர்மம்' புத்தகம் வருகிறது. பிறகு 'ஆகஸ்ட் 15' புத்தகம் வருகிறது. அதற்குப் பிறகு 'பெரியார் மரபும் மாற்றமும்' என்ற நூல் வருகிறது. இப்படியாக பெரியார் என்கிற ஆளுமை சார்ந்த தமிழ்ச் சமூக வரலாற்றினூடான பயணமாக அவருடைய பயணம் தொடர்ந்திருக்கிறது. இந்தப் பயணத்தின் தொடர்ச்சியை இன்று வரை அவர் மேற்கொண்டிருக்கிறார் என்றுதான் நான் கருதுகிறேன்.

இந்தத் தொடர்ச்சியில் அவர் எழுதிக் குவித்தவை ஏராளம். ஏறக்குறைய அறுபது புத்தகங்களுக்கு மேல் எழுதியிருக்கிறார். அவருடைய கட்டுரைகளெல்லாம் தொகுக்கப்பட்டு 15 தொகுதிகளாக வந்திருக்கின்றன. அதில் எவ்வளவு கட்டுரைகள் இருக்கிறது என்று சொல்லி ஒரு கணக்குப் போட்டு பார்த்தேன். ஏறக்குறைய 300 கட்டுரைகள் இருக்கின்றன. எஸ்.வி.ஆருடைய இந்தக் கட்டுரைகளை தனித்தனிப் பொருளாகப் பிரித்தீர்களென்றால், ஓவியம் பற்றி, இசை பற்றி, நாவல் பற்றி, நடைமுறை அரசியல் பற்றி, அம்பேத்கர் பற்றி, பெரியார் பற்றி என்று பல தொகுதிகளாகக் கொண்டுவர முடியும். எஸ்.வி.ஆர். என்ற மனிதர் இவ்வளவு பிரமாண்டமான வேலை செய்திருக்கிறார் என்பதை அந்தத் தொகுதிகள் சொல்லும். நான் மயிலை சீனி.வேங்கடசாமி என்ற மனிதருக்காக அப்படியான வேலை செய்தேன். அவருடைய அனைத்துப் படைப்புகளையும் சேர்த்து 20 தொகுதிகளாகத் தொகுத்து அச்சிட்டுக் கொண்டு வந்தோம். அப்போது தான் தெரிந்தது அந்த மனிதர் எவ்வளவு பெரிய வேலை செய்திருக்கிறார் என்று. அப்படித்தான் எஸ்.வி.ஆருடைய கட்டுரைகளுக்குள்ளும் அவர் ஒரு பெரிய உலகத்தில் பயணம் செய்திருக்கிறார் என்பதை அறியமுடிகிறது. அவருடைய மொழிபெயர்ப்பு சார்ந்த உரையாடல் வளமானது. நேரம் கருதி தவிர்க்கிறேன்.

எனவே எஸ்.வி.ஆர். என்று சொல்லக்கூடிய பிரமாண்டமான ஆளுமை என்பது அறுபதிலிருந்து இன்றைக்கு வரை இப்படியான பயணங்களை மேற்கொண்டு மார்க்சியத்தைப் படிக்கிறார். அதை வாழ்க்கையாகக் கொண்டிருக்கிறார். தமிழ்ச் சமூகத்திற்கு மார்க்சியத்தை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்று அவர் விரும்புகிறார்? அந்த விருப்பத்தினூடாக தமிழில் இப்படியான எழுத்துக்களைத் தொடர்ந்து எழுதிக்கொண்டிருக்கிறார். அவருடைய தேடுதலில் பெரியார் வந்து நிற்கிறார், அம்பேத்கர் வந்து நிற்கிறார். அந்த மரபு சார்ந்த மார்க்சிய சிந்தனை மரபுகளை நம் சமூகத்திற்கு வழங்கிய பெரிய கொடையாளியாக நான் எஸ்.வி.ஆரைப் புரிந்துகொள்கிறேன்.

**குறிப்பு:**

*25.06.2022 அன்று, ரோஜா முத்தையா நூலகம் ஏற்பாடு செய்திருந்த "தமிழ்ப் பொதுவெளிக்கு தாராபுரம் தந்த அறிவுக்கொடையாளர்கள்" (எஸ்.வி.ஆர் மற்றும் தியோடர் பாஸ்கரன்) என்னும் தலைப்பில், எஸ்.வி.ஆர் குறித்த 20 நிமிட உரையின் எழுத்து வடிவம். ஏப்ரல் 10 ஆம் நாள் எஸ்.வி.ஆரின் பிறந்த நாளை நினைவுபடுத்தும் வகையில் இப்பேச்சை வெளியிடுகிறோம்.*

●

கட்டுரையாளர், ஓய்வுபெற்ற பேராசிரியர்

# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடுகள்




₹ 420/-




₹ 80/-




₹ 120/-




₹ 280/-




₹ 690/-




₹ 460/-

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**

41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.

☎ 044 - 26251968, 26258410, 48601884 www.ncbhpublisher.in | email: info@ncbh.in

கிளைகள்

அம்பத்தூர் 044 - 2635 9906, ஸ்பென்ஸர் பிளாசா 044-28490027, மதுரை 0452 - 2344106, 4374106, திருநெல்வேலி 0462 - 2323990, 4210990, திண்டுக்கல் 0451-2432172, கோயம்புத்தூர் 0422 2380554, சேலம் 0427-2450817, ஈரோடு 0424-2256667, கிருஷ்ணகிரி 04343-234387, ஓசூர் 04344 - 245726, ஊட்டி 0423 - 2441743 திருச்சி 0431 - 2700885, தஞ்சாவூர் 04362-231371, புதுக்கோட்டை 04322-227773, விழுப்புரம் 04146-227800, பாண்டிச்சேரி 0413 2280101, வேலூர் 0416-2234495, நாகர்கோவில் 04652 -234990.





# மகேந்திரவர்மன் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறான்

அ.கா.பெருமாள்

தமிழக வரலாற்றில் 2000 ஆண்டுகளில் ஆண்ட மன்னர் பரம்பரையினரில் "கரிகாலன், மகேந்திர பல்லவன், ராஜராஜன், சரபோஜி" என சில மன்னர்கள் ஏதோ சூழ்நிலையில் தொடர்ந்து நினைக்கப்படுகிறார்கள். இதற்கு இவர்கள் செய்த ஒரு சாதனை அல்லது பிரமிப்பு ஏதோ ஒன்று காரணம்.

காவிரியாற்றில் ஒருவன் அணை கட்டினான். ஒருவன் கடற்கரைப் பாறைகளைக் குடைந்து குடைவரைக் கோவில்களை அமைத்தான். ஒருவன் உலகமே வியக்கும் பிரம்மாண்டமான கோவிலைக் கட்டினான். ஒருவன் பெரிய நூல் நிலையத்தை உருவாக்கினான். இவர்கள் எல்லாம் மீண்டும் மீண்டும் நினைக்கப்படுகிறார்கள். இப்படியான செயல்பாடுகளுடன் அழியாத இலக்கியங்களைப் படைத்த அரசர்களும் நினைக்கப்படுகிறார்கள்

தமிழகத்தை ஆண்ட மன்னர்களில் சிலர் தனிப்பாடல்களையோ சிறு இலக்கியங்களையோ படைத்திருக்கிறார்கள். இவர்கள் தமிழில் எழுதியவர்கள். சமஸ்கிருதத்தில் எழுதி தென்னிந்தியாவில் தன் புகழை நிறுத்தி வாழ்ந்து கொண்டிருப்பவன் பல்லவ அரசர்களில் முக்கியமானவனாகக் கருதப்படும் முதல் மகேந்திரவர்மன்.

பல்லவர்கள் கிபி 250 முதல் 949 வரை 700 ஆண்டுகள் தமிழகத்தின் ஒரு பகுதியை ஆண்டு இருக்கிறார்கள். இவர்களின் தலைநகரம் காஞ்சிபுரம் பல்லவ மன்னர்களில் முதல் மகேந்திரவர்மன் (590-630) 40 ஆண்டுகள் தமிழகத்தை ஆண்டவன்.

இவனது தந்தை சிம்ம விஷ்ணு. மகேந்திரனின் நாடு கிருஷ்ணா நதி வரை இருந்தது. வட கேரளத்திலும் இவரது செல்வாக்கு இருந்தது. இவன் சமணனாக இருந்து சைவத்திற்கு மாறியவன். இவனது சமகாலத்தில் வாழ்ந்த திருநாவுக்கரசர் இவனுடன் தொடர்பு கொண்டிருந்திருக்கிறார்.

மகேந்திர பல்லவனுக்கு நிறையப் பட்டப்பெயர்கள் உண்டு. அவற்றில் ஒன்று மத்த விலாசன். மகேந்திரவர்மன் அமைத்த மாமண்டூர் குகையில் உள்ள நீண்ட கல்வெட்டில் ஆறாவது வரியில் மத்த விலாசன் என்ற பெயர் வருகிறது. இந்தக் கல்வெட்டு தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதியில் (Uol 4 - P888) இருக்கிறது (A.R.E. Report Madras 1928 P145).

இந்தக் கல்வெட்டை ஆராய்ந்தவர்கள் மத்த விலாசம் என்பது ஒரு நாடகத்தைக் குறிப்பது; அதை எழுதியவன் இந்த மகேந்திர வர்மன். அந்தப் பெயரால் இவன் அழைக்கப்பட்டு இருக்கிறான் என்பதையெல்லாம் முழுமையாகக் கண்டுகொள்ளவில்லை.

இந்த நாடகத்தின் பிரதி தமிழகத்திலும் கிடைக்கவில்லை. ஆனால் கேரளத்தில் மத்த விலாசம் நாடகத்தின் பிரதியும் மகேந்திரன் எழுதியதாக கருதப்படும் பகவதஜ்ஜீக பிரகசனம் என்ற நாடகத்தின் பிரதியும் கிடைத்தன.

இந்த நாடகங்கள் திருவிதாங்கூர் பல்கலைக்கழகம் சமஸ்கிருதத்துறை வழி வெளிவந்தது. ஏறத்தாழ இதே காலகட்டத்தில் அன்றைய திருவாங்கூரின் ஒரு பகுதியாகவும் இப்போது தமிழ்நாட்டின் ஒரு பகுதியாகவும் உள்ள கன்னியாகுமரி மாவட்டத்தில் பார்த்திவசேகரபுரம் என்ற ஊரில் கவி பாசனின் சுவப்பன வாசவதத்தா என்ற நாடகத்தின் பாடபேதம் இல்லாத ஏடு கிடைத்தது. இதைக் கணபதி சாஸ்திரி என்பவர் கண்டுபிடித்து வெளியிட்டிருக்கிறார். பின்னர் இதன் தமிழ் மொழிபெயர்ப்பும் வந்தது (கணபதி சாஸ்திரி கலைமகள் 1954).

மகேந்திர வர்ம பல்லவன் மத்த விலாச பிரகசனம், பகவதஜ்ஜீக பிரகசனம் ஆகிய இரண்டு சமஸ்கிருத நாடகங்களை எழுதியுள்ளான். இவற்றில் மத்த விலாச பிரகசனம் மகேந்திரவர்மன் எழுதியது என்பதில் பல்லவ வரலாற்று ஆசிரியர்களிடம் சந்தேகமில்லை. இந்த நாடகத்தின் பெயர் மகேந்திரவர்மனின் மாமண்டூர் கல்வெட்டில் வருவதால் இது உறுதியாகிவிட்டது.

மாமண்டூர் கல்வெட்டில் பகவதஜ்ஜீகம் என்னும் சொல் வருகிறது. இது பகவதஜ்ஜீக பிரகஸன நாடகத்தைக் குறிக்கிறது என்று சொல்லுகின்றனர். இந்த நாடகம் மத்த விலாச பிரகசன நாடகத்தின் நடையை ஒத்துக் காணப்படுவதால் மகேந்திரவர்மன் இந்த நாடகத்தையும் எழுதி இருக்க வேண்டும் என்று சிலர் ஊகிக்கின்றனர்.

ஸ்ரீநிவாச சர்மா தன் வடமொழி நாடக இலக்கிய வரலாறு என்ற நூலில் (அண்ணாமலை பல்கலைக்கழகம் 1989) பகவதஜ்ஜீகம் நாடகத்தை போதான கவி எழுதினார். இவரது காலத்தைத் திட்டவட்டமாகக் கூற முடியாது எனினும் கவி பாசன் நாடகங்கள் தொகுத்த காலமே இந்த நூலின் காலம் என்கிறார் (ப.147).

மயிலை சீனி வேங்கடசாமியும் மகேந்திரவர்மன் மத்த விலாச நாடகத்தை எழுதினான், ஆனால் பகவதஜ்ஜீகம் நாடகத்தை எழுதவில்லை என்கிறார். மத்த விலாசம் நாடகத்தை அவன் எழுதியதற்கு மாமண்டூர், பல்லாவரம், திருச்சி குடைவரைக் கோவில்களில் உள்ள கல்வெட்டுக்கள் சான்று என்கிறார். இவர் கருத்துப்படி மத்த விலாசம் பெரும்பாலும் கி.பி. 620 இல் எழுதப்பட்டிருக்க வேண்டும். இது மகேந்திரனின் 30 ஆவது ஆட்சி ஆண்டு ஆகும்.

பகவதஜ்ஜீகம் பிரகசனம் நாடகத்தின் ஏடு கிடைத்துள்ளது. அதில் மகேந்திரன் பெயர் இல்லை. நாடக மூலத்திலும் இவன் பெயர் இல்லை. இது போதாயனர் அல்லது பரத முனிவர் எழுதியிருக்கலாம் என்ற கருத்து உள்ளது. ஆனால் இந்த நாடகத்தைக் கேரளத்தில் பதிப்பித்த சிலரும் விமர்சித்த சிலரும் இது மகேந்திரன் எழுதிய நாடகம் என்று சொல்லுகின்றனர்.

மகேந்திரன் சமணனாய் இருந்து சைவனாக மாறிய பின்னர் எழுதிய மத்த விலாச நாடகத்தை எள்ளல் தொனியில் எழுதியிருக்கிறான். இந்த நாடகத்தின் மூலத்தில் வியப்தாபனி பாசனம் என்ற சொல் வருகிறது. இதற்கு உலகமாகிய பாத்திரத்தில் நிறையக் கடவது என்பது பொருள். இதில் வரும் அவனி பாகன் என்பது மகேந்திரன் பெயராகும்.



ஆகவே பகவதஜ்ஜீகம் நாடகத்தை மகேந்திரனே எழுதினான் என்று ஊகிக்கின்றனர்.

சமஸ்கிருத பிரகசன (நகைச்சுவை) நாடகங்களை சுத்தம் விசித்தம், சங்கீரணம் என்று மூன்றாகப் பகுப்பர். இவற்றில் மத்த விலாசம் சுத்த பிரகசன வகையில் அடங்கும்.

மத்த விலாசம் நாடகத்தின் ஆரம்பத்தில் நடிகை (நடி) நாம்-- வெற்றியை உரிமையாக்கப் போகிற கவிஞன் யார் என்று சூத்திரதாரியிடம் கேட்கிறாள். அதற்கு சூத்திரதாரி "கேள் அன்பே அவர்தான் ஸ்ரீ மகேந்திர விக்கிரமன் என்னும் பெயர் கொண்ட ராஜாதி ராஜ பல்லவ வம்சத்தின் பெருமலை சிம்ம விஷ்ணு வர்மனின் மகன் அவரையே இந்த நாடகத்தின் ஆசிரியர்" என்கிறான். அவள் அப்படியானால் "ஏன் தாமதம் அபூர்வமான இந்த நாடகத்தை உடனே நடத்த வேண்டும்" என்கிறாள்

சூத்திரதாரியிடம் நடிகை "இந்த வயோதிக காலத்தில் இளமையான பாத்திரங்களைக் கொண்ட போதை களிப்பு பற்றிய கேலி நாடகத்தை நடத்த வந்திருக்கிறீர் " என்கிறாள். அதாவது இந்த நாடகம் நகைச்சுவை நாடகம் என்பதை வெளிப்படையாகவே கூறுகிறாள்

பகவதஜ்ஜீகம் நாடகத்தின் ஆரம்பத்தில் சூத்திரதாரி விதூசகனிடம் பத்து வகை நாடகங்களின் பெயர்களைச் சொல்லுகிறான்.

| | | |
|---|---|---|
| வார | - | நாடகம் |
| இஹம்ரி க | - | ஒரு தலை காதல் |
| திம | - | முற்றுகையிடல் |
| சமவக்கார | - | தொடர்பற்று துவங்கி ஒன்றாகக் கூடி வரும் நாடகம் |
| வியா யோக | - | போர் பூசல் |
| பாண | - | ஓர் ஆள் காதல் வீரம் |
| சல்லாப | - | தொடர்பற்ற பேச்சு உரையாடல் |
| வீதி | - | ஒருவர் அல்லது இருவர் |
| உத்சிரிஷ்டி காங்க | - | ஓரங்கம் |
| பிரகசனம் | - | எள்ளல் |

இப்படி எல்லாம் சொல்லிவிட்டு நான் பிரகசன நாடகத்தை நடத்தப் போகிறேன் என்கிறான்.

மத்த விலாச நாடகத்தை முதலில் திருவிதாங்கூர் பல்கலைக்கழக சம்ஸ்கிருதத் துறையினர் பதிப்பித்தனர் (1917). இதன் பிறகு தொடர்ந்து பகவதஜ்ஜீகம் வந்தது. இதன் பிறகு மத்த விலாசத்தில் பல பதிப்புகள் வந்துவிட்டன.

காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு தமிழ்நாட்டை ஆண்ட அரசன் எழுதிய சமஸ்கிருத நாடகங்கள் தமிழ்நாட்டில் கிடைக்கவில்லை. கேரளத்தில் எப்படி கிடைத்தது ? இதற்குப் பல்வேறு விளக்கங்கள் கூறப்படுகின்றன.

கேரளத்தின் வடபகுதி பல்லவனின் அதிகாரத்தில் இருந்தது. கேரளத்தில் எல்லா காலகட்டத்திலும் சமஸ்கிருத இலக்கியங்கள் தோன்றியிருக்கின்றன. கேரளக் கலைகள் சமஸ்கிருத இலக்கியங்களைப் போற்றி இருக்கின்றன. மத்தவிலாசம் கிடைத்ததற்கு இவை போன்ற காரணங்களைக் கூறலாம்.

கேரளத்து சமஸ்கிருத அறிஞர்கள் பாஷன், காளிதாசன். சூத்ரகன் என்னும் ஆளுமைகளை அறிந்திருக்கின்றனர். இவர்களின் நாடக ஏடுகள் கேரளத்தில் கிடைத்திருக்கின்றன. மத்த விலாசம் கேரள அறிஞர்களால் சாதாரணமாய் படிக்கப்பட்டிருக்கலாம்.

தமிழகத்தில் எழுதப்பட்ட மத்த விலாசம் கேரளத்தில் கிடைத்ததற்கு இன்னும் ஒரு முக்கியமான காரணம் உண்டு. இந்த நாடகம் கேரளத்தில் பல ஆண்டுகளாய் நடிக்கப்பட்டு இருக்கிறது. மத்த விலாசத்தை மையமாகக் கொண்டு நடந்த கூடியாட்டம் என்னும் கலை இப்போதும் வழக்கில் உள்ளது.

கேரளத்தில் மிக பழைய கலையான கூடியாட்டம் நிகழ்வில் மத்த விலாசம் சமஸ்கிருத மொழியில் நடந்திருக்கிறது. கூடியாட்டம் நாடகம், இசை எனக் கலந்து நடப்பது. இதன் முக்கிய நுட்பமாக அபிநயம் (வெளிப்பாடு), அங்கிகா (உடல் அசைவு) வக்கி கா (பேசும் வார்த்தை) ஆகார்யா (ஆடை அலங்காரம்) சாத்திகா (உணவு) ஆகியவற்றைக் கூறுகின்றனர்.

இந்தியாவில் இன்று எஞ்சி இருக்கும் சமஸ்கிருத நாடக வடிவம் கூடியாட்டம். இந்தக் கலையை சாக்கையர் (ஆண்கள்) நங்கையர் (பெண்கள்) நடத்துகின்றனர். இந்தக் கலையை

நடத்துவதற்குக் கோவில்களில் கூத்தம்பலம் உண்டு. புகழ்பெற்றக் கூடியாட்டக் கலைஞர் பைங்குளம் நாராயண சாக்கையார் இதற்கு அங்கீகாரம் வாங்கிக் கொடுத்துள்ளார். இந்தக் கலை ஐக்கிய நாட்டு கழகத்தின் அங்கீகாரம் பெற்றது.

மத்த விலாசத்தில் மகேந்திரனின் மதச்சார்பு வெளிப்படையாகத் தெரிகிறது. மகேந்திரன் சமணனாக இருந்து பின் சைவன் ஆனவன். ஒரு வகையில் கூறுவதாக இருந்தால் சமணம் தமிழத்துக்கு வந்த 1000 ஆண்டுகளுக்குப் பின்னர் எழுதப்பட்டிருக்கிறது.

இந்த நாடகம் எழுதப்பட்ட காலத்தில் காஞ்சிபுரத்துக்கு வந்த சீன யாத்திரிகன் யுவான் சுவாங் காஞ்சி நகரத்தில் புத்த விகாரைகள் நிறைய இருந்தன; தர்மபாலர் இருந்தார் என்கிறான். அந்தக் காலத்தில் காஞ்சியில் இருந்தது மகாயான பௌத்தம். பல்லவ அரசர்கள் பௌத்தர்களுக்கு நிபந்தம் கொடுத்தது குறித்த செய்தி கிடைக்கவில்லை.

மத்த விலாசத்தில் சைவத்தின் ஒரு பிரிவான கபாலிகம் பின்னணியாக வருகிறது. மகேந்திரன் காலத்தில் காஞ்சியில் கபாலிகம் இருந்தது. சைவத்தில் ஒரு பிரிவான மாவிரதியருடன் காபாலிகர் கொள்கை தொடர்பு உடையவர். இவர்கள் முறைப்படி தீட்சை பெற்றவர். பைரவரை வணங்குபவர். உடம்பில் நீறு பூசிக் கொள்வர். கழுத்தில் மண்டையோட்டு மாலை போட்டுக் கொள்ளுபவர். இடது கையில் காபாலம் இருக்கும்.

வடநாட்டில் இருந்து தமிழகத்திற்கு இறக்குமதியான சமயப் பிரிவுகளில் கபாலிகம் ஒன்று. இதை பிற சைவர்கள் வெறுத்திருக்கின்றனர். மண்டை ஓட்டில் யாசகம் பெறும் இந்தப் பிரிவினரை மத்த விலாசம் எள்ளல் தொனியுடன் விமர்சிக்கிறது.

இசைத்தன்மையுடன் கூடிய மத்த விலாசத்தில் 23 பாடல்கள் உள்ளன. காஞ்சிபுரத்தைப் பின்னணியாகக் கொண்ட இந்த நாடகத்தில் ஏகாம்பரநாதர் கோவிலின் மத்தள ஓசை, பூக்கடைகள், இளம் மங்கையர்கள் வீதியில் செல்லுதல். மதுக்கடைகளில் சலசலப்பு, அதிகாரிகள் லஞ்சம் வாங்குதல் எனப் பல சமகாலச் செய்திகள் வருகின்றன.

பௌத்தர்களின் மேல் நிறைய குற்றச்சாட்டுகளை இந்த நாடகம் முன் வைக்கிறது. புத்தர்கள் வேதம் மகாபாரதம் போன்றவற்றிலிருந்து கருத்துக்களைத் திருடினார்கள். பௌத்தம் மது, மாது இரண்டையும் ஒதுக்கியது குறித்த மனத்தாங்கல் பௌத்தர்களுக்கு இருந்தது. விகாரைகளுக்குச் சொந்தமான வருமானத்தை பௌத்த பிட்சுகள் அனுபவித்தார்கள். அவர்களிடம் ஒழுக்கம் இல்லை. இப்படியான குற்றச்சாட்டுகள் நாடகத்தில் வெளிப்படையாக வருகிறது.



ஏகாம்பரநாதர் கோவில் தெருவில் உள்ள தான் தோன்றி ஈஸ்வரர் கோவில் சுவரில் மத்த விலாசம் சிற்பங்கள் உள்ளன.

மயிலை சீனி வெங்கடசாமி, மகேந்திர வர்மன் என்ற நூலின் பின்னிணைப்பில் மத்த விலாச நாடகத்தை மொழிபெயர்த்துக் கொடுத்து இருக்கிறார். தமிழில் பிரளயன் இந்த நாடகத்தை சில மாற்றங்களுடன் மேடை ஏற்றி இருக்கிறார். பேராசிரியர் பாலுச்சாமி மத்த விலாச நாடகத்தை விரிவாக ஆராய்ந்து இருக்கிறார். (2023).

**பின் இணைப்பு எண் 1**

**மத்தவிலாச பிரகசன நாடகச் சுருக்கம்**

**கதாபாத்திரங்கள்:**

**சூத்திரதாரி,**
**நடிகை ஆத்திரதாரியின் மனைவி (நடி)**
**கபாலிகன் (சத்திய சோமா)**
**தேவ சோமா (சத்திய சோமாவின் காதலி)**
**புத்த துறவி (நாக சேனன்))**
**பாசுபதன் (பாப்ரு கல்பன்)**
**உன்மத்தன்(பைத்தியக்காரன்)**

சூத்திரதாரி உலகை இயக்கும் இறைவனை வணங்குகிறான். தனது இரண்டாம் மனைவி காரணமாக கோபம் கொண்டிருக்கும் மூத்த மனைவியை மகிழ்விக்க வேண்டும் என்று அரச சபையில் ஒரு நாடகம் நடத்த கேட்டுக் கொண்டார்கள். இது நல்ல வாய்ப்பு அவளை கேட்போம் என்று சொல்லிக் கொள்ளுகிறான்.

சூத்திரதாரியின் முதல் மனைவி வருகிறாள். கணவனிடம் "உமக்கு வயதாகிவிட்டது இளம் பாத்திரங்களை வைத்துக்கொண்டு நாடகம் நடத்த போகிறீரா" என்று கிண்டலாக கேட்கிறாள். அதற்கு

சூத்திரதாரி "உன்னை வைத்துத்தான் நடத்தப் போகிறேன்" என்கிறான்.

அவள் "இல்லை உன் இரண்டாம் காதலியை வைத்து நடத்து" என்கிறாள். அவன் "உன் நடிப்பு மேடைக்குப் பொருத்தமானது பார்வையாளர்களுக்கு பிடிக்கும்" என்கிறான். அவள் அவனது புகழ்ச்சிக்கு மயங்கி "என்ன நாடகம் அரங்கேற்றப் போகிறாய்" என்று கேட்கிறாள்.

சூத்திரதாரி "போதை களிப்பு நாடகம். இது கிண்டலானது" என்கிறான். அவள் இதை நடத்துபவர் யார் எனக் கேட்கிறாள். சூத்திரதாரி " மகேந்திரவர்மன் சிம்ம விஷ்ணுவின் மகன்" என்கிறான்

அவள் "ஆஹா நல்லது சீக்கிரம் நாடகத்தை நடத்து" என்கிறாள்

இந்த நேரத்தில் அரங்கத்தின் பின்னே இருந்து குரல் கேட்கிறது. கபாலிகன் ஒருவன் அன்பே தேவ சோமா என அழைக்கிறான்.

சூத்திரதாரியின் அறிமுக உரை முடிகிறது

கபாலிகன் தன் இளம் காதலியுடன் வருகிறான். குடி போதையில் பேசுகிறான். "அன்பே தேவ சோமா ஒருவன் தான் விரும்பிய வடிவத்தை அடைய தவம் செய்யலாம். நீயோ பேரழகு வடிவத்தை எடுத்து விட்டாய்" என்கிறான். அவள் "எனக்கு மயக்கம் வருகிறது. விழுந்து விடுவேனா" என்கிறாள். கபாலிகன் அவளைத் தாங்கிப் பிடிக்கிறான்.

தேவ சோமா என்னும் பெயருடைய அவளை சோமதேவா என அழைக்கிறான். அவளோ "ஓஹோ இந்தப் பெயர் உடைய ஒருத்தி உனக்கு இருக்கிறாளா" என்று கேட்கிறாள். கபாலி "என் குடி என்னை இப்படி ஆக்கிவிட்டது: இனிமேல் குடிக்க மாட்டேன்" என்கிறான். அவளோ அவன் காலில் விழுந்து "உங்கள் தவமே குடிதான். அதை நிறுத்த வேண்டாம்" என்கிறாள்.

அவன் அவளைத் தழுவிக் கொள்ளுகிறான். "சிவன் "வாழ்க" என்கிறான். தேவ சோமா சமணர்கள் வேறு மாதிரி விளக்கம் தருகிறார்களே என்கிறாள். கபாலி அவர்கள் நாத்திகர்கள் 'நீசர்கள்' நிந்தனைக்குக் கூட தகுதியற்றவர்கள். அவர்களைப் பற்றிப் பேசிய வாயை மதுவால் கழுவ வேண்டும்" என்கிறான்.

தேவ சோமா "சரி வேறு மதுக்கடைக்கு போவோம்" என்கிறாள். இருவரும் நடக்கிறார்கள். கபாலி காஞ்சிபுரம் நகரை வர்ணிக்கிறான். அவர்கள் மதுக்கடையில் மது வாங்குகின்றனர். அவனுக்கு மதுக்கடை வேள்விக் கூடமாகத் தெரிகிறது.

அவர்களின் மது போதை தெளிந்தது. அப்போது கபாலி என் கபாலத்தை காணவில்லை என்கிறான். அவளும் அதைத் தேடுகிறாள். கபாலி "அதில் பொரித்த இறைச்சி இருந்தது அதை நாயோ புத்த துறவியோ எடுத்திருக்கலாம்" என்கிறான். தேவ சோமா "காஞ்சி நகரம் முழுவதும் தேடுவோம்" என்கிறாள். இருவரும் தெரு வழியே நடக்கிறார்கள்

இந்த நேரத்தில் ஒரு புத்த துறவி வந்து கொண்டிருக்கிறான். அவன் தனக்குள் பேசிக் கொள்கிறான். "இந்த புத்தர் மது மாது இரண்டையும் ஏன் விடச் சொன்னார். உண்மையில் அவர் சொன்னாரா அல்லது புத்தபிடகத்தில் மறைத்து விட்டார்களா மூல பாடத்தை தேட வேண்டும். புத்தர் சொன்ன முழுமையான விஷயத்தை கண்டுபிடிக்கலாம்" என்று சொல்லிக் கொள்ளுகிறார்.

தேவ சோமா அந்த புத்த துறவியைப் பார்க்கிறாள். "வந்து கொண்டிருக்கின்ற புத்த பிட்சுவைப் பார். அவன் ஒரு பாத்திரத்தை மறைத்துக் கொண்டிருக்கிறான். அவனைப் பிடித்து விசாரிப்போம்" என்கிறாள்.

கபாலிகன் பிட்சுவை அழைக்கிறான். புத்த துறவிக்கு கபாலியுடன் விவாதம் செய்ய விரும்பவில்லை. கபாலிகையின் அழகு அவனைக் கவர்கிறது. கபாலிக்கும் பிட்சுவுக்கும் தர்க்கம் நடக்கிறது. புத்தத் துறவி " உன் மண்டை ஓட்டை நான் எடுக்கவில்லை" என்கிறான்.

கபாலனும் தேவ சோமாவும் புத்த துறவியைப் பிடித்து இழுக்கின்றனர். அவனது பாத்திரத்தைப் பறிக்கப் போகின்றனர். அவன் அவர்களை எட்டி உதைக்கின்றான். தேவ சோமா கீழே விழுந்து விடுகிறாள். புத்த துறவி அவள் எழுந்து நிற்க உதவுகிறான்.

கபாலன் என் தேவசோமாவைப் புத்த துறவி தொட்டுவிட்டானே என்று ஓலமிடுகிறான். அப்போது பாசுபதன் ஒருவன் வருகிறான். கபாலன் அவனிடம் "புத்த துறவி செய்த காரியத்தைக் கேட்பாய். என் பாத்திரத்தை இவன் எடுத்து விட்டான்" என்கிறான்.

பாசுபதன் மனதிற்குள் இந்த புத்த நாகசேனனை பழிவாங்குவதற்கு இது சந்தர்ப்பம். சத்திய சோமா உதவி செய்வான் என்று எண்ணுகிறான். அவன் துறவியிடம் உன் பாத்திரத்தைக் காட்டு என்கிறான். பிச்சு காட்டுகிறான். அது கருப்பு நிற பாத்திரம். தேவ சோமா இவன் என் கபாலத்தின் நிறத்தை மாற்றி விட்டான் என்று கூறுகிறான்.

அப்போது பாசுபதன் "உங்கள் வழக்கை நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்வோம்" என்கிறான். தேவ சோமா "இந்த நாகசேனன் நீதிபதிகளுக்குப் பணம் கொடுத்து வாயை அடைத்து விடுவான்" என்கிறான்.

இந்தச் சமயத்தில் ஒரு பைத்தியக்காரன் வருகிறான். அவனிடம் கபாலம் இருக்கிறது அவன் "இதை ஒரு நாயிடம் நான் பெற்றேன்" என்கிறான். அதைக் கொடுக்க பைத்தியக்காரன் முதலில் மறுக்கிறான். கடைசியில் அவனிடமிருந்து கபாலத்தைப் பெறுகிறான் கபாலன். புத்த துறவியிடம் மன்னிப்பு கேட்கிறான். எல்லோரும் பிரிகின்றனர்

**பின்னிணைப்பு எண் 2**

பகவதஜ்ஜீக பிரசனம்

**கதாபாத்திரங்கள்:**
**சூத்திரதாரி**
**விதூசகன் (கோமாளி)**
**பரிவிராசகர் (துறவி)**
**சாண்டில்யன் (பரிவிராசகரின் சீடன்)**
**ராஜ கணிகை (வசந்த சேனை இன்னொரு பெயர் அஜ்ஜூகா**
**மது காரிகா (பணிப்பெண்)**
**பரப்பிரிதிகா (பணிப்பெண்)**
**எமதூதன்**
**கணிகையின் "அம்மா**
**இராமிலகன் (வசந்த சேனையில் காதலன்)**
**மருத்துவர்**

சூத்திர தாரி சிவனை, வாழ்த்துகிறான். விதூசகன் சூத்திரதாரியிடம் "நான் குறி சொல்பவன் ஒருவனைச் சந்தித்தேன். அவன் நீ அரசரின் சபையில் ஒரு நாடகம் நடத்தப்போவதாகவும் அதற்கு உனக்கு சன்மானம் கிடைக்கும்" என்று சொன்னான். உடனே சூத்திரதாரி "நான் ஒரு அங்கத நாடகத்தை நடத்தப் போகிறேன் நீ அதை அறிந்து கொள்," என்றான்

இவர்கள் இப்படி பேசிக்கொண்டிருக்கும்போது திரையின் பின்புறத்தில் இருந்து சாண்டில்யா என யாரோ அழைக்கும் குரல் கேட்கிறது. அழைத்தவன் ஒரு துறவி. அவன் திரைக்கு முன்னே வருகிறான். மீண்டும் சாண்டில்யா சாண்டில்யா என அழைக்கிறான். அப்போது சாண்டில்யன் வருகிறான்

சாண்டில்யன் தனக்குத் தானே பேசுகிறான். "நான் அந்தணன், ஆனால் படிக்காதவன். வறுமையின் காரணமாக புத்த மதத்திற்குப் போனேன். அங்கு பலன் கிடைக்கவில்லை. இப்போது இந்த பண்டிதனுக்குப் பாத்திரம் சுமக்கிறேன்" என்று பேசிக்கொண்டே போகிறான்

குருதேவர் பரிவிராசகர் சாண்டில்யனிடம் ஆன்மா பற்றி பேசுகிறார். சீடனுக்கு விளங்கவில்லை சீடனும் குருவும் ஒரு சோலைக்குள் செல்கின்றனர். குரு அவனிடம் பாடம் சொல்லுகிறேன் கேள் என்கிறார். அவனுக்கு அதில் விருப்பமில்லை.

குரு அறிவு ஞானத்திற்கு வழிகாட்டுகிறது என்று சொல்லுகிறார். அவனோ சாப்பாடு விஷயத்தில் குறியாக இருக்கிறான். புத்த மதத்தில் இருந்த போது கேட்டதை எல்லாம் விவரிக்கிறான்.

இந்த நேரத்தில் ராஜ கணிகையான வசந்தசேனை இரண்டு பணிப்பெண்களுடன் சோலைக்கு வருகிறாள்.

ராஜகணிகை தன் பணிப்பெண்களுடன் சோலையில் ரம்யமான ஒரு இடத்தில் அமருகின்றாள். பணிப்பெண் கணிகையிடம் இனிமையான ஒரு பாட்டு பாடு என்கிறாள். கணிகை பாடுகிறாள்.

**இந்தச் சோலையில் காதல் கடவுள் மன்மதன் நிற்கின்றான்**
**குயிலும் வண்டும் இசைக்கின்றன வில்லை வளைக்கின்றான்**
**அரும்பை அம்பாக வைத்து நாணைப் பிடித்ததால் மனம் அலைகின்றது**

என்று பாடுகிறாள்

இந்தப் பாட்டைக் கேட்ட பரிவிராசகரின் சீடன், சாண்டில்யன் மயக்கத்துடன் நிற்கின்றான். கணிகை தொடர்ந்து பாடிக்கொண்டிருக்கிறாள். சாண்டில்யன் பாட்டின் மயக்கத்தில் புலம்ப ஆரம்பித்தான். "குரு தேவனே இந்தப் பாடலின் மொழியும் குரலும் மட்டும் எனக்குக் கேட்கிறது" என்கிறான்.

இந்த நேரத்தில் அந்தச் சோலைக்கு எம தூதன் வருகின்றான். எமதூதன் இந்தக் கணிகையின் ஆயுள் முடியப்போகிறது. அவளது உயிரை எடுக்க வேண்டும் அதற்கு என்ன செய்வது என்று யோசிக்கிறான்.

அப்போது கணிகை அசோக மரத்தின் அருகே செல்லுகிறாள். மரத்தில் உள்ள ஒரு மொட்டைப் பறிக்க முயன்ற போது எமதூதன் பாம்பாக மாறி அவளைக் கடித்து விடுகிறான்.

கணிகை மயங்கி கீழே விழுகிறாள். பணிப்பெண் அவளைத் தூக்கி எடுக்கிறாள். அவள் இறந்து போனதை அறிந்து அரற்றுகிறாள். இதைப் பார்த்துக் கொண்டிருந்த சீடன் சாண்டில்யன் வருத்தப்படுகிறான்.

இதைக் கண்ட குரு "மூடனே உயிர் உடலைத் துறந்து விட்டது" என்கிறான். சீடனோ அவர் சொன்னதைக் கேட்காமல் இவளுக்காக நான் அழ வேண்டும் என்று சொல்லுகிறான்.

பணிப்பெண் சீடனிடம் "ஐயா இவளது உடலைப் பார்த்துக் கொள்ளுங்கள். இவளது தாயை அழைத்து வருகிறேன்" என்று சொல்லிவிட்டு ஓடுகிறாள். சாண்டில்யன் அவளது உடல் அருகே அமர்ந்து கொண்டு புலம்புகிறான்.

இதை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்த குரு இந்த சீடனுக்கு ஆன்மா உண்டு என்பதைக் கற்பிக்க வேண்டும் என்று நினைக்கிறார். உடனே இறந்து போன கணிகையின் உடலில் தன் உயிரைச் செலுத்துகிறார். கணிகை உயிர் பெற்று எழுந்து நின்றாள். குரு இறந்துவிட்டார்.

இந்த நேரத்தில் கணிகையின் அம்மாவைப் பணிப்பெண் அழைத்து வருகிறாள். கணிகையின் உடலில் இருந்த குருவின் ஆன்மா அவளது அம்மாவிடம் பேசியது. மூதாட்டியே என்னைத் தொடாதே என்றாள்.

கணிகையின் அம்மா திகைத்தாள். பாம்பு கடித்ததால் விஷம் தலைக்கேறி இவளுக்குப் பித்து

பிடித்து விட்டதோ என்று நினைத்தாள். ஓடிப்போய் மருத்துவரை அழைத்து வருகிறாள்.

மருத்துவர் கணிகையிடம் பேசுகிறார். கணிகையோ மருத்துவரிடம் பேசிய பேச்சு சுற்றி இருந்தவர்களுக்கு மயக்கத்தை உண்டாக்குகிறது. அவளுக்கும் பித்து பிடித்து விட்டது என்று எல்லோரும் நினைக்கின்றனர்.

இந்த நேரத்தில் எமதூதன் நடந்து கொண்டிருக்கும் நிகழ்ச்சிகளைப் பார்க்கிறான். அவனுக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. குருவின் உடம்பில் கணிகையின் ஆன்மாவைப் புகுத்தினால் என்ன என்று நினைக்கிறான். அப்படியே செய்கிறான்.

குரு எழுந்து நிற்கிறார். பணிப்பெண்ணைப் பார்க்கிறார். என்னை அணைத்துக் கொள் என்கிறார். சீடன் விழிக்கிறான். இறந்து போனவர் எப்படி பிழைத்தார் என்று தெரியாமல் திகைக்கிறான்.

குரு பணிப்பெண்ணைப் பார்த்து என்னை அணைத்துக் கொள் என்று மீண்டும் சொல்லுகிறார். அவள் விலகி ஓடுகிறாள். சீடனுக்கு ஒன்றும் புரியவில்லை. இந்த நேரத்தில் கணிகையின் தாய் மகளை அழைக்கிறாள். அவள் தத்துவம் பேசுகிறாள்.

பக்கத்தில் இருக்கும் மருத்துவர் நான் குளிகையைப் பொடி செய்து தருகிறேன். அவளுக்குக் கொடு. அவளைப் பாம்பு கடிக்கவில்லை. பேய் பிடித்திருக்கிறது என்கிறார்.

கணிகை "முட்டாள் வைத்தியனே உனக்கு சரியாக பேசவே தெரியவில்லை" என்று விளக்கம் கொடுக்கிறாள். மருத்துவன் "இவளை இலக்கணம் படித்த பாம்பு கடித்து இருக்கிறது. இவளிடம் பேச முடியாது" என்கிறான்.

இப்படியான விவாதம் நடந்து கொண்டிருந்த போது எமதூதன் வருகிறான். இங்கு பெரும் குழப்பம் ஏற்பட்டு விட்டது. இது நல்லதல்ல. இருவரின் ஆன்மாவையும் மாற்றி விடுகிறேன். அப்போதுதான் குழப்பம் தீரும் என்று நினைக்கிறான். இருவரின் உடல்களிலும் ஆன்மாவையும் மாற்றி விடுகிறான்.

இப்போது கணிகையின் உடலில் அவளது ஆன்மா வந்துவிட்டது. குருவின் ஆன்மா அவரது உடலில் புகுந்து விட்டது. குரு பழையபடி தத்துவம் பேசுகிறார். கணிகையும் பழைய நினைவில் பேச ஆரம்பிக்கிறாள்.

அவளுக்கு இப்போது நினைவு வந்துவிட்டது. கணிகையாகி விட்டாள். சீடனுக்கு ஒன்றும் புரியவில்லை. குரு சீடனிடம், வா நம் இடத்திற்குப் போவோம். ஆன்மா வேறு. உடல் வேறு என்பதை உனக்குப் புரிய வைக்கிறேன் என்கிறார்.

●

கட்டுரையாளர், ஓய்வுபெற்ற பேராசிரியர். நாட்டார் வழக்காற்றியல் மற்றும் சமூகப் பண்பாட்டு ஆய்வாளர்.



29.4.2024 அன்று மதுரையில் தமிழ்க் கவிஞர் திருநாள் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் அவ்வை ந.அருள், மதுரை மாவட்ட ஆட்சியர் மா.சௌ.சீதா, மதுரை மாவட்ட தமிழ் வளர்ச்சித்துறை துணை இயக்குநர் (பொ) ம.சுசிலா, சென்னை தமிழ் வளர்ச்சித்துறை துணை இயக்குநர் (நிரு) (பொ) கு.ப.சத்தியபிரியா, பொன்னேரி பிரதாப் மற்றும் என்சிபிஎச் மதுரை கிளை மேலாளர் இரா.மு.தனசேகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கட்டுரை



# தென்கிழக்காசியாவின் வரலாற்றாசிரியர் ஆர்.ஏ.எல்.எச்.குணவர்த்தனா

*(1938-2010)*

**கி.இரா.சங்கரன்**

உலகில் தென்கிழக்காசியாவின் வரலாற்றினை (south-east Asian history) அறிவியல்முறையில் ஆய்வுசெய்த வரலாற்று அறிஞர்களில் இலங்கையினைச் சேர்ந்த ஆர்.ஏ.எல்.எச்.குணவர்த்தனா (RALHG) முதல்வரிசையில் வைக்கப்படவேண்டியவர். இலண்டன் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் ஏ.எல்.பஷாம் அவர்களின் வழிகாட்டுதலில் முனைவர் பட்டம் பெற்ற அவர் சிங்களம், பாலி, பிராகிருதம், ஆங்கிலம் போன்ற மொழிகளில் நன்கு தேர்ந்தவர். தமிழ்மொழிச் சான்றுகளை புரிந்துகொள்வதில் திறம்கொண்டவர். தம் ஆய்வுக்களமாக தென்கிழக்காசியாவின் தொல்லியல், கல்வெட்டியல், இலக்கியம், நீர்ப்பாசனத் தொழில்நுட்பம், அரசுருவாக்கம் போன்றவற்றை தெரிவு செய்தார். இத்துறைகளில் அறிவியல்பூர்வமான முடிவுகளை வெளியிட்டார். பெருமளவில் இலங்கையிலும் இந்தியாவிலும் களஆய்வுகளை மேற்கொண்டார். இலங்கையின் கண்டிநகரில் அமைந்துள்ள பேராதனை பல்கலைக்கழகத்தில் வரலாற்று பேராசிரியராக பணியாற்றினார். அப்பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகவும் செயற்பட்டார். ஆக்ஸ்போர்ட், சிகாகோ, கேம்பிரிட்ஜ், கியோடோ பல்கலைக் கழகங்களில் வருகைதரு பேராசிரியராக பணியாற்றினார். அதிபர் சந்திரிகா குமாரதுங்காவின் அமைச்சரவையில் அறிவியல் & தொழில்நுட்பத்துறையின் அமைச்சராக பொறுப்பேற்றிருந்தார். இங்கு அவரது

ஆய்வுக் கட்டுரைகளின் வழியே அறியப்பட்ட கூறுகள் அவருக்கு மதிப்பேற்படுத்தும் பொருட்டு பகிரப்படுகின்றன.

அரசுருவாக்கம், *(state-formation)* நீர்ப்பாசனத் தொழில்நுட்பம் *(hydraulic engineering)* இவ்விரண்டிற்கும் இடையிலான தொடர்புகளை கல்வெட்டுகளிலும், கள ஆய்வுகளிலும் கண்டடைந்து அதனால் உண்டான சமூகப்பொருளியல் இயக்கத்தினை தம் கட்டுரைகளில் விளக்கினார். அரசு பற்றிய இவரது வாதத்தில் ஒருமுனைப்பட்ட அரசு, கூட்டுறவு அரசு இரண்டிற்கும் இடையில் அமைந்த நீர்ப்பாசனத் தொழில்நுட்ப மேலாண்மை போன்றவற்றினை விளக்குவது கருப்பொருளாக அமைந்தது.

**நீர்ப்பாசனத் தொழில்நுட்பம்** *(Hydraulic Engineering)*

உலகின் முதன்மையானதும் மிகச் சிறப்பானதுமான நீர்ப்பாசனத் தொழில்நுட்பம் வளமாக அமைந்த பகுதிகளாக மெசபடோமியாவும், அஸ்ஸீரியாவும் அறியப்படுகின்றன. அடுத்து எகிப்தும், சீனாவும் அம்மதிப்பினைப் பெறுகின்றன. தாய்லாந்தும் இலங்கையும் அதுபோன்ற சிறப்பிடத்தினை பெறுகின்றன. இவற்றுள் இலங்கையின் நீர்ப்பாசனத் தொழில்நுட்பம் மிகுந்த நுணுக்கம் கொண்டதாக அமைந்திருப்பதனை தம் ஆய்வில் வரைபடங்களுடன் RALHG விளக்கினார். கி.மு.3ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.3ஆம் நூற்றாண்டு வரையிலான அரசுருவாகும் காலகட்டத்திலேய இலங்கையில் பாசனத் தொழில்நுட்பம் செழிப்புற்றது என்பது இவரது கருத்தாகும். இத்துறையில் இவருக்கு ஆர்வமேற்படுத்திய *Joseph Needam* அவர்களை மறவாமல் குறிப்பிடுகிறார். மேற்சொல்லப்பட்ட நிலப் பிரதேசங்களில் இலங்கை தவிர மற்றவை வாய்க்கால் பாசனமுறையில் *(canal based irrigation system)* வளம்பெற்றவை. இலங்கையில் ஏரிப்பாசனம் *(tank-irrigation system)* பண்டுதொட்டு நிலவிவருகிறது. ஆற்றிலிருந்து வரும் நீரினை ஏரிகளில்/ குளங்களில் சேமித்து அவற்றினை தேவையான காலங்களில் குமிழி, மடைகள் *(piston sluice and cistern sluice)* வழியே வெளியேற்றி வேளாண்மைக்கு பயன்படுத்தும் முறையினை பண்டைக்காலத்தில் இலங்கை பின்பற்றியது. இம்முறையிணை நேரில் அறிவதற்கு களப்பணியினை மேற்கொண்டபோது ஏரியிலிருந்து நீரினை வெளியேற்றும் மேற்சொல்லப்பட்ட இருவகையான அமைப்புகளை RALHG கண்டார். இலங்கையிலிருப்பது போன்று மடையமைப்புகள் இந்தியாவில் வரலாற்று காலங்களில் இருந்தனவா என்பதனைக் கண்டறிவதற்கு இந்தியாவில் களப்பணியினை 1970களில் மேற்கொண்டார். தமிழ்நாட்டில் கங்கைகொண்ட சோழபுரத்தில் முதலாம் இராஜேந்திரன் (கி.பி.1012-1044) உருவாக்கிய பொன்னேரியில் அதுபோன்றதொரு மடையினைக் கண்டார். அதனடைப்படையில் வரைபடங்களுடன் அம்மடை இயங்கும் முறையினை உலகுக்கு வெளிப்படுத்தினார். இதுபோன்ற மடைகள் ஸ்பெயின் நாட்டில் இரண்டு இடங்களில் இருப்பதாக ஒருகுறிப்பு தந்தார். இப்படி இவரதுஆய்வு தென்கிழக்காசியா தொடங்கி ஸ்பெயின் வரை நீளப்பாய்ந்தது.



நீர்ப்பாசனத் தொழில்நுட்பத்தின் தலைமைக்கூறு நீரோட்டம். நிலப்பரப்பின் சரிவுத்தன்மைதான் *(slopeness)* புவியீர்ப்பு விசையினால் *(gravitation)* நீரினை வாய்க்கால் வழியே ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு இழுத்துச் செல்கிறது. எனவே, வாய்க்கால்களை அமைக்கும் போதும் பாசனஏரிகளை உருவாக்கும்போதும் நீர்வரத்துக்கு வசதியான சரிவான நிலப்பரப்பினை தெரிவுசெய்தல் முதன்மையானது. இங்கு நிலப்பரப்பியலின் இயற்கைத் தன்மைதான் *(geographical features)* நீர்ப்பாசனத் தொழில்நுட்பத்திற்கு தளம்அமைக்கிறது. இலங்கையில் பாசனக்குளங்கள் உருவாக்கப் படுவதற்கு இயற்கையாக அமைந்த கற்பாறைகள் கரைகளாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. இத்தெரிவினால் மூன்று நன்மைகள் உண்டு: (1) குறைவான மக்களின் உழைப்பே *(less quantum of human labour)* போதுமானது (2) வெள்ளக்காலங்களில் கரைகள் உடையப் போவதில்லை (3) கரைகளை வலுவாக்க அவற்றின்மேல் மரங்களை வளர்க்க வேண்டியதில்லை *(vegetation unwarranted)*. இதுபோன்று கற்பாறைகள் கரைகளாக அமைந்த குளங்களை தமிழ்நாட்டின் புதுக்கோட்டை மாவட்டத்தின் மலைக்குன்றுகள் சூழ்ந்த நார்த்தாமலை என்ற ஊரின் ஊர்க்குளமான அணிமத ஏரியில் காணலாம். இதன் காலம் சுமார் கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டு. ஆனால், இதனையும் பின்னே குறிப்பிட்டுள்ள பெருஞ்சுனையூரின் தொட்டிமடையினையும் RALHG அறிந்திருக்கவில்லை.

நீர்வளத்தினைக் கைக்கொள்வதன் வாயிலாக அதனை வேளாண்மைக்குப் பயன்படுத்தும் மக்களின் உழைப்பையும், உற்பத்தியினையும் அரசினால் கைக்கொள்ள முடியும். எனவே, இலங்கையில் அரசுகள் பெரிய ஏரிகளை/குளங்களை உருவாக்கின என்றார். தொடக்கத்தில் வேளாண் குடிமக்கள் தங்களுக்கான பாசன ஏரிகளை/குளங்களை தாமே உருவாக்கினர். ஆனால், அவை அளவில்சிறியன; தொழில்நுட்பத்தில் நுணுக்கமானவை. சிறிய ஏரிகள் என்பதிலிருந்து பெரிய ஏரிகள் உருவாக்கப்படுவதற்கு சமூகம்மாறிற்று என்பது ஒரு வரலாற்று நிகழ்வு. இலங்கையில் சக்கரவட்டகா என்றதொரு நீர் இறைக்கும் கருவி பாசன வேலையினை எளிதாக்கிற்று என்றார். அதேபோன்று மடைகள் பெரிய ஏரிகளின் கரையோரங்களில் அமைக்கப்பட்டதால் கரைகள் சிதைவடையாமல் இருப்பதற்கு ஏது செய்தது என்றார். இத்தொட்டிமடைகள் ஏரிகளின் உள்பகுதியின் தரைத்தளத்திலேயே *(bottom of the tank)* கரையினையொட்டி அமைக்கப்பட்டதால் நீர்த் தொட்டிக்குள் விழுந்து தொட்டியிலிருந்து தொடரும் கரைக்குக்கீழுள்ள தரைகீழ் வாய்க்கல் வழியே *(conduit)* வெளியேறும். இதனால், கரையினைத் தாக்கும் நீரின்அழுத்தம் மட்டுப்படுத்தப்பட்டு நீர் சீராகவெளியேறும். இத்தொட்டிமடை பெரும்பாலும் கருங்கற்களால் கட்டப்பட்டிருக்கும். இதன் தரைகீழ்வாய்க்கால் *(conduit)* நீர்க் கசியாதவாறு செங்கல் கட்டிட அமைப்பினால் மூடப்பட்டிருக்கும் *(overlaid)*. இதுபோன்றதொரு அமைப்பு புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள பெருஞ்சுனையூர் என்ற ஊர்க்குளத்தில் அமைந்துள்ளது. ஆனால், இத்தொட்டிமடை காலத்தால் பிந்தியது (கி.பி.1600). தமிழ்நாட்டில் ஊருக்கு பொதுவான குளங்கள் ஊர்க்குளங்கள் என்று சுட்டப்படுகையில் இலங்கையில் அவை *gamikavāvi* என்றும் பெரியகுளங்கள் *makāvāvi* என்றும் அழைக்கப்பட்டுள்ளன. ஒரு பெரியஏரியிலிருந்து நீரினை பிறிதொரு குளத்தில் தேக்கிவைத்து அதிலிருந்து நீரினை பகிர்ந்தளிக்கும் குளம் *dāṇavāvi* என்று அழைக்கப்பட்டுள்ளது *(distributing tank; supporting tank)*. இலங்கையில் இதுபோன்ற பாசனக்குளங்கள் கி.பி.2ஆம் நூற்றாண்டிலேயே உருவாக்கப்பட்டதற்கு கல்வெட்டுச்சான்றுகள் உண்டு எனக்கூறும் இவர் அங்கு கி.பி.நான்குமுதல் ஏழாம் நூற்றாண்டு வரையிலான காலகட்டத்தில் ஆறுதலை முறைகளில் அறுபதுக்கும் மேற்பட்ட பாசன ஏரிகள் உருவாக்கப்பட்டன என்றும், அதில் அரசர்களின் பங்கு பெரிதில்லை என்றும் கூறினார். இதன்பணிகள் கி.மு.மூன்றாம் நூற்றாண்டிலேயே தொடங்கப்பட்டதாகவும் இப்பணிகளால் விளைநிலங்கள் ஓராண்டிற்கு மூன்று முறை விளைந்தது என்றும் *RALHG* விளக்குகிறார்.

இலங்கையைப் பொறுத்து பாசனத் தொழில் நுட்பத்திற்கும் அரசுக்கும் இடையிலான தொடர்பு ஆர்வமூட்டும். தொடக்கத்தில் பெரும்பாலும் அரசின் விளிம்புநிலைப் பகுதிகளிலேயே பாசனத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன என்றும் இக்கட்டமைப்பில் அரசுத்தலையீடு நாட்டின் அனைத்துப்பரப்பிலும் நிகழ்ந்தது என்றும் கூறுவதற்கில்லை என்கிறார். இடைக்காலத்து தமிழ்நாட்டின் வரலாற்றின் சோழர்ஆட்சியில்கூட காவிரியின் வடிநிலப்பகுதி, கொள்ளிடப் பாசனப்பகுதி தவிர புதுக்கோட்டை போன்ற வரண்ட நிலப்பகுதியில் *(dry-zone)* பாசனக்குளங்களை அரசு உருவாக்கவில்லை. மக்களே உருவாக்கினர் என்பதனை கல்வெட்டுச்சான்றுகள் வழியே அறியலாம். இப்பகுதியில் ஊர்க்குளங்கள் ஊரார்களாலும் நாட்டுக்குளங்கள் நாட்டார்களாலும் ஆளப்பட்டன (வல்லநாட்டுக்குளம், கவிநாட்டுக் கண்மாய் போன்றன). இதைப்போன்று இலங்கையிலும் தனியாரும், குலத்தலைவர்களும் பாசனக்குளங்களின்மேல் ஆளுமை கொண்டிருந்தனர் என்கிறார் *RALHG*. இலங்கையில் கிடைத்த சான்றுகளின்படி வணிக அரசுக்கும் நீர்ப்பாசன அரசுக்கும் *(trading-state and hydraulic-state)* பெருத்த வேறுபாடில்லை என்பதும் வணிகத்தில் சேர்க்கப்பட்ட செல்வமே நீர்ப்பாசனச் சொத்தாக மாற்றப்பட்டது என்பதும் இவர் கூற்றாகும்.

**இந்தியாவும் இலங்கையும்**

புவியியலினடிப்படையில் இந்தியத் துணைகண்டமும் இலங்கைத்தீவும் அருகருகே அமைந்திருப்பதால் நீர்ப்பாசனத் தொழில்நுட்பப் பரிமாற்றம் ஏற்படுவதற்கு ஏதுவான சூழல் அமைந்திருக்கும் என்று *RALHG* கருதினார்.இலங்கையின் வரண்ட பகுதிகளில்தான் ஏரிப்பாசனம் பயன்பட்டது என்றும் இதுபோன்று தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகப் பகுதிகளிலும் ஏரிமுறை நீர்ப்பாசனம் பயன்பாட்டில் இருந்தது என்றும் தம் ஆய்வில் நிறுவினார். இங்கு சிறு சிறு அளவிலான ஏரிமுறை நீர்ப்பாசனம் அரசுருவாக்கக் காலத்திற்கு முன்பே வந்தது என்றும் இதே காலகட்டத்தில் *(megalithic period)* இரும்பின் பயன்பாடும் பானைவனையும் *(black and red ware)* தொழில்நுட்பமும் வந்தன என்பதும் இவர்கூற்று. பெருங்கற்காலத் தளங்கள், பாறைக்குன்றுகள், நீர்ப்பாசனஏரிகள் மூன்றும் நெருக்கமானத் தொடர்புடையன. இதற்கு தமிழ்நாட்டில் உள்ள சித்தன்னவாசல், நார்த்தாமலை, குடுமியான்மலை போன்ற இடங்களை சான்றாகக் காட்டலாம். இவ்விடங்களில் ஓரிரண்டு சதுர கிலோமீட்டர் பரப்பளவில் தொல்லியல் தளங்கள், இயற்கையாக அமைந்த மலைக்குன்றுகள், குடைவரைக் கோயில்கள், கட்டுமானக் கோயில்கள், பாசனக்குளங்கள் போன்றவை உள்ளன. இவை வரலாற்றின் அறுபடாதத் தொடர்ச்சியாகும். இந்தியாவிலும் இலங்கையிலும் பெருங்கற் காலத்தில் நெல்விளைச்சல் அறிமுகமானதாக *RALHG* கூறினார்.

தமிழ்நாட்டில் சங்ககாலம் எனப்படும் இரும்புக் காலத்தில் அரசுருவாக்கம் ஈடேறவில்லை. என்றாலு,தொடர்ந்துவந்த பல்லவர்-பாண்டியர்களால் ஆற்றுவளம் நிறைந்த பகுதிகளில் வடக்கிலும் தெற்கிலும் அரசுகள் எழுந்தன. ஆனால், இவ்வரசுகள் தோன்றும் முன்பே இங்கு சிறு சிறு பாசனக்குளங்கள் தோன்றியிருந்தன. ஆனால், பல்லவரின் எழுசிக்குப் பிறகுதான் பெரிய அளவிலான பாசனக்குளங்கள் உருவாக்கப்பட்டன என்கிறார் RALHG. ஆனால், அவை ஏற்கனவே பயன்பாட்டில் இருந்து வந்தவற்றின் விரிவாக்கமே என்பதனை நிலப்பரப்பியல் (geography) மூலமாகவும் உள்ளூர் நிலவமைப்பின் (topography) மூலமாகவும் அறியலாம். ஆனால், இலங்கையில் பல்லவர்களுக்கு முன்பே பெரியஅளவில் நீர்ப்பாசனத் திட்டங்கள் உருப்பெற்றன என்றார். இங்கு இந்தியாவும் இலங்கையும் சில பொதுவான பாசனத் தொழில்நுட்பக் கூறுகளைக் (shared basic features) கொண்டுள்ளன என்பதனை முன்வைக்கிறார். இதில் அடிப்படையான கூறு என்னவெனில் பாசனக்குளங்களின் கரைகளின் உள்பரப்பு கற்களால் (stone slabs) பதிக்கப்பட்டிருக்கும். இக்கற்பரப்பு குளத்திலிருந்து கரைநோக்கிவரும் நீரலையின் வேகத்தினை மட்டுப்படுத்தும். தமிழ்நாட்டின் வரலாற்று காலத்தில் உருவாக்கப்பட்ட பலகுளங்களில் இம்மாதிரியமைப்பினை காணலாம். ஒருவேறுபாடு இலங்கையில் ஏரியிலிருந்து நீரினை வெளியேற்றும்வழி (inlet) கரையின் ஓரத்தில் அமைந்துள்ளது. தமிழ்நாட்டில் அவ்வமைப்பு பெரும்பாலும் குளத்தின் நடுவில் அமைக்கப்பட்டுள்ளது; சில இடங்களில் ஓரத்தில் அமைந்துள்ளது. இலங்கையில் பெரும்பாலும் தொட்டிமடைகளே உண்டு. ஆனால், தமிழ்நாட்டில் பொன்னேரியின் தொட்டிமடை இலங்கையின் தொழில்நுட்பத்திலிருந்து பெரிதும் மேம்பட்டது, நுணுக்கமானது. அதில் குமிழிக்கான கூறுகளும் உண்டு.

வரலாற்றுக்கு முந்திய காலத்தில் (pre-history) இந்தியாவிலிருந்து இலங்கைசென்ற பாசனத் தொழில்நுட்பம் வளர்ச்சிபெற்று இடைக்காலத்தில் இந்தியாவிற்கு திரும்பியதற்கு வாய்ப்புண்டு என்று தென்கிழக்காசிய பாசனத் தொழில்நுட்பம் பற்றி முத்தாய்ப்பான கருத்தினை RALHG பதிவு செய்கிறார்.

**நீர் உரிமை**

இலங்கையில் கிறிஸ்து சகாப்தத்திற்கு முன்புவரை பெரும்பாலும் அரசுகள் வரண்டநிலப்பகுதிகளிலேயே இயங்கின. அவை பெரிதும் பாசனகுளங்களை, வாய்க்கால்களை சார்ந்திருந்தன. ஆனால், அவை அளவில் சிறியன. கிறிஸ்து சகாப்தத்தின் காலம்வரை பாசன ஏரிகளின் மீதான தனியார் உரிமை சான்றுகளில் பதியப்படவில்லை; கூட்டுரிமை வழக்கில் இருந்தது. கூட்டுமுயற்சியே பாசன ஏரிகளை உருவாக்கியது; பராமரித்தது. ஒரு ஊருக்கு ஒரு குளம் (one-village one-reservoir) என்ற கோட்பாடு நிலவியது. ஊர்க்குளம் பொதுவானது; நீர் பகிர்ந்தளிக்கப்பட்டது. ஏரிகளினருகே உள்ளவர்கள் அதிகமாகவும் தொலைவில் உள்ளவர்கள் குறைவாகவும் நீர் பெறுவதற்கு வாய்ப்பு இருந்தது. இதற்கு இயற்கையமைப்பும் காரணமானது. சடங்குகள் வழியேயும் வேறு கருத்தியல்கள் (rituals and ideologies) வழியேயும் நீரினைப் பயன்படுத்துவோரிடையே அதிகாரப்படிநிலை இருந்தது என்றும் இதனை சமூக-அரசியல்நிலை உறுதிசெய்தது என்றும் RALHG கூறியுள்ளார். ஆட்சியாளர்கள் நீர்ப்பாசனக் கட்டமைப்பினை உருவாக்குவதற்கு ஆணையிட்டவுடன் நேரடியாகப் பங்கு பெறவில்லை என்றும் தெரிவித்தார். சில பாசனக்குளங்கள் தனியாருக்கு உடைமையாக இருந்தபோது சிலகுளங்கள் இனக்குழுக்களுக்கு (lineage) சொந்தமாக இருந்தன என்றும் கூறினார். கிராமசமூகங்கள் சமத்துவமற்று இயங்கியபோது பலம்வாய்ந்த குலத்தலைமை பானத் தொழில்நுட்பத்தின்மேல் ஆளுமைகொண்டது. மடைகளின்மேல் ஆளுமைகொண்டவர்கள் குளத்திலிருந்து நீரினைத் திறக்கவும் நீர் வழங்கலைத் தவிர்க்கவும் முனைந்தனர். நீர்ப்பாசன நடவடிக்கைகளில் முன்பு குறிப்பிட்டது போன்று ஒரு குறிப்பிட்டநிலம் ஆண்டுக்கு மூன்றுமுறை பயிரினை விளைவித்தது. பெரிய அளவிலான பாசனகுளங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட வேளாண் ஊர்களுக்கு நீர்வசதியளித்தது. கி.பி.2ஆம் நூற்றாண்டில் பாசனக் குளங்கள் மீதான தனியார் உரிமை கூடுதலானது. பாசன நிலங்கள் விரிந்தன. வாழ்விடங்களும் பெருகின.

**அரசு**

அரசுருவாக்கத்தில் சமத்துவமின்மை நீர்ப்பாசனச் செயற்பாடுகள் பெரும்பங்கு வகித்தன. அரசுக்கும் மக்களுக்கும் இடைவெளி நீண்டிருந்ததால் அதனை இட்டுநிரப்புவதற்கு அரசர்கள் சடங்குகள் செய்யவேண்டியிருந்தது. இதனை ritual sovereignty என்ற கருத்தோடு ஒப்பிடலாம். பழங்குடித்தலைமைகள் (ancient chiefdoms) அரசமைப்புடன் (incorporated) ஒருங்கிணைந்த பிறகே பாசனத்தொழில்நுட்பத்தில் அரசின்தலையீடு எழுந்தது. அரசு எழுந்தபின் ஆளும் குடும்பத்தின் உறுப்பினர்கள் பிற வட்டாரங்களில் தலைவர்களாயினர். அரசு ஒருங்கிணைப்பு போர், மணவுறவின் (war and marriage alliance) மூலம் நிறைவேறியது என்பன இவரது கூற்று.

தென், தென்கிழக்காசியாவின் நாடுகளில் அரசுருவாக்கம் ஒருநிலப் பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்கு பரவுதல் அல்லது ஊடுபரவுதல் என்ற கருத்தியலின் (difussionist approach) அடிப்படையில் ஆய்வாளர்கள் ஆய்ந்து வருகின்றனர். இது போன்று கூறுபவர்கள் அரசுருவாக்கத்தில் உள்ளெழுச்சியாக நிகழும் சில கூறுகளை கவனிக்கத் தவறுகின்றனர் என்றும்

மௌரிய அரசின் தாக்கத்தால் தென்னெல்லையில் சோழர், பாண்டியர் அரசுகள் தோன்றியதுபோல் இலங்கையிலும் அரசு எழுந்தது என்றும் கூறினார். இதற்கு வெளிக்காரணிகள் உண்டு. என்றாலும் உள்காரணிகளும் *(indigenous phenomenon)* உண்டு. சடங்கு, அதிகாரம் *(ritual, power)* பற்றி தெளிவற்ற கருத்து நிலவுவதால் அரசு பற்றிய ஆய்வு குழப்பத்தில் உள்ளது. முடிசூடும் விழாவின் அடிப்படையில் மட்டுமே அரசுநிறுவனம் ஆயப்படுகிறது. பிறவகைக் காரணிகளையும் ஆயவேண்டும். முடிசூடினால் மட்டுமே அரசு உருவாகாது என்பதும் இவரது கருத்தாகும்.

**கல்வெட்டுகள்**

இலங்கையிலும் தமிழ்நாட்டிலும் கிடைக்கின்ற பழங்கல்வெடுகளைப் படித்து அவற்றுக்கு விளக்கம் தருவதில் RALHG நன்கு தேர்ந்தவர். இலங்கையில் அரசு உருவாகும் சூழலையொட்டி அங்கு பொதுவான எழுத்துவடிவம் தீவுமுழுமைக்கும் வழக்கில் இருந்தது என்றார். இலங்கையின் அரசு எழுச்சிக்கு முன்பிருந்த சூழலை விளக்கும் RALHG அங்கு269 தலங்களில் கிடைக்கின்ற 1289 கல்வெட்டுகளையும் பகுப்பாய்வு செய்தார். அவற்றை தமிழ்நாட்டின் கல்வெட்டு செய்திகளோடு ஒப்பிட்டார். இலங்கையின் கல்வெட்டுகளில் குறிக்கப்பட்டுள்ள வட்டாரத் தலைவர்கள் *(minor principalities)* குரிசில் தலைவர்களை சுட்டும் பட்டங்களான *Rājha, Rājā, Gāmaṇi, Gamiṇi Āyā* போன்ற சொற்களை ஆய்ந்தார். இவற்றில் முதலிரண்டும் ஆள்பவர்களின் கௌரவப்பட்டங்கள். என்றாலும், பிறர் இவற்றை *Āyā* என்ற சொல் *Ayyā* என்ற பாலிமொழிச் சொல்லிலிருந்து வந்தது என்றும் நிறுவ முயன்றனர். ஆனால், *Ārya* என்ற சமஸ்க்ருத சொல்லின் பாலிமொழிச்சொல் *Āriya* என்பதாகும். ஆனால், இச்சொற்கள் பண்பாட்டுநிலையில் பயன்படுத்தப்பட்டன; அரசியல் நிலையில் அன்று என்றார் RALHG.

இலங்கையின் பண்டைய வரலாற்று காலத்தில் வெவ்வேறு நிலப்பகுதிகளை வெவ்வேறு வட்டாரத் தலைவர்கள் ஆண்டனர். அவை ஒரேமாதிரியான ஆட்சிமுறையினை கொணடவையன்று. இவர்களில் *parumaka* என்பவர்களின் ஆட்சிநிலை பற்றி அறிவது எளிதல்ல. இவர்கள் பெரிதும் கௌரவத்தினை விரும்புகிறவர். கொடையளித்தல் மூலம் கௌரவத்தினைப் பெறுவதற்கு நினைப்பவர்கள். ஆட்சியாளர்கள் பருமகர்களை தம் கட்டுக்குள் வைத்திருக்க வேண்டும். பல பருமகர்கள் படைத் தலைவர்களாக *(troop leaders)* இருந்தனர். கல்வெட்டுகளில் பல அரசு அலுவலர்களும் குறிக்கப்பட்டுள்ளனர். பல பருமகர்கள் ஆட்சியாளர்களின் குடும்பத்துடன் மணவுறவு கொண்டனர். இதனால் அரசு வலுப்பெற்றது.

சுருக்கமாக சொல்வதானால், நீப்பாசனத் தொழில்நுட்பத்தினைப் பெருக்கவும், கல்வெட்டுச் சான்றுகளைப் பொறிக்கவும் இரும்புத் தொழில்நுட்பம் தலையாய ஒன்று. இத்தொழில்நுட்பம் வேளாண்மைக்கான உழுபடைகருவிகளையும், போருக்கான கருவிகளை வடிக்கவும் தேவை. அப்போது எழுத்தும் தோன்றியது, சமயமும் வந்தது, அரசும் எழுந்தது. போரின் மூலமாகவும் திருமணவுறவு மூலமாகவும் அரச குடும்பங்கள் வட்டாரத் தலைமைகளை தம் கட்டுக்குள் இருத்தின. அரசு சடங்குகள் அறிமுகப்படுத்தப்பட்டன. மையத்தில் அரச குடும்பத்தினரும் விளிம்பு நிலைகளில் அவர்களோடு மணவுறவு கொண்ட வட்டாரத் தலைவர்களும் ஒருங்கிணைந்து நீர்ப்பாசனத் தொழில்நுட்பத்தினை காத்துவந்தனர். இதனை வேளாணூர்களில் வேளாண்குடிகள் மேற்கொண்டனர். இங்கு அதிகாரம் பகிரப்பட்டது, ஒருமுனைப்பட்டதல்ல *(not centralised but shared power)* என்பதே RALHG அவர்களின் கருத்தியலாகும். இவற்றையெல்லாம் கணிப்பதற்கு மார்க்ஸ் முன்மொழிந்த வரலாற்று இயங்கியல் பொருள்முதல் வாதம் என்ற கொள்கையே இவரின் ஆய்விற்கான திறவுகோலாக அமைந்தது. இதுவே *Karl Augustus Wittfogel* முன்மொழிந்த *Oriental Despotism* என்ற கோட்பாட்டினை ஒடிக்கிறது.

**R.A.L.H.Gunawardana's select works directly related to Hydraulic State and Society.**


1. *R.A.L.H.Gunawardana, Inter-societal Transfer of Hydraulic Technology in Pre-colonial South Asia: Some Reflections Based on a Preliminary Investigation in Southeast Asian Studies, Vol.22, No.2, September 1984. pp.115.142.*

2 *……………….Cistern Sluices and Piston Sluices in Sri Lanka Journal of Humanities, Vol.10, Nos,i&2, 1984 published in 1987.pp.87-104.*

3 *………………..Hydraulic in Ancient Sri Lanka: The Cistern Sluices in Rat Paranavitana Commemoration Volume (Leelananda Prematileeke et.al), Leiden, 1978. pp.61-74.*

4 *………………….Social Function and State Political Power: A Case Study of State Formation in Irrigation Society in The Indian Historical Review Vol. IV, No.2, 1978.pp.259-273.*

5 *………………..Total Power or Shared Power? A Study of the Hydraulic State and its Transformations in Sri Lanka from the Third to the Ninth Century A.D. Paper presented to the Symposium on the Evolution of Political Organisations, Inter congress, international Union of Antrhopological and Ethnological Sciences, Amsterdam, April, 1981. Later it was published in The Indian Historical Review, 1981*


●


கட்டுரையாளர், ஓய்வுபெற்ற பேராசிரியர்.

# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் மதுரை கிளையின் சார்பாக நடைபெற்ற நிகழ்ச்சிகள்

21.04.2024 அன்று உலகப் புத்தக தினத்தை முன்னிட்டு சாத்தூரில் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம், எழுத்தாளர் தனுஷ்கோடி ராமசாமி அறக்கட்டளை இணைந்து நடத்திய விழாவில் நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புத்தகக் கண்காட்சி அரங்கை தொழிலதிபர் திரு.*L.P.*ஆறுமுகச்சாமி அவர்கள் திறந்து வைத்தார். விழாவில் த.க.இ.பெ.மாநில பொதுச் செயலாளர் மருத்துவர் த.அறம், *AITUC* மாநிலத் தலைவர் காசி விஸ்வநாதன் மற்றும் மதுரை கிளை மேலாளர் இரா.மு.தனசேகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.





23.04.2024 அன்று உலகப் புத்தக தினத்தை முன்னிட்டு *Madurai Bench Of Madras High Court Bar Association (MMBA)* மற்றும் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் இணைந்து நடத்திய புத்தகக் கண்காட்சியை மூத்த வழக்கறிஞர் திரு.மீனாட்சி சுந்தரம் அவர்கள் துவக்கி வைத்தார். விழாவில் என்சிபிஎச் முதுநிலை விற்பனைச் சீரமைப்பாளர் அ.கிருஷ்ணமூர்த்தி, மதுரை மண்டல மேலாளர் ரா.மகேந்திரன், மதுரை கிளை மேலாளர் இரா.மு.தனசேகரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

23.04.2024 அன்று உலகப் புத்தக தினத்தை முன்னிட்டு நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் மற்றும் விகடன் பிரசுரம் இணைந்து நடத்திய புத்தகக் கண்காட்சியை த.க.இ.பெ. மதுரை மாவட்டத் தலைவர் கவிஞர் மு.செல்லா அவர்கள் துவக்கி வைத்தார். விழாவில் தமிழாசிரியர் ஞா.சந்திரன், கவிஞர் இரா.ரவி, முனைவர் ஆ.த.பரந்தாமன் முனைவர் மீ.மருதுபாண்டியன், தமிழாசிரியர் அ.சிவா, டாக்டர் திருஞானம்பள்ளி தலைமை ஆசிரியர் ஆ.சரவணன், மற்றும் என்சிபிஎச் முதுநிலை விற்பனைச் சீரமைப்பாளர் அ.கிருஷ்ணமூர்த்தி, மதுரை மண்டல மேலாளர் ஆர்.மகேந்திரன், மதுரை கிளை மேலாளர், இரா.மு தனசேகரன், ஷோரூம் மேலாளர் துரைராஜ், கணக்காளர் சதீஸ் குமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.





25.04.2024 அன்று உலகப் புத்தக தினத்தை முன்னிட்டு இராமநாதபுரம் நூலக ஆணைக்குழு, மாவட்ட மைய நூலக வாசகர் வட்டம் மற்றும் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் இணைந்து நடத்திய புத்தகக் கண்காட்சியை இராமநாதபுரம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் மதுக்குமார் அவர்கள் திறந்து வைத்தார். விழாவில் மாவட்ட நூலக அலுவலர் த.இளங்கோ, வாசகர் வட்டத் தலைவர் மங்கள சுந்தரமூர்த்தி மற்றும் என்சிபிஎச் மதுரை மண்டல மேலாளர் ஆர்.மகேந்திரன், மதுரை கிளை மேலாளர் இரா.மு.தனசேகரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கட்டுரை



# தமிழ்ஒளியின் காப்பியங்களில் சாதி எதிர்ப்பு

முனைவர் க.சேகர்

ஒடுக்கப்பட்ட மக்களுக்காகத் தன் வாழ்நாளைச் செலவிட்டவர். மிக எளிய குடும்பத்தில் பிறந்து முழு நேரப் படைப்பாளியாகவும், களச்செயல்பாட்டாளராகவும் வாழ்ந்தவர். காப்பியங்கள், கவிதைகள், குறுநாவல்கள், சிறுகதைகள், ஓரங்கநாடகங்கள், குட்டிக்கதைகள், விமர்சனக்கட்டுரைகள், ஆய்வுநூல்கள் எனத் தமிழில் உள்ள அனைத்து இலக்கிய வகைகளையும் எழுதியவர்.

சமுதாய முன்னேற்றத்திற்குப் பெருந்தடையாக இருப்பது சாதி, ஒடுக்கப்பட்ட சமுதாயத்தில் பிறந்ததனால் சாதியின் கொடுமைகளை அனுபவித்தவர். அதனால், தான் அனுபவித்த சாதிக் கொடுமையைத் தான் படைத்த காவியங்களுள் பதிவு செய்கிறார். எனவே அவருடைய காப்பியங்களுள் விரவிக் கிடக்கும் சாதி எதிப்புக் கருத்துக்களை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தலித்துகளைத் தனது காப்பிய நாயகர்களாக வடித்து, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு இலக்கிய மதிப்புக் கொடுத்தவர் கவிஞர் தமிழ்ஒளி. ‘நிலைபெற்ற சிலை’ ‘வீராயி’ ‘மேதின ரோஜா’ ஆகிய காவியங்கள் தலித்துகளை முதன்மைப் பாத்திரங்களாகக் கொண்டு படைக்கப்பட்ட காவியங்கள்.

**நிலை பெற்ற சிலையில் சாதி எதிர்ப்புக் கருத்துகள்**

ஒடுக்கப்பட்ட சாதியைச் சார்ந்தவர் வஞ்சி. அவள் மேல்சாதி ஆடவனைக் காதலிக்கிறாள். தாழ்த்தப்பட்டவர் ஆதிக்கச் சாதியினரை காதலித்தால் சமுதாயத்தில் எதிர்நோக்கும் பிரச்சனையை இந்தக் காப்பியம் பேசுகிறது.

**சோலையில் காதலர்கள்**

ஊருக்குத் தென்திசையில் அமைந்த குளிர்ந்த தென்றல் உலவிடும் சோலையில் ஒருநாள் மருதவாணனும் வஞ்சியியும் சந்தித்து காதல் மொழி பேசிக்கொள்கின்றனர். நேரம் போவதறியாமல் காதலை வளர்க்கின்றனர். திடீரென்று மருவாணனின் தந்தை சோலைக்கு வந்து விட காதலர்கள் நடுங்குகின்றனர். அப்போழுது மருதவாணனின் தந்தை பேசும் பேச்சு சாதி ஆதிக்க உணர்வையும், பணக்காரச் செருக்கையும் காட்டுவதாய் உள்ளது.

“கீழ்சாதி நாயின் மேல் ஆசை வைத்தாய்?
ஒடுங்கியுமே கிடக்கின்ற ஏழையெங்கே?
ஒளிர்செல்வம் படைத்திடும் உயர்வும் எங்கே?
கடும்பாம்பு போல் எனக்கு மகனாய் வந்த
கழுதையே”1

தன் தந்தையின் பேச்சு மருதவாணனுக்குப் புரட்சிகர எண்ணத்தை உருவாக்கியது.

"பிறப்பாலே தாழ்வேற்றம் கருதுதற்கும்
கோழையர் என்றொரு கும்பல் இருப்பதாலும்
கொடுஞ் சூழ்ச்சியாலுமே ஆகும்"[2]

என்ற எண்ணம் மருதவாணனுக்கு எழுகிறது. மருதவாணன் சமுதாயப் பணிக்குத் தன்னை ஒப்படைத்துவிடுகிறான். சாதி ஏற்றத்தாழ்வையும், பொருளாதார பேதத்தையும் ஒழிப்பதே தன் வாழ்நாள் கடன் என்று முடிவுக்கு வருகிறான்.

"இடியும்வரை பணக்காரக் கோட்டை, சாதி
இழிவுடனே பொருளாதார ஏற்றத்தாழ்வனைத்தும்
ஒடியும் வரை தொண்டாற்றும் பணிக்கென்
உயிர் தந்தேன்"[3]

ஆலை முதலாளிக்கு வஞ்சியை அவளுடைய தாய் திருமணம் செய்துவைக்க முனைகிறாள். இதனைக் கேட்டு மருதவாணனின் தந்தை மகிழ்ச்சியடைகிறான்.

"கிளிமூக்கன் தன்மகனைக் கெடுத்து விட்டக்
கீழ்ச்சாதி வஞ்சியுமே தொலைந்தாள் என்றே
உளிமூக்கில் பொடியுறிஞ்சி உவகைக் கொண்டான்"[4]

மேலும் தன் மகன் தன்னிடத்தில் கோபம் கொண்டதை எண்ணி மருதவாணனின் தந்தை

"கெட்ட சாதியினில் பிறந்த அவ்வஞ்சிப்
பெண்ணால்
துளிமூக்கில் கோபத்தை ஏற்றிக் கொண்டு
தொடைதட்டினான் சண்டைக் கென்னிடத்தில்"[5]

என்று பேசுகிறான். மக்களுக்கு இடையே காணப்படும் சாதி ஏற்றத்தாழ்வை நீக்கி சமத்துவத்தை உருவாக்க வேண்டும் என்பது கவிஞர் தமிழ்ஒளியின் எண்ணம். அந்த எண்ணத்தை மருதவாணனின் கூற்றாக

"ஓரினத்து மக்களுள்ளே பிரிவும் சாதி
உண்டாக்கித் திண்டாடும் நிலையும் மக்கள்
பேரியலை மறந்து பொருள் ஏற்றத் தாழ்வால்
பெருங்கேடு விளைவிப்பதுவும் விதியைக்கூறிப்
பாரியலில் செந்தமிழர் ஏற்றம் கொள்ளும்
பாதையினை அடைப்பதுவும் யாவும் இங்கே
ஓர் நொடியில் விழச்செய்வோம்"[6]

ஆலை முதலாளி வஞ்சியைத் தன் வீட்டில் அடைத்துவைக்கிறான். மருதவாணன் அங்கு வர அவனைக்கண்ட வஞ்சி தாவி வந்து தன் காதலன் மருதவாணனை அணைத்துக் கொள்கிறாள். ஆலை முதலாளியின் துப்பாக்கிச் சூட்டிற்குக் காதலர்கள் இருவரும் பலியாகிறார்கள்.

உயர்சாதி இளைஞனும் தலித்பெண்ணும் காதலித்தால் திருமணம் செய்ய முடியாமல் இறப்பை எதிர்நோக்குவர் என்பது இந்தச் சமூகத்தில் காணப்படும் நியதி என்பதை இந்தக் காப்பியம் உணர்த்துகிறது.

**வீராயி காப்பியத்தில் சாதி எதிர்ப்பு**

சாதிப் படிநிலையில் கீழாக இருக்கும் தலித் மக்களைத் தலை நிமிரச்செய்து போராடத்தூண்டும் விடுதலை இலக்கியம் 'வீராயி.'

கவிஞர் தமிழ்ஒளியின் படைப்பு குறித்து சஞ்சீவி அவர்கள் ''காலம் காலமாக உழைத்து உழைத்து ஏமாற்றங்களையே எதிர்கொண்டு வாழும் மக்களின் துன்ப துயரங்களை உணர்வுப் பூர்வமாக ஏற்றுக் காவியம் படைத்த மக்கள் கவிஞராகவே தமிழ்ஒளியை அறியச் செய்தது''[7] வீராயி காப்பியத்தைப் படிக்கையில் சஞ்சீவி அவர்களின் கூற்று உண்மையெனத் தெரியவருகிறது.

ஒடுக்கப்பட்ட சாதியைச் சார்ந்த வீராயி பெருகிவரும் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்படுகிறாள். வெள்ளத்தில் அடித்துவரப்பட்ட வைக்கோல் போர் மீது ஏறி வீராயும், அவள் தந்தையும் வருகின்றனர். அவர்களைக் காப்பாற்ற வேடிக்கை பார்க்கும் சிலர் நினைக்கின்றனர். அடித்து வரப்பட்டவர்கள் தாழ்த்தப்பட்டவர்கள் என்று தெரிந்ததும் காப்பாற்றுவதைக் கைவிடுகின்றனர்.

"பயப்பட்டார் பறையர்களைத் தொட்டெடுத்து
விட்டால்
பார்ப்பவர்கள் என்சொல்வார்கள் என்றொதுங்கிப்
போனார்"[8]

மாரிக்கிழவனும் வீராயும் பிழைப்பதற்காக ஆப்பிரிக்க நாட்டுக்குச் செல்கின்றனர். அங்கே மாரிக்கிழவன் பாம்பு கடித்து இறக்க, துயரம் தாளாத வீராயி தன்னை மாய்த்துக் கொள்ள நினைக்கிறாள். மேல்சாதியைச் சார்ந்த ஆனந்தன் அவளை மீட்கிறான். இருவரும் தாய்நாடு திரும்புகின்றனர். ஆனந்தனின் வீட்டில் வீராயி இருப்பதைக் கண்ட மேல்சாதியினர், ஆனந்தனின் தந்தையிடம்

"இந்தப்பெண் புதுப்பட்டி மாரிமகள் அன்றோ
இல்லத்துள் பறைச்சியினை எப்படி நீர் சேர்த்தீர்
சொந்தத்தை உம்மோடு நாங்களெல்லாம்
கொள்ளல் தோஷமெனக் கருதுகிறோம்."[9]

என்று கூறுவதில் தலித் மக்களை உயர்சாதியினர் தம் இல்லத்தில் சேர்க்கமாட்டார்கள் என்று தெரியவருகிறது.

ஆனந்தனின் தந்தைக்கு வீராயி தாழ்த்தப்பட்டவள் என்று தெரிந்ததும் தன் மகன் மீது கோபம் கொள்கிறார். மேலும் தன் சாதி ஆதிக்கத்தை நிலை நிறுத்தும் பொருட்டு

"ஆண்டு சில ஆயிற்றுப் பறைப்பெண்ணும் ஓடி
ஆச்சரியம்! இங்கிப்போ தெப்படியோ வந்தாள்
மாண்டொழிந்து போனாலும் கடுகுக்குக் காரம்
மறைந்திடுமோ? யாமெல்லாம் ஏழ்மையினால் காய்ந்த
பூண்டாக மாறிடினும் குலத்தன்மை மாறோம்"[10]

என்கிறார்.

தன் மனைவியைப் பார்த்து

"அடி, நீலி நீ பெற்ற மகன் ஒழுங்கைப் பாரு
ஈனநாய்ப் பறைச்சியினை இங்கழைத்து வந்தான்
என் மானம் போகிறதே, என்னடி நான் செய்வேன்"

(ப.182 கவிஞர் தமிழ்ஒளி காவியங்கள்)

என்று கூறும் கூற்றிலிருந்து தலித்துகளைச் சாதி பேர் சொல்லி அவமானப்படுத்துவதைப் பார்க்க முடிகிறது.







ஆனந்தனுக்கும் வீராயிக்கும் திருமணம் நடக்கும் செய்தி கேட்ட ஆனந்தனின் தந்தை ஊர் மக்களை அழைத்துச் சென்று, திருமணம் நடக்க இருக்கும் வீட்டிற்கே தீவைத்து விடுகிறார்.

**"உறுமியுமே செல்லப்பக் கவுண்டரவர்; வந்தார்**
**நேரினிலே கண்டார்கள் பறைச்சியுடன் குந்தி**
**நிமிர்ந்த வண்ணம் இருக்கின்றான் ஆனந்தன்**
**மாளத்தான் போகின்றான் ஆனந்தன் என்று**
**மார்தட்டிக் தடிகளுடன் சூழ்ந்தார்கள் அங்கே**
**கூளத்தைச் சிதைப்பது போல் குடிசையினைச்**
**சாய்த்து"[11]**

**மேதின ரோஜாவில் சாதி எதிர்ப்பு**

கண்ணன் தலித் மக்களின் தோழனாக இருந்து தலித்துகளின் நலனுக்காகச் சங்கம் அமைத்துச் சேவை செய்கிறான். கண்ணனுக்கும் உறவுக்காரப் பெண் இராதைக்கும் திருமணம் நிகழ இருந்த நேரத்தில் சேரிப் பகுதியில் தீ பற்றி எரிகிறது. கண்ணன் திருமணத்தை நிறுத்திவிட்டு சேரிக்குச் சென்று தீயை அணைக்கிறான். முகூர்த்த நேரம் கழிந்ததால் திருமணம் தடைபடுகிறது. இராதையினுடைய தந்தைக்குக் கண்ணன் மீது அளவுகடந்த கோபம் ஏற்படுகிறது.

"பறையரின் கூரை பற்றி எரிந்தால்
இறைவன் ஆணை இருந்ததப்படி
மாரிப் பறையன் மகளொடு கூடும்
சேரிப் பறையன் சிறுபயல் கண்ணன்
ஆதிநாள் தொட்டே அகிலத்திருந்த
ஜாதியும் பெரியோர் தகைமையும் குன்றப்
பறையன் கண்ணன் பழியை விளைத்தான்"[12]

என்று கண்ணனை வசைபாடுகிறார்.

ராதையின் தாய், தன் கணவனிடம் வரப்போகிற மருமகனை ஏசாதே என்று

"பறையன் என்று பழித்திடல் வேண்டா
முறையில் மருமகன் முறையோ
(ப.193 தமிழ்ஒளி காவியங்கள்)

என்றாள்

அதற்கு இராதையின் தந்தை
"நீயும் பறைச்சி நிசம்நிச"
(ப.193 தமிழ்ஒளி காவியங்கள்)

என்றாள்

கண்ணன் சேரி மக்களுக்குத் தொண்டு செய்வது இராதையின் தந்தைக்குப் பிடிக்கவில்லை. கண்ணன் நமக்கு எதிராகச் சேரிமக்களை ஏவி விடுகிறான். அவனை ஒழிக்க வேண்டுமென சூளுரைக்கிறான்.

திட்டமிட்டபடி நிலவுடைமையாளர்கள் சேரிக்குச் சென்று தீ மூட்டுகின்றனர். அதே சமயம் காவல் துறைக்கும் தகவல் அனுப்புகின்றனர். தீயை அணைத்துக் கொண்டிருந்த கண்ணனைக் காவலர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தி உயிரை மரிக்கின்றனர்.

'வீராயி', 'நிலைபெற்ற சிலை', 'மேதினரோஜா' மூன்று காவியங்களும் ஒடுக்கப்பட்ட மக்கள் அனுபவிக்கும் சாதிக் கொடுமையையும் பொருளாதார சுரண்டலையும் பேசுகின்றன. இவர் பொதுவுடமை இயக்கக் கொள்கையை ஏற்றுக்கொண்டாலும் பிற பொதுவுடைமை இயக்கப் படைப்பாளியிடமிருந்து முற்றிலும் வேறுபட்டவர். இடதுசாரி இயக்கப் படைப்பாளர்கள் சாதியத்தை நேரடியாகத் தம் படைப்புகளில் வெளிப்படுத்த மாட்டார்கள். பொருளாதார ஏற்றத்தாழ்வு நீங்கினாலே சாதி ஒழிந்துவிடும் என்பது அவர்களுடைய கருத்து. ஆனால் தமிழ்ஒளி பொருளாதார ஏற்றத்தாழ்வுக்கு இணையாகச் சாதி ஏற்றத்தாழ்வைத் தம் படைப்புகளில் சித்திரித்துக் காட்டுகிறார். ஊர் என்றும் சேரி என்றும் சமூகம் பிரிந்திருக்கக் கூடாது; தீண்டாமை ஒழிக்கப்பட வேண்டும்; சாதிப் பாகுபாடு களையப்பட வேண்டும் என்பது தமிழ்ஒளியின் சிந்தனை முழுவதும் பரவியிருந்தது என்பதை அவரது படைப்புகளின் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

**சான்றெண் விளக்கம்**


1. கவிஞர் தமிழ்ஒளி, கவிஞர் தமிழ்ஒளி காவியங்கள், ப.61. கவிஞர் தமிழ்ஒளி நூற்றாண்டு விழாக்குழு வெளியீடு, சென்னை-1 முதல் பதிப்பு 2016.
2. மேலது, ப.65
3. மேலது, ப.76
4. மேலது, ப.84
5. மேலுது, ப.84
6. மேலது, ப.100
7. செ.து. சஞ்சீவி, இந்திய இலக்கியச் சிற்பிகள், தமிழ்ஒளி, ப.8 சாகித்திய அகாதெமி சென்னை-18
8. கவிஞர் தமிழ்ஒளி, கவிஞர்தமிழ்ஒளி காவியங்கள், ப.136
9. மேலுது, ப.181
10. மேலுது, ப.181
11. மேலுது, ப.186
12. மேலது, ப.193


●

கட்டுரையாளர், இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,
மாநிலக் கல்லூரி, சென்னை – 05

# நெஸ்லிங் வெளியீடாக
# உலகப் புகழ்பெற்ற சிறார் கதைகள்




₹ 80/-




₹ 140/-




₹ 99/-




₹ 99/-




₹ 99/-




₹ 99/-




₹ 50/-




₹ 110/-




₹ 105/-




₹ 95/-




₹ 50/-




₹ 65/-

**நெஸ்லிங் புக்ஸ் பப்ளிஷிங் அன்ட் டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் (பி) லிட்.,**

41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.

☎ 044 - 26251968, 26258410, 48601884 | www.ncbhpublisher.in | email: nestlingbooks@gmail.com

கட்டுரை




# இணைய இதழ்கள்: ஆறாம் திணை நினைவுகள்

மூ. அப்பணசாமி

கணித்தமிழில் முன்னோடியான சிங்கப்பூர் நா.கோவிந்தசாமி 1997இல் கணித்தமிழுக்கான முதல் மாநாட்டை நடத்தியபோது, அப்போதைய முக்கியமான பிரச்சினைகளுள் ஒன்று, இணையத்தில் தமிழில் தட்டச்சு செய்வது. அப்போது எழுத்துரு, குறியாக்கம் ஆகிய முயற்சிகளை மயிலை கல்யாணசுந்தரம், கண்ணன், முத்து நெடுமாறன், சிங்கப்பூர் கோவிந்தசாமி என ஒருசிலர்தான் மேற்கொண்டுவந்தார்கள். அந்த நேரத்தில், முத்து நெடுமாறன் தமிழ். நெட் என்ற இணையதளத்தைத் தொடங்கினார். ஸ்டூடன்ட் ஜெராக்ஸில் இந்தாம்.காம் என்ற இணையதளத்தைத் தொடங்கினார்கள். அவற்றையெல்லாம் இணையப் பத்திரிகைகள் என்று சொல்ல முடியாது. நூல்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகள், கேட்டு வாங்கிய கட்டுரைகள் அடங்கிய தளம் என்று சொல்லலாம். தமிழ் குறித்த நல்ல கட்டுரைகள், படைப்புகளை இணையத்தில் தொகுக்கும் பணி என்று கூறலாம். இதற்காக நிறையப் புத்தகங்களைப் படித்து, தமிழ் சார்ந்த விஷயங்களைத் தொகுத்து அவற்றைத் தட்டச்சு செய்து இணையத்தில் ஏற்றினார்கள். இணையத்தில் தமிழ் உள்ளடக்கங்கள் தேவை என்ற எண்ணத்தோடு மதுரைத் திட்டமும் கல்யாணசுந்தரத்தால் தொடங்கப்பட்டது. தமிழின் பண்டைய இலக்கியங்கள் முதல் நவீன இலக்கியங்கள் வரை இணையத்தில்

தொகுக்கும் திட்டம். உலகின் பல பாகங்களில் வாழும் தமிழர்கள் தன்னார்வலர்களாக முன்வந்து இப்பணியை மேற்கொண்டனர். ஒருவர் தட்டச்சு செய்து தருவார், இன்னொருவர் மெய்ப்புத் திருத்தித் தருவார். இப்படி அத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.

அதையடுத்து இணையதளம் ஒன்றை ஆண்டோ பீட்டர் ஆரம்பித்தார். அவரது தளத்தில் சினிமா சார்ந்த தகவல்கள் வெளிவந்தன. இப்படியொரு சூழலில்தான் 1998இல் 'ஆறாம் திணை' ஆரம்பிக்கப்பட்டது. ஏற்கெனவே 'சென்னை ஆன்லைன்' என்ற பெயரில் சென்னை தொடர்பான தளம் ஒன்று ஆங்கிலத்தில் நடத்தப்பட்டு வந்தது. அவர்களுக்குத் தமிழில் ஓர் இணைய இதழைக் கொண்டுவர வேண்டும் என்ற எண்ணம் உருவானது. அப்படித் தொடங்கப்பட்டதுதான் 'ஆறாம் திணை.' கணித்தமிழ் பெரியளவில் வளர்ச்சி பெற்றிராத, மின்னஞ்சல் என்பதே ஆச்சரியமாகப் பார்க்கப்பட்ட காலத்தில் நடத்தப்பட்ட இதழ் அது. தமிழில் ஐந்து திணைகள் உண்டு. மெய்நிகர் வெளி எனப்படும் இணையவெளியை ஆறாம் திணை என்று குறிக்கும் வகையில் அந்தப் பெயரைச் சூட்டினோம். உலகத் தமிழர்களை இணைக்கும் உறவுப்பாலம் என்று துணைத்தலைப்பு வைத்தோம்.

இணையம் என்பதே அப்போது புதிய சொல். இன்டர்நெட் என்பதற்கான தமிழ்ச் சொல் குறித்து பெரும் விவாதம் நடந்தது. இணையம், வலையம், இணையப் பக்கம், வலைப்பின்னல், வலைப்பக்கம், இணைய இணைப்பு எனப் பல பெயர்கள் உலாவி, இறுதியாக வெகுமக்கள் ஏற்றுக்கொண்டது இணையம். அதேபோல இணையத்தில் வெளியாகும் இதழுக்கு வலையிதழ், மின்னிதழ், மின் சஞ்சிகை, மிஞ்சிகை எனப் பெயர்கள் உலாவி, கடைசியில் இணைய இதழ் என்பதையே மக்கள் பெருவாரியாகப் பயன்படுத்தினர். இந்தக் காலகட்டத்தில்தான் நாங்கள் தொடங்கிய இணைய இதழுக்கு ஆறாம் திணை என்று பெயர் இட்டோம். ஆறாம் திணை என்பது தமிழுக்கு நாங்கள் சேர்த்த புதிய சொல்.

இணைய இதழாக 'ஆறாம் திணை'யைத் தொடங்கியபோது அப்போதைய ஊடக நிலைமைகளை ஆராய்ந்து உலகளாவிய பொதுவெளியைப் பயன்படுத்தி ஒரு மாற்று இதழாகக் கொண்டுவர முயன்றேன். ஏற்கெனவே இருந்த வெகுஜன இதழ்கள், சிற்றிதழ்கள் ஆகிய இரண்டுக்கும் இடைப்பட்ட இதழாக அதைக் கொண்டுவர முயன்றோம். இலக்கியம் மட்டுமல்லாது செய்திகளையும் கொடுக்கத் தீர்மானித்தோம். மேலும், தமிழ் மொழியில் நவீனத் தொழில்நுட்ப சாத்தியங்களைத் முயன்று பார்ப்பதுதான் எங்களது முதன்மை நோக்கமாக இருந்தது. இணையம் என்பதையே தமிழ் எழுத்தாளர்கள் ஆச்சரியத்துடன் பார்த்தார்கள். சென்னையில் தட்டச்சு செய்து பதிவேற்றினால் அமெரிக்காவில் பார்க்க முடியும் என்பது அவர்களுக்கு நம்ப முடியாத வியப்பாக இருந்தது.

அப்போது, எழுத்துருக்களைப் பயன்படுத்து வதுதான் பெரிய பிரச்சினை. நோட்பேடில்தான் தட்டச்சு செய்ய வேண்டியிருந்தது. காற்புள்ளி, இடைவெளி, அடைப்புக்குறி என்று இவற்றைக் கையாள்வதுகூடச் சவாலாக இருக்கும். அதற்கான கணினி மொழி (Morpin Language) தெரிந்தவர்கள்தான் அதைப் பதிவேற்றவே முடியும்.256 எம்.பி. அளவில்தான் கணினி இருக்கும். இணைய வசதிக்கு டயல்-அப் இணைப்பு வேண்டும். இணையத்தைப் பயன்படுத்துவதற்காகவே தனித் தொலைபேசி இணைப்பு தேவைப்பட்ட காலம் அது. அந்த எண்ணில் யாரும் அழைத்தால் எடுக்கக் கூடாது. எடுத்துவிட்டால் இணையத் தொடர்பு துண்டிக்கப்பட்டுவிடும். கணினியை வேகமாகப் பயன்படுத்த முடியாது, எழுத்துருக்களை அப்படியே பதிவேற்ற முடியாது என்பன போன்ற சூழலில்தான் இணைய இதழைக் கொண்டுவரும் முயற்சி நடந்தது.

அப்போது நான்கைந்து தமிழ் எழுத்துருக்கள் பயன்பாட்டில் இருந்தன. அவற்றில் முத்து நெடுமாறனின் முரசு அஞ்சல் எழுத்துருவை நாங்கள் பயன்படுத்தினோம். முத்து நெடுமாறன் எங்களுக்கான தொழில்நுட்ப உதவிகளைச் செய்தார். அவருக்கு உதவியாக டி.என்.சி.வெங்கட்ரங்கன் இருந்தார். அப்போது எழுத்துருக்களில் பொதுவான ஒரு சிக்கல் என்னவென்றால் எந்த கோடிங் என்றாலும் ஏதாவது ஒரு எழுத்து வராது. எங்கள் இணையதளத்தில் இ என்ற எழுத்து வராது. இ என்று வருகிற இடங்களிலெல்லாம் ஒரு கட்டம் இருக்கும். இப்போதுபோல அன்று உயர் அடர்த்திப் புகைப்படங்களைத் தரவிறக்கம் செய்யவியலாது. ஒரு இணையப் பக்கத்தின் அதிகபட்சக் கொள்ளளவு என்பதே 40 கே.பி. என்ற அளவுக்குள்தான் இருக்கும். எனவே, வெப் கேமராவில் புகைப்படங்கள் எடுத்தால் மட்டுமே இணையத்தில் பதிவேற்ற முடியும். அந்தப் புகைப்படத்தை அச்செடுத்தால் தெளிவாக இருக்காது. கணினித் திரையால் மட்டுமே நன்றாகப் பார்க்க முடியும்.

இணையதளங்களைப் பற்றித் தமிழில் அறிமுகம் இல்லை என்பதால், அதைப் பிரபலப்படுத்த வேண்டிய தேவையும் இருந்தது. முதலமைச்சரிடம் ஒரு வாழ்த்துச் செய்தி கேட்கலாம் என்று எண்ணி அவரது உதவியாளர் சண்முகநாதனிடம் ஒரு கடிதம் கொடுத்தோம். உடனடியாக அவரிடமிருந்து வாழ்த்துச் செய்தியும் கிடைக்கப்பெற்றோம். அவரது வாழ்த்துச் செய்தியுடன்தான் 'ஆறாம் திணை' இணைய இதழைத்




தொடங்கினோம். பின்பு, அவரிடம் கணினியைக் கொண்டுசென்று, இணையதளத்தைக் காட்டினோம். மிகுந்த ஆர்வத்துடன் அதைக் குறித்துக் கேட்டார்.

பாரதி பிறந்த நாளான டிசம்பர் 11 அன்று ஆறாம் திணை தொடங்கியது. அதுவும் பெரியாரின் பொன்மொழிகளுடன் தொடங்கியது. உலகம் முழுவதுமிருந்து நல்ல வரவேற்பு கிடைத்தது. 2001 வரைக்கும் ஒட்டுமொத்த உலகத் தமிழர்களின் இணைப்புப் பாலமாக விளங்கியதோடு வெகுஜனப் பத்திரிகை உலகுக்கும் ஒரு சவாலாக இருந்தது. உள்ளடக்கத்தைப் பொறுத்தவரையில் ஆங்கிலத்தில் ‘தி இந்து’, ‘ப்ரன்ட்லைன்’, தமிழில் ‘தினத்தந்தி’, ‘சுபமங்களா’ என்று நான்கும் சேர்ந்த கலவையாகச் செய்திகளையும் கட்டுரைகளையும் கொண்டதாக அது அமைந்திருந்தது. புத்தக அறிமுகங்களுக்குச் சிறப்புக் கவனம் கொடுத்தோம். ‘தி இந்து’ நாளிதழ்களின் இணைப்பிதழ்களைப் போல விளையாட்டு, பெண்கள், சிறுவர்கள், இலக்கியம் என்று ஒவ்வொரு நாளும் ஒரு துறைக்குச் சிறப்புப் பக்கங்களை ஒதுக்கினோம். ஆன்மிகச் செய்திகள் வெளிவந்தாலும் ஜோதிடம் போடவில்லை. கல்கிக்கு நூற்றாண்டு விழா மலரைக் கொண்டுவந்தோம். பண்டிகைகளுக்கென்று தனி மலரை வெளியிட்டோம். தமிழ் இதழ்களின் உள்ளடக்கத்தை மேம்படுத்தியதிலும் தமிழ்ப் பத்திரிகையாளர்களின் ஊதியங்களை உயர்த்தியதிலும் ‘ஆறாம் திணை’ மிக முக்கியமான பங்களிப்பை அளித்துள்ளது.

கணினியே புழக்கத்தில் இல்லாத அந்தக் காலகட்டத்தில் இணைய இதழுக்குப் பேட்டி கொடுக்கவே அப்போது யோசிப்பார்கள். ப்ரவுசிங் சென்டரில் ஒரு மணி நேரத்திற்கு ஐம்பது ரூபாய் வரையில் கொடுக்க வேண்டியிருந்த காலகட்டம் அது. எனவே, ஒவ்வொரு இலக்கியக் கூட்டத்துக்கும் இணையப் பக்கங்களை அச்செடுத்துக் கொண்டுபோய்க் காட்டி பேட்டிகளை எடுத்தோம். ஏறக்குறைய, இணையதளங்களைப் பற்றிய பிரச்சாரமாகவே அது அமைந்திருந்தது.

முதலில் டிஅய்சி என்ற எழுத்துருவைப் பயன்படுத்தினோம். அது டிஸ்கி என்று மாறியது. அதன் பிறகு முரசு அஞ்சல் எழுத்துருவைப் பயன்படுத்தினோம். அது மற்ற எழுத்துருவைப் பயன்படுத்தும் கணினிகளில் வேலைசெய்யாது. பழைய குறியாக்கத்தில் தட்டச்சு செய்யப்பட்ட கோப்புகளை மீட்டு, புதிய எழுத்துருக்களுக்கு மாற்ற முடியாது. ‘ஆறாம் திணை’யில் வெளியிட்டிருந்த 40 ஆயிரம் பக்கங்களில் ஒரு பக்கத்தைக்கூடப் புதிய வடிவங்களுக்கு மீட்கவில்லை. டிஸ்கியில் இருந்த எழுத்துருக்களை ஒருங்குறி முறைக்கு மாற்றவில்லை.

இப்படிப் பல சிரமங்களோடு இணைய இதழை நடத்திக்கொண்டிருந்த சூழலில்தான் 1999 மார்ச் மாதத்தில் தமிழிணையம் 99 மாநாடு நடைபெற்றது. நிறையக் குறியாக்கங்கள், நிறைய எழுத்துருக்கள், நிறைய விசைப்பலகைகள் என்றிருந்த நிலையில் அவற்றை எப்படித் தரப்படுத்த வேண்டும் என்பதுதான் அந்த மாநாட்டின் முக்கியமான நோக்கம். கணித்தமிழ் வளர்ச்சியில் அடுத்தடுத்த வளர்ச்சிகளை நோக்கி எப்படிப் பயணிப்பது என்று அந்த மாநாட்டில்

விவாதிக்கப்பட்டது. பேராசிரியர் ஆனந்தகிருஷ்ணன் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு அந்த மாநாட்டுப் பணிகள் நடைபெற்றன. அதன் பிறகே, கணித்தமிழ் தரப்படுத்தப்பட்டது. எழுத்துருக்களை உருவாக்கியவர்கள் யாரும் உடனடியாக என்றாலும், அதை ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்களுக்குள் ஒற்றுமையை ஏற்படுத்தமுடியவில்லை. விசைப்பலகையில் தரப்படுத்தல் நடந்துவிட்டது. ஆனால், குறியாக்க விஷயத்தில் இன்றும்கூடப் பிரச்சினை தொடரத்தான் செய்கிறது.

இந்த வேறுபாடுகள் இருந்தாலும் இணையம், கைபேசி இரண்டின் எதிர்காலம் குறித்து முன்னோடிகள் அனைவருக்கும் ஒரு தெளிவான பார்வை இருந்தது. அவை குரலை அறிந்துகொள்ளும், முகங்களை அறிந்துகொள்ளும், சொன்னால் எழுதும், எழுதியதைப் பேசும் என்ற சாத்தியங்களை அவர்கள் அன்றே அறிந்திருந்தார்கள். அந்தச் சாத்தியங்கள் அனைத்தையும் தமிழில் நிகழ்த்திப் பார்க்க வேண்டும் என்ற தெளிவான பார்வை அவர்களுக்கு இருந்தது. தமிழினி 2000 மாநாட்டில் இலக்கியமும் இணையமும் என்ற தலைப்பில் நான் இது குறித்துப் பேசியிருக்கிறேன்.

2000இல் அன்றைய நிலையில் ஆங்கிலத்துக்கு அடுத்தபடியாகத் தமிழ்தான் கணினியில் அதிகம் பயன்படுத்தப்படக்கூடிய மொழியாக இருந்தது. கணித்தமிழில் பெரும் பங்களிப்பு அளித்தது புலம்பெயர்ந்த தமிழர்கள்தான். இன்றைக்குக் கணினிப் பயன்பாடுகளில் தமிழ் எவ்வளவோ வளர்ந்துவிட்டாலும் இணைய உள்ளடக்கத்தில் பின்தங்கியிருக்கிறோம். பிரெஞ்சு, தமிழ் பேசுபவர்களின் எண்ணிக்கை ஒரே அளவில் இருக்கிறது. அதே நேரத்தில் இணைய உள்ளடக்கத்தில் பிரெஞ்சு வகிக்கும் பங்கு நான்கு சதவீதமாக இருக்கிறது. தமிழ் உள்ளடக்கங்களோ 0.01 சதவீதமாக இருக்கிறது என்கிறார்கள்.

இணையத்தைப் பயன்படுத்துவதில் பெருமளவு வளர்ந்திருக்கிறோம். இருந்தாலும், இதில் இரண்டு பிரச்சினைகள் இருப்பதாக நான் கருதுகிறேன். ஒன்று டிஜிட்டல் இடைவெளி, இரண்டாவது தலைமுறை இடைவெளி. எல்லோருமே திறன்மிகு கைபேசியைப் பயன்படுத்தக்கூடிய நிலையில் இல்லை. தலைமுறை இடைவெளிக்குப் பதிப்புத் துறை ஓர் உதாரணம். வளர்ந்துவரும் தொழில்நுட்பங்களுக்கு ஏற்பத் தங்களை மேம்படுத்திக்கொள்ள அவர்கள் தயாராக இல்லை.

தமிழ் மென்பொருள் உற்பத்தியில் இருக்கக்கூடிய மிக முக்கியமான பிரச்சினை அந்த மென்பொருள்களை எல்லோரும் வாங்கிப் பயன்படுத்தும் நிலையில் இருக்கிறார்களா என்பது. பதிப்பகங்கள் வேண்டுமென்றால், பணம் கொடுத்து எழுத்துருக்களை வாங்கிப் பயன்படுத்தலாம். தனது கணினியில் ஒரு நாவலை எழுதும் ஒரு எழுத்தாளனுக்கு அது சாத்தியமா என்ற கேள்வியும் இருக்கிறது. இது போன்ற சூழலில் பைரஸி வருகிறது. அதனால், தமிழ் மென்பொருள் உற்பத்தி நிறுவனங்கள் தொடர்ந்து தாக்குப்பிடிக்க முடியாமல் போய்விடுகின்றன. டிஜிட்டல் இடைவெளி, தலைமுறை இடைவெளி இரண்டும் அதிகமாவதற்கு இதுவும் ஒரு காரணம்.

2000இல் டாட்காம் தொழில் துறையில் ஏற்பட்ட சரிவும் இரட்டைக் கோபுரத் தாக்குதலின் பின்விளைவுகளும் வெளிநாட்டு முதலீடுகளைப் பாதித்ததால் ‘ஆறாம் திணை’ முடிவுக்கு வந்தது. இன்றைக்கும் இணைய இதழ்களை ஆரம்பித்து அதிலிருந்து லாபம் பார்ப்பது என்பது வாய்ப்பில்லாததாகத்தான் இருக்கிறது. ஆனால், ஆங்கிலத்தில் மட்டும் அது சாத்தியமாக இருக்கிறது. ‘ஆறாம் திணை’ மேலும் சில ஆண்டுகள் தொடர்ந்திருந்தால் தமிழிலும் அப்படியொரு சூழல் மலர்ந்திருக்குமோ என்று தோன்றுகிறது.

●

**நன்றி: கணினிக் கோவை, கணித்தமிழ் 24, மாநாட்டுக் கட்டுரைகள்**

**புத்தகங்கள் அச்சிட அற்புதத் தீர்வு**

**குறைந்த செலவு அதிகபட்ச தரம்**

அதிகபட்ச தரத்தில் மிகக்குறைந்த செலவில் புத்தகங்கள் அச்சிடுவதற்கு ப்ரிண்ட் ஆன் டிமாண்ட் (PRINT ON DEMAND) முறை ஒரு வரப்பிரசாதமாகும். ப்ரிண்ட் ஆன் டிமாண்ட் முறையில் நேர்த்தியான தாள், அச்சு மற்றும் பைண்டிங்குடன் மிகக்குறைந்த விலையில், தரமாக அச்சிட்டுத் தருவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

**REAL IMPACT SOLUTIONS, CHENNAI**

தொடர்பு கொள்ள

**98412 93503**



கட்டுரை

# தமிழக வட்டார வழக்குச் சொற்கள்

முனைவர் ச. முத்துமாரி

உயர்தனிச் செம்மொழி என எந்நாட்டினராலும் புகழப்படும் சிறப்பு வாய்ந்த தமிழ்மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட தமிழக மக்கள் மரபின் அடிப்படையில் வழிவழியாக வழங்கி வரும் பாடல்களே நாட்டுப்புறப்பாடல்கள். இப்பாடல்கள் நாட்டுப்புற மக்களின் கள்ளங்கபடமற்ற வெள்ளை உள்ளங்களிலிருந்து இயற்கையாகப் பிறக்கும் உணர்ச்சிகளின் வெளிப்பாடு ஆகும். கிராமங்களில் வாழும் சாதாரண மக்களுடைய வாழ்வின் ஒவ்வொரு நிகழ்விலிருந்தும், அன்றாடச் சம்பவங்களைப் பொருளாகக் கொண்டும் உள்ளதை உள்ளபடிக் கூறி யாவரும் புரிந்து கொள்ளும் தெளிவுடையனவாகவும் வரலாறு, பண்பாடு, தொன்மை, சொல் வளம் இவற்றினை வெளிப்படுத்துவனவாகவும் இப்பாடல்கள் விளங்குகின்றன. இத்தகு சிறப்பு வாய்ந்த நாட்டுப்புறப் பாடல்களில் எண்ணற்ற வட்டார வழக்குச் சொற்கள் காணப்படுகின்றன.

ஒரே மொழி பேசும் குழுவினரிடையே மொழியை ஒலிப்பதில் வேறுபாடுகள் தோன்றுகின்றன. இதனால் ஒரு மொழியிலிருந்து கிளை மொழிகள் தோன்றுகின்றன. இத்தகைய கிளை மொழிகள் வட்டார வழக்கு என்று அழைக்கப்படுகின்றன.

“தொல்காப்பியர் செந்தமிழ் நிலத்து எல்லையையோ கொடுந்தமிழ் நிலத்து எல்லையையோ குறிப்பிடவில்லை. செந்தமிழை இயற்சொல்லாகக் கொண்டு, வட்டார வழக்கினை திசைச்சொல் என்கிறார்”. என சு சக்திவேல் அவர்கள் தான் எழுதிய ‘தமிழ் மொழி வரலாறு’, (ப.293) என்ற நூலில் குறிப்பிடுகின்றார்.

தொல்காப்பியரும்,
செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்துத்
தங்குறிப் பினவே திசைச்சொற் கிளவி
தொல். சொல். 883

என குறிப்பிடுகின்றார்.

இக்கூற்றுகளுக்கேற்ப ஒரு மொழியின் மாறுபட்ட பல்வேறு வட்டார வழக்குச் சொற்களைத் திசை மொழிச் சொற்கள் அல்லது வட்டார வழக்குச் சொற்கள் என்கின்றோம்.

**தெற்குப்பகுதி**

மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம், கன்னியாகுமாரி மாவட்டங்களில் வழக்கத்தில் உள்ள நாட்டுப்புறப்பாடல்களில் இடம்பெறும் சொற்கள் தெற்கு வட்டார வழக்கு என்கின்றோம். ளகர ஒற்றுமையாலும் ழகர இன்மையாலும் படர்க்கைப் பன்மை வடிவத்தாலும் இவ்வட்டார வழக்கு தனியொரு கிளைமொழியாக விளங்குகின்றது. இப்பகுதியில் வழக்கத்தில் உள்ள கிராமிய பாடல்களில் ஏராளமான வழக்குச் சொற்கள் காணப்படுகின்றன.

**வட்டார வழக்குச் சொற்கள்**

மருத தொரக்குச்சியே
மச்சுவீட்டு உள் பூட்டே
தொறக்கத் தெரியாம
தொரமகன கையலச்சேன் (கம்.பள்.தெம்.பா.ப.8)

**1. திறவுகோல் › தொரக்குச்சி**

ஏறுனேன் குலுக்க மேல்
எடுத்தேண்டி பருத்திவெத
(கம்.பள்.தெம்.பா.100ப. 52)

**2. தானியம் சேமித்து வைக்கும் கலன் › குலுக்க**
(குலுக்க குலுக்கை குதிர்)

வட்டியிலிடும் சோறே நீ
மடியிலிடும் மாந்தளிரே
(கம்.பள்.தெம்.பா. 100 ப.5)

**3. உணவு வைக்கும் பாத்திரம் › வட்டில்**

ஈக்கி கம்பி வேட்டிக்காரா
இத்தனைக்கு மோசக்காரா
பரமாத்த துண்டு காரா
பாக்குறது தாரமில்ல
(கம்.பள்.தெம்.பா.-100ப. 50)

**4. பட்டுச்சரிகை வேட்டி › ஈக்கிகம்பிவேட்டி**

**5 பெருந்தன்மையான › பரமாத்த**

மயானம் போறமுன்னு
மனக்கவல வேணாம்
சிங்கார சேக்குக் கெல்லாம்(ம்)
சீப்பு வாங்கி நாவருவேன்
(கம்.பள்.தெம்.பா.ப.21)

**6. தலைமுடி › சேக்கு**

சந்தன கும்பாவில
சாதம் போட்டு உங்கயில
ஒங்கள நெனக்கையிலே
உங்குறது சாதந்தானா
(கம்.பள்.தெம்.பா.ப.10)

**7. உணவு உண்ணும் பாத்திரம் › கும்பா**

அத்தை அடிச்சாளோ
அரளிப்பூச் செண்டாலே
அடிச்சாரைச் சொல்லியழு
அடிச்சாரைச் சொல்லியழு - என் கண்ணே
ஆக்கினைகள் செய்திடுவோம்
(தி.மா.நாட்.அள. ப.72, 73)

**8. தண்டனைகள் › ஆக்கினைகள்**

கறக்கும் பசு தந்து
கண்ணு கட்ட தும்பு தந்து
உட்கார்ந்து மோர் கடைய என்கண்ணே
முக்காலி தானும் தந்தான்
(தி. மா. நாட். அள.ப.78)

**9. தேங்காய் நாரால் செய்யப்பட்ட கயிறு › தும்பு**

ஆத்துக்கு அந்தாண்டியும்
முக்குருணி பச்சரிசி
முன்னூறு பளந் தேங்கா
காது குத்த வாராக - ஏனய்யா
கருணரு ஓம்மாமன் (நாட். பா. கள.- 7 ப.38)

**10. மூன்று மரக்கால்(12படி) › முக்குருணி**

நூறு ரூபா பரிசும் தாரேன்
நீ நோக்கம் போல வாக்கப்படு
அஞ்சு சரம் சங்கிலியா
அறுபத்தாறு திருகாணியா
ஒசி நல்ல சிரிக்கிக்கெல்லாம்
நீ ஒட்டுத்திண்ண காக்கலாமா
வேத்தூரு பொம்பளக்கு
நீ வெல கூறி நிக்கலாமா
(கம்.பள்.தெம்.பா.ப.53)

**11. ஐந்து வடம் கொண்ட கழுத்தணி › அஞ்சுசுரம்**

**மேற்குப்பகுதி**

*கோயம்புத்தூர், சேலம், தர்மபுரி, நீலகிரி, ஈரோடு மாவட்டங்களில் பேசப்படும் தமிழை மேற்குக் கிளைமொழி என்று வழங்குகின்றோம். இப்பகுதியில் பக்குவமாக என்ற சொல் பதனமா என்ற சொல்லாக மாறி ஒலிக்கப்படுகின்றது. இப்பகுதியில் வயதான மகளிர் தங்கள் காதுகளில் அணியக் கூடிய ஒரு வகை அணிகலனைத் தண்டட்டி என்று குறிப்பிடுகின்றனர்.*

என் சோட்டுப் பெண்டுகளா
இள வாழைத் தண்டுகளா
வாழை குறுத்துக்களா
வயசான தண்டுகளா

(சேலம் வட்.தொழி. பா. ப.13)

**12. வயது › சோட்டு**

இந்த சவுக்கப்பையன் பில்லேந்தி
நாவப்பழக் கருப்பே - நா
எப்படி உன்னைய மறப்பேன்

(சேலம் வட்.தொழி.பா.ப. 25)

**13.சோம்பேறிப் பையன் › சவுக்கப்பையன்**

பந்தல் அவரையைப்
பதனமா நூறு வாங்கி
தின்ன அவரையைத்
திட்டமா நூறு வாங்கி

(சேலம் வட்.தொழி.பா.ப.15)

**14. பக்குவமாக (கவனமாக) › பதனமா**

கச்சாயம் சுட்டடுக்கி
கலயத்துல வேடு கட்டி

(கோவை நாட். பா.ப.159)

**15. சிற்றுண்டி › கச்சாயம்**

பஞ்சந்தாங்கி கோம்பையில
பருத்திக் களை எடுக்கையில
சில்லடுச்ச கொண்டையிலே
செல்ல மழை பாயுதடி
கானங் கரிசலிலே
களை யெடுக்கும் சின்னப்புள்ளை
நீலக் கருங் குயிலே
நிக்கட்டுமா போகட்டுமா

(உடு. வட். நாட். பா. ப. 96)

**16. மலைஅடிவார புன்செய்நிலம் › கோம்பை**

அடி வடக்கே மலைபெய்ய
வாரி எங்கும் தண்ணீர்வர
வாரி வரும் தண்ணியிலே
வாழை முளைத்து வரும்

(சேலம் வட்.தொழி.பா.ப.16)

**17. நீர்த்தேக்கம் › வாரி**

**மத்தியப்பகுதி**

*மத்தியப் பகுதியில் வழக்கத்தில் உள்ள பெரும்பான்மையான சொற்கள் பழந்தமிழ்ச் சொற்களாக காணப்படுகின்றன.*

சொல் மாற்றம்

*சோழ நாட்டில் வழங்கும் தமிழ் மத்தியக் கிளைமொழி எனப்படும். தற்பொழுதுள்ள, தஞ்சாவூர், நாமக்கல், திருச்சி மாவட்டங்களின் பெரும்பகுதிகளும் புதுக்கோட்டை மாவட்டத்தின் ஒரு பகுதியும் இணைந்தது இப்பகுதியாகும். இப்பகுதியில் வழக்கத்தில் உள்ள சொற்கள் குறிப்பாக மிஞ்சி, பச்சி, தாதி, காலாழி, மாறாயம், கவண் போன்றவையாகும்.*

உச்சிலம் பூவெடுத்து அம்மாவுக்கு
ஒசந்ததொரு கல் எளைச்சி
மிச்சின பொன் எடுத்து அம்மாவுக்கு
மிஞ்சியும் தாம் பண்ணி
மானத்து மீன் ஒளுவ
வருச மகள் பல் ஒளுவே
கண்ணான கண்ணுக்குக்
கல்கண்டு தட்டுவர
கட மாமன் சீருவர

(தஞ்.நாட்.பா.ப.46)

**18. மெட்டி › மிஞ்சி**

- *மிஞ்சி - கையில் மோதிரவிரலிலும் காலில் இரண்டாவது விரலிலும் அணியும் மோதிரவகை*

*(எ.கா.) கால் மிஞ்சிக்காரன் பின்போனாள்[1] (தனிப்பா. II. 138. 351)*

ஏ! முருங்கமரம் பொளந்து - கண்ணே
ஒனக்கு முக்காலி செப்பனிட்டு
முக்காலி தள்ளிவுட - எங்கதம்பி
ஒனக்கு முப்பத்தெட்டு தாதிவுளாம்
(நாட்.பா.க.தொ.4 ப.159)

**19. பணிப்பெண் › தாதி**

தாதி வேலைக்காரி. (பிங்.) சௌரேச்சுரத் தாதியை நயப்பான்[2] (உபதேசகா. சிவத்துரோ.200)

ஊருக்கு மேற்கே தப்புறானே சாதி வண்ணான்
வண்ணானைக் கூப்பிடு மாறாயம் கூறுமுன்னா
பொம்பொறந்த கோட்டையிலே என்னென்ன அடையாளம்
மாமனோட சேனையிலே என்னென்ன அடையாளம்

(தஞ். நாட். பா. ப. 75)

**20. சிறப்புச்சொல் > மாறாயம்**

கவண இருபொறமும் இடிக்குதய்யா
கவலகொண்ட நெஞ்சங் கொஞ்சம்
இனிக்குதய்யா!
கண்மணியே எந்தனுக்கு சொந்தமய்யா - நீ
காட்சிதர வேணுமய்யா கண்டநேரம்

(நாட். பா.க. தொ.4 ப.146)

**21. மாட்டு கொட்டகையில் குறுக்கே கட்டப்பட்டிருக்கும் கொம்புகள் > கவண (கவணை)**

அந்தியிலே செத்த சாவு
அவட்டை வந்து கூடுதின்னார்
பூலோகத்தார் சொல்கேட்டுப்
பொணத்தை எடுத்துவிட்டேன்
நான் செய்த குத்தத்தைத் தான்
பொறுத்துக் கோபம் கொள்ளாதிய!

(தஞ். நாட். பா. ப. 248)

**22. ஒரு வகைப் பேய் > அவட்டை**

**கிழக்குப்பகுதி**

*கிழக்குப் பகுதியில் வழக்கத்தில் உள்ள சொற்களும் பெரும்பான்மையானவை பழந்தமிழ் சொற்களோடு தொடர்புடையதாக இருப்பதை அறியமுடிகின்றது.*

ஏ முச்சி முச்சி முச்சி
ஏ தாங்கல் தாங்கல் தாங்கல்
ஏ உறி உறி உறி
ஏ தட்டு தட்டு தட்டு

(நாட். பா. க. தொ. 2 ப.48)

**23. சிறுமுறம் > முச்சி**

**24. மூங்கில் தட்டு > தாங்கல்**

**வடக்குப்பகுதி**

*குறிப்பாக ரகரத்தை முதன்மையாக பெற்ற சொற்கள் தமிழ்மொழியில் இடம்பெறுவதில்லை. ஆனால் வடக்குப் பகுதியில் வழங்கக் கூடிய சொற்களில் இத்தகையச் சொற்கள் வழக்கத்தில் உள்ளதை அறியமுடிகின்றது.*

காஞ்ச நெல்ல வேச்சி ரவோ
காட்ட தொழவி வெச்சன் - அந்தக்
காஞ்ச நெல்ல துன்ன வந்த
கல்லிக் காக்கா தான் மலடி .......

(கா. வட்.மக்.க.ப.43, 44)

**25. குழந்தையற்றத் தன்மை > மலடி**

அடி வில்லபொடி மணக்கும் சண்டாளி ஒர
விரிச்சதல பூமணக்கும்
அடி கதம்பபொடி மணக்கும்
கருத்த புள்ள கொண்டையிலே

(தென் பெண்.பா.ப.93)

**26. சந்தனம் > வில்லபொடி**

**கருத்துரை**

*மனிதன் என்றைக்குத் தான் உணர்ந்ததைப் பிறரிடம் பகிர்ந்துகொள்ள விழைந்து அவற்றை வெளிப்படுத்த முற்பட்டானோ அன்றைக்கே வட்டார வழக்குச்சொற்கள் தோன்றி விட்டன. எழுத்து வடிவம் தோன்றுவதற்கு முன்பே தோற்றம் பெற்றவையாக இச்சொற்கள் விளங்குகின்றன. சங்க இலக்கியம், சங்கமருவிய கால இலக்கியம் போன்ற தமிழிலக்கிய நூல்கள் பல தோன்றுவதற்கு வாய்மொழி இலக்கியம் காரணமாய் அமைந்துள்ளது. எந்த ஒரு மொழியிலும் வேற்றுமொழிச் சொற்களின் கலப்பினைக் காணமுடிகின்றது. இதனை மொழியியலறிஞர்கள் கடன் வாங்குதல் என்பர். ஆனால் இவ் வாய்மொழி இலக்கியத்திலிருந்து பெறப்பட்ட வட்டாரச் சொற்கள் அத்தகைய நிலையில் இல்லை. பெரும்பான்மையும் தமிழ்ச் சொற்களாகவே உள்ளன. தமிழ் இலக்கியங்களிலும் வட்டாரச் சொற்கள் வழக்கத்தில் இருப்பதை நோக்கும்போது இதன் தொன்மை நன்கு விளங்கும். மேற்குப் பகுதியான சேலம் மாவட்டத்தில் வாரி என்ற சொல் நீர்த்தடம் என்ற பொருளில் (வணிக மாக்களை யொத்ததவ் வாரியே - கம்பரா. ஆற்றுப். 7) வழங்கப்படுகின்றது.*

**சான்றாதாரங்கள்**


1. மனோகரன், இரா.,கம்பம் பள்ளத்தாக்கு தெம்மாங்குப் பாடல்கள் - 100 தன்னனானே பதிப்பகம்,முதற்பதிப்பு, டிசம்பர் 2003.
2. சக்திவேல், சு.,திருநெல்வேலி மாவட்ட நாட்டுப்புறவியல் அளவாய்வு தஞ்சைப் பல்கலைக் கழகம், முதற்பதிப்பு, 2007.
3. நாகரத்தினம், வெ.அ., கோவை நாட்டுப்புறப் பாடல்கள் வெற்றி அம்மன் பதிப்பகம்,33, முதற்பதிப்பு, மே 2006.
4. சுப்பிரமணியன், சு., உடுமலை வட்டார நாட்டுப்புறப் பாடல்கள் கருத்தமைப்பும் மக்கள் பங்கேற்பும்பாரதியார் பல்கலைக் கழகம், முதற்பதிப்பு, டிசம்பர் 2002.
5. இராமநாதன், ஆறு., தஞ்சை நாட்டுப்புறவியல் தன்னனானே பதிப்பகம், முதற்பதிப்பு, டிசம்பர் 2003.
6. இராமநாதன், ஆறு., நாட்டுப்புறப் பாடல் களஞ்சியம் தொகுதி -2 மெய்யப்பன் தமிழாய்வகம், முதற்பதிப்பு, டிசம்பர் 2001.
7. முத்துகந்தன், சி., காஞ்சிபுர வட்டார மக்கள் கதைகள் காவ்யா பதிப்பகம், முதற்பதிப்பு, 2005.


●


கட்டுரையாளர், உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
தருமமூர்த்தி இராவ்பகதூர் கலவல கண்ணன் செட்டி
இந்துக் கல்லூரி, பட்டாபிராம், சென்னை 72

கிரேக்க நாடகம்

# மனைவிமார்களின் வேலை நிறுத்தம்



ராஜ்ஜா

என்னால் எதுவும் முடியும் என்று திடமாக நினைப்பவள் பெண். அவள் நினைப்பது நடக்கிறதோ இல்லையோ அது இரண்டாம் பட்சம். அவளது நினைப்பு பிழைப்பைக் கெடுப்பதில்லை. முயற்சி செய்வதற்கு முன்பே முடியும் என்று சொல்லிக்கொள்ள திராணி வேண்டுமே. ஆகவேதான் அவளது முயற்சி திருவினையாக்குகிறது.

பாவப்பட்ட ஜென்மம் ஆண்தான். முடியுமா என்னால் என்ற சந்தேகத்தோடு செயல்படுபவன். இந்த சந்தேகம்தான் அவன் பிழைப்பைக் கெடுப்பது. அத்தோடு நில்லாமல், அவனை குட்டிச்சுவர் ஆக்குவதும், அவனை பாழுங்கிணற்றில் தள்ளுவதும் அவனோடு குடி கொண்டுள்ள இந்த சந்தேகம்தான்.

ஆண் சிறந்தவனா? பெண் சிறந்தவளா? இந்த ஒரே ஒரு கேள்விக்கு பதில் தேடி உலக இலக்கியம் முழுதும் அலைந்து திரிந்தாலும் பதில் என்னவோ ஒரே மாதிரியாகத்தான் கிடைக்கிறது. பெண் இன்றி ஆண் இல்லை. ஆண் இன்றி பெண் இல்லை. ஜாடிக்கு ஏற்ற மூடி. மூடிக்கு ஏற்ற ஜாடி. ஜாடிக்குள் அப்படி என்னதான் இருக்கிறது? அது ரகசியம்... பரம ரகசியம். சொல்ல இயலாது.

அந்த ரகசியத்தை போட்டு உடைத்தாள் ஒரு பெண். ஆண்கள் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடும் போர் -- அவனது பராக்கிரமச் செயல்களை வெளிச்சம் போட்டுக் காட்டும் போர்-- பெண் நினைத்தால் அந்தப் போரையே நிறுத்திவிட்டு அமைதியை நிலை நாட்ட முடியும். அவளுக்குத்தான் நினைப்பு பிழைப்பை கெடுப்பதில்லையே. அவளால் முடியாதது என்று ஏதும் இல்லையே!

தன்னிடம் இல்லாதது அவளிடம் இருப்பதால் அவளையே எஜமானியாக ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலைக்கு ஆண் தள்ளப்படுகிறான். அவள் சொல்வதே சட்டம். அதுவே அரசகட்டளையாகவும் ஆகிறது. பெண் என்றால் பேயும் இரங்கும் என்பது மூத்தோர் வாக்கு.

பெண் சொல்லைக் கேட்டு மலையையே பிடுங்கி கடலுக்குள் வீசுபவன்தானே ஆண். அந்த தைரியம், பலம் எல்லாம் எங்கிருந்து வருகிறது? பெண்ணின் மேல் கொள்ளும் மையல்தான். ஈர்ப்புதான். அங்கங்கே ஹனுமான் உண்டு. அவர்களை கணக்கில் எடுத்துக் கொள்ளத்தேவையில்லை. கொடுத்து வைத்த ஜீவன்கள். இருந்து போகட்டும்.

ஜாடிக்குள் இருக்கும் ரகசியத்தை போட்டுடைக்கும் பெண்ணின் பெயர் லைசிஸ்ட்ரட்டா. இவளை லிசிஸ்த்ராத்தி என்றும் லிசிஸ்ட்ரேட்டா என்றும் உச்சரிப்பு விற்பன்னர்கள் கூறுகிறார்கள். நாம் சுருக்கமாக லிஸி என்றுகூட அழைக்கலாம். அழைக்கும்போதே ஜொள்ளு ஒழுகுகிறது அல்லவா! ஒழுகாதா பின்னே! லிஸியை உருவாக்கியவரே கிண்டலும் கேலியும் நிறைந்த கிரேக்க நாடக கர்த்தா அரிஸ்டோபேன்ஸ் ஆயிற்றே.

கிரேக்க நாடகம் என்று எடுத்துக் கொண்டால் நம் மனக்காதுக்குள்ளே ரீங்கரிப்பவர்கள் ஏஸ்கைலஸ், சோபோகிளிஸ், யூரிபிடீஸ். இவர்கள் வாழ்க்கை அழுவதற்கே என்று தங்கள் நாடகங்களின் மூலம் சொன்னவர்கள். வாய் விட்டு சிரிக்கத்தான் வாழ்க்கை என்று அழுத்தம் திருத்தமாக தங்கள் நாடகங்களின் மூலம் சிரிக்க வைத்து நோய் விட்டுப்போக வைத்தவர்கள் அரிஸ்டோபேன்ஸ், மெனாண்டர். ஆனால் சோக கீதம் இசைத்தவர்களே,வயிறு குலுங்க சிரிக்க வைத்தவர்களை விட அதிக காலம் வாழ்ந்தார்கள் என்று கிரேக்க இலக்கிய வரலாறு எழுதியவர்கள் சொல்லி வைத்திருக்கிறார்கள். வாய் விட்டுச் சிரித்தவர்கள் பல காலம் வாழ்ந்து இருக்கிறார்கள். சிரிக்க வைத்தவர்கள்தான் பாவம். அவர்களது நேரம். அவ்வளவுதான்.

அறுபத்து ஐந்து ஆண்டுகளே வாழ்ந்தவர் அரிஸ்டோபேன்ஸ் (450-385 கி.மு.) ஐம்பத்து நான்கு நாடகங்கள் இவர் எழுதி இருந்தாலும் படிக்க பார்க்க கிடைப்பது பதினொன்றேதான். எல்லாமே பெலபொனிஷியன் போர் மூண்ட பிறகுதான் அரங்கேற்றப்பட்டவை.

பெலபொனிஷியன் போர் (431-404 கி.மு.) என்பது மனித குல வரலாற்றிலேயே அதிக பிரசித்திபெற்ற ஒன்று. அந்த போரைப் பற்றி எழுதி உலகறியச் செய்தவர் த்யூஸிடிடீஸ் (471-401 கி.மு.) என்ற கிரேக்க வரலாற்று அறிஞர்தான். கிரேக்க தேசத்தின் இரு பெரும் நகரங்களான ஏதென்ஸ், ஸ்பார்ட்டா இடையே போர். காரணம் ஏதென்ஸின் கடல்சார் வளர்ச்சியைக் கண்டு நடுநடுங்கிப்போன நிலம்சார் ஸ்பார்ட்டாவினால்தான்.

எனக்கு ரெண்டு கண்ணும் போனாலும் பரவாயில்லை. உனக்கு ஒரு கண்ணாவது போவணும் என்று சொல்லியே கொல்லும் மனித இனம். மனிதர்கள் மனிதர்கள்தானே. எந்த ஊரில், எந்த நாட்டில் இருந்தாலும் இந்தக் கொள்கையிருந்து மாறுபடவாப் போகிறார்கள்! கண் பறிபோகும் முன்பே ஏதென்ஸ் சரணடைந்தது ஸ்பார்ட்டாவிடம். இருபத்தேழு ஆண்டு காலம் நடந்த போர் முடிவுக்கு வந்தது. சரி. அது போகட்டும். நமக்கு அதுவா முக்கியம்?

முக்கியம் லிஸி என்கிற லிசிஸ்ட்ரேட்டாதான். அவளை உருவாக்கி உயிர் கொடுத்து அரிஸ்டோபேன்ஸ்தான். இத்தனை ஆண்டுகள் ஓடியும் - அவள் அரங்கேறிய ஆண்டு 411 கி.மு. - அடேங்கப்பா! கி.மு.வில் ஒரு 411 ... கி.பி.யில் ஒரு 2023. இரண்டும் சேர்த்து 2434. இத்தனை ஆண்டுகளாக அவள் உயிரோடு இருக்கிறாளே! எல்லாம் கொடுப்பினைதான். உலகெங்கும் நடத்தப்படும் நாடகம்தான் லிசிஸ்ட்ரேட்டா.

பெலபொனிஷியன் போர் ஆரம்பித்து இருபது ஆண்டுகள் ஓடி விட்டன. போர் நிற்பதாய் தெரியவில்லை. ஏதென்ஸ் போர் வீரர்களும் ஸ்பார்ட்டா போர் வீரர்களும் ஒருவர் மண்டையை மற்றவர் பிளந்து மடிகிறார்கள். தினம் தினம் செத்தவர்கள் தொகை கூடிக்கொண்டே போகிறது. வயோதிகர்கள், பெண்கள், குழந்தைகள் தவிர மற்ற எல்லா ஆண்களும் போருக்குப் போகிறார்கள். வீட்டிற்கு ஒரு ஆள் அல்ல. வீட்டிலுள்ள ஆண்கள் அனைவருமே கேடயம் வாளோடு போர்க்களம் புகுந்துவிட்டனர். திருமணம் ஆகாதவர்களுக்கு அதிக பிரச்சினை இல்லை. ஆனவர்கள் அடிக்கடி ஓடிவந்து

பிள்ளைகளை பார்த்துவிட்டுச் செல்லும் சாக்கில் மனைவியையும் சின்ன வீட்டையும் கவனித்துவிட்டுச் சென்றார்கள். இப்படி அடிக்கடி வந்துகொண்டும் போய்க்கொண்டும் இருந்தார்களே ஒழிய போர் நிறுத்தம் செய்வதாகத் தெரியவில்லை.

இந்த சமயத்தில்தான் அரிஸ்டோபேன்ஸ்க்கு மண்டையில் ஒரு ஒளிவிளக்கு தோன்றியிருக்க வேண்டும். போரை நிறுத்த வழி ஒன்றைக் கண்டு பிடித்தார். கிண்டலும் கேலியும் அவருக்கு கை வந்த கலையாகப் போகவே, அவர் லிசிஸ்ட்ரேட்டா என்ற பெரும் கதாபாத்திரத்தை உருவாக்கினார். உலக நாடக வரலாற்றில் அவளுக்கு நிகர் அவளே. ஏன் அப்படின்னு கேட்டா, பெண்கள் வேலை நிறுத்தம் என்ற ஒன்றை ஆரம்பித்து வைத்து, பெண்கள் ஒன்று சேர்ந்தால் போரையே நிறுத்திக் காட்டமுடியும் என்றும் நிரூபித்தார்.



அரிஸ்டோபேன்ஸ்

எக்காரணம் கொண்டும் போர் கூடாது, எல்லாவற்றையும் பேசித் தீர்த்துக் கொள்ளலாம் என்பதுதான் அரிஸ்டோபேன்ஸ் சொல்ல வந்த செய்தி. இதை மக்களிடம் கொண்டு போய் சேர்க்கவேண்டுமே. வயிறு குலுங்க சிரிக்க வைக்கும் நாடகமாக எழுதி, அதை மேடை ஏற்றி (411 கி.மு.) மக்களை சிந்திக்க வைத்தார். தான் படைத்த லிசிஸ்த்ராத்தி மூலம் போர் அரசியலுக்கு ஒரு முற்றுப்புள்ளியும் வைத்தார்.

லிசிஸ்ட்ரேட்டாவை என்ன செய்ய வைத்தார்? முதலில் ஏதென்ஸ் நகரப் பெண்களையும் ஸ்பார்ட்டா நகரப் பெண்களையும் அழைத்து, ஒன்று கூட்டி ஒரு கலந்தாய்வுக் கூட்டம் போட்டாள். "நமக்கு குடும்பம்தான் முக்கியம். கணவர், பிள்ளைகள் என்று சந்தோஷமாக வாழ வேண்டும். அதற்கு ஒரே வழி இருபது ஆண்டுகளாக நடந்து கொண்டிருக்கும் இந்த பாழாய்ப்போன போரை முடிவுக்கு கொண்டு வருவதுதான். நாமெல்லாம் ஒன்று சேர்ந்தால் போரை நிறுத்திவிடலாம். நம்மால் முடியும் என்று நம்பிக்கை கொள்வோம்," என்று முழங்கினாள்.

இரு தரப்புப் பெண்களும் லிசிஸ்ட்ரேட்டா சொன்னதில் நியாயம் இருப்பதை உணர்ந்தனர். ஆர்வம் காட்டினர். "நடு ராத்திரியில் கொஞ்சிக் குலாவ வரும் கணவன்மார்களின் வேண்டுகோளை நிராகரியுங்கள். போரை ஒரேயடியாக நிறுத்திவிட்டு வந்தால்தான் ஒத்துழைக்க முடியும் என்று நிபந்தனை போடுங்கள்," என்று ஆக வேண்டிய காரியத்தை லிசிஸ்ட்ரேட்டா வலியுறுத்தியபோது, சில இளம் மனைவிகள் மட்டும் தலை சொறிந்தனர்.

"அவுங்க வர்றதே ஆடிக்கு ஒரு தடவை அமாவாசைக்கு ஒரு தடவைதான். பாவம்! காய்ந்த மாடு கம்பங் கொல்லையிலே விழற மாதிரி விழறாங்க. அந்த கொஞ்ச நேர சுகத்திலேயும் இந்த அம்மா மண்ணை வாரிப் போடும் போல இருக்கே," என்று நினைத்தார்கள் போலும்.

வரப்போகின்ற வேலை நிறுத்தத்திலிருந்து தங்களை பிய்த்துக்கொண்டு ஓட பலர் சாக்கு போக்குகளைச் சொன்னாலும் லிசிஸ்ட்ரேட்டா யாரையும் விடுவதாக இல்லை. போரை நிறுத்தி கணவனோடு வாழ்ந்து அனுதினமும் சுகம் துய்க்க வேறு வழியே இல்லை என்று சொல்லி, நாம் அனைவருமே கூட்டு சேர்ந்தால்தான் வழி பிறக்கும் என்றும் சொல்லி 'மனைவிகளின் முதல் செக்ஸ் ஸ்ட்ரைக்' என்ற ஒன்றை ஆரம்பித்து வைத்தாள்.

போர் வீரர்களுக்கு மனைவிகள் செய்வதெல்லாம் வினோதமாக இருந்தது. ஒவ்வொரு பெண்ணும் ஒரு மாதிரிதான். எல்லோரும் ஒரே மாதிரி அல்ல என்பதை இந்த நாடகத்தைப் படித்தவர்கள் பார்த்தவர்கள் அறிவார்கள். மனம் உடைந்து போன கணவர்கள், வெளியில் புலியாக இருந்தாலும் வீட்டிலே எலியாக மாறவேண்டி இருந்தது. அதுவும் சுண்டெலியாக.

போரை நிறுத்தியே ஆக வேண்டும் போல இருக்கிறதே என்று ஆண்கள் தர்க்கத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போதே, பெண்கள் ஒன்று கூடி நாட்டு கஜானாவையே முற்றுகையிடுகிறார்கள். கஜானாவிலிருந்து ஒரு தம்பிடி கூட வெளியே போகாதவாறு பார்த்துக் கொள்கிறார்கள். ஆஹா! அப்படி போடுடா அரிவாளைன்னானாம்.

பாவம் போர்வீரர்கள். கஜானாவிற்கு வேறு பூட்டு போட்டுவிட்டால், சாப்பாடு எங்கிருந்து வரும்? இரு வேறு பசியால் வாடிய வீரர்கள் வேற வழியின்றி சமாதான நடவடிக்கையில் ஈடுபட்டு வெள்ளைக்கொடி காட்டிக் கொண்டார்கள். காரண காரிய கர்த்தா லிசிஸ்ட்ரேட்டாதான். மனித உயிர்கள் பலியாவதை நிறுத்திவிட்டாள். இந்த புரட்சிக்காரி செய்த சாகசங்களைப் பற்றிக் கூறுவதே அரிஸ்டோபேன்ஸ் எழுதிய லிசிஸ்ட்ரேட்டா.

போரினால் ஏற்படும் உயிரிழப்புகளையும், அதனால் உயிரிழந்தோரைச் சார்ந்தவர்கள் சந்திக்கும் கொடூரங்களைப் பற்றியும் பகிர்ந்து கொள்கிறது இந்த நாடகம். கணவர்களின் தார்மீக உரிமையையே பறித்துக்கொண்டு அவர்களை நல்வழிப் படுத்துவதே நாடகத்தின் நோக்கம். இந்த நோக்கம் நிறைவேற பெண்கள் கையில் எடுக்கும் கூர்மையான அஹிம்சை ஆயுதம்தான் செக்ஸ். இதுவும் ஒரு வகையில் செக்ஸ் டார்ச்சர்தானே. ஆண்களுக்கு மட்டுமல்ல பெண்களுக்கும்தான். இதைச் சொல்ல அரிஸ்டோபேன்ஸ் அமைத்திருக்கும் காட்சிகள் சற்றே நாகரிகமற்றவையாக சிலருக்கு தெரியலாம். உபயோகப்படுத்தியிருக்கும் மொழி 'நீச பாஷை' என்று கூட பலர் சொல்ல முன் வரலாம். ஆனால் கடவுளை கடவுள் என்று சொல்லாமல் வேறு என்ன சொல்ல முடியும்! கடவுளைப் பிடிக்காதவர்கள் பலருண்டு அல்லவே! ஏன். உலகின் முதல் மொழியாம் தமிழைக் கற்காமலே, அதன் வளத்தை மட்டும் கேட்டறிந்த அறிஞர்கள் பலர் பொறாமையினாலே தமிழ் ஒரு நீச பாஷை என்று சொல்லவில்லையா? அரிஸ்டோபேன்ஸ் எடுத்துக் கொண்ட பொருளை வேறு எப்படிச் சொல்ல முடியும்?

அரிஸ்டோபேன்ஸ் முதுகுத்தண்டு நிமிர்ந்த எழுத்தாளர் ஆயிற்றே! இல்லையென்றால் கிண்டலும் கேலியும் நிறைந்த வசனங்களை உபயோகித்திருக்க முடியுமா? ஆபாசமானது எதையும் நாசூக்காக சொல்லத் தெரிந்தவர் ஆயிற்றே. அதன் அர்த்தத்தை கண்டு பிடித்த அந்தக் கால வாசகர்களும் நாடக விரும்பிகளும் வயிறு வெடிக்கச் சிரித்திருக்கின்றனர். ஆங்கிலத்திலும், வேறு பல உலக மொழிகளிலும் இந்த நாடகம் பலரால் மொழியாக்கம் செய்யப்பட்டு இருக்கிறது. தமிழ்கூறும் நல்லுலகில் கிடைக்கிறதா என்பதைத் தோண்டித்தான் பார்க்க வேண்டும்.



மக்களை சிரிக்க வைத்துப் பார்த்து சந்தோஷம் அடைந்த அரிஸ்டோபேன்ஸ் அரசியல் நையாண்டியை இந்த நாடகத்தோடு நிறுத்திக் கொண்டார். அதனால் ஆவப்போவது ஒன்றுமில்லை என்று நினைத்தாரோ என்னவோ! நாய் வாலை நிமிர்த்தும் முயற்சி இது என்று கைவிட்டு விட்டாரோ!

நாடகத்தைப் பார்த்து சிரித்துவிட்டு வீட்டுக்குப் போய் சிந்தித்த சில அரசியல்வாதிகள் பொருள் உணர்ந்தனர். போரை நிறுத்த ஒரு வழி சொன்னவருக்கு பரிசு கொடுத்து பாராட்டாமல், பிரயோகப் படுத்தப்பட்டிருக்கும் ஆபாச வார்த்தைகளை விட அரசியல் நையாண்டியே அதிகமாக காணப்படுகிறது என்று குற்றம் சுமத்தினர். அரிஸ்டோபேன்ஸ் நீதி மன்றம் ஏற வேண்டி இருந்தது. பொது மக்களிடம் இருந்து கிடைத்த ஆதரவால் அரிஸ்டோபேன்ஸ் உயிர் தப்பினாராம்.

1910-ஆம் ஆண்டு லிசிஸ்ட்ரேட்டா நாடகம் லண்டன் லிட்டில் தியேட்டர் கம்பெனியால் நடிக்கப்பட்டது, பலான காட்சிகளுக்கெல்லாம் கல்தா கொடுத்துவிட்டு. இருந்தும் மக்கள் முன்னால் நடிக்கப் படவேண்டிய நாடகம் அல்ல இது என்று தடை செய்யப்பட்டிருக்கிறது. 1934-ஆம் ஆண்டு வாக்கில் மீண்டும் நடிக்கப்பட்டது. அமெரிக்காவும் இங்கிலாந்தும் சேர்ந்து தடை விதித்திருக்கிறது.

கிரேக்க நாட்டில் மட்டுமே வெட்டப்படாமல் வெட்கப்படாமல் நடிக்கப்பட்ட இந்த நாடகத்திற்கு, 1942-இல் ஆப்பு வைத்து விட்டது ஹிட்லரின் ஆட்சி. கிரேக்க நாடு அந்த புண்ணியவானின் ஆட்சியின் கீழ் வந்ததே காரணம். இன்றோ ஆங்கில மொழியாக்கத்தில் தடையின்றி பார்க்கப்படுகிறது. படிக்கப்படுகிறது. எல்லாம் கலி காலம்தான்.

மிகவும் பழமை வாய்ந்த புத்தகங்களுக்கு ஓவியம் தீட்டிய ஆப்ரே வின்சென்ட் பீர்ட்ச்லி 1896-ஆம் ஆண்டு இந்த கிரேக்க நாடகத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பிற்கு பலான ஓவியங்கள் பல வரைந்து கொடுத்தார் என்கிறது ஒரு செய்தி. அதே ஆண்டு அது கிடைத்தற்கரிய புத்தகமாக வெளிவந்திருக்கிறது. அதன் பின் இரண்டு ஆண்டுகளே உயிர் வாழ்ந்த அந்த ஓவியர் (காச நோயினால் பாதிக்கப்பட்டு இருபத்து ஆறு வயதிலேயே இறந்தவர்) இறப்பதற்கு சற்று முன்னர் தனது புத்தக வெளியீட்டாளருக்கு பிரதிகள் அனைத்தும் எரிக்கப் படவேண்டும் என்று ஒரு விண்ணப்பக் கடிதம் எழுதியிருந்தாராம். நடக்கிற காரியமா அது!

●

கட்டுரையாளர், ஓய்வுபெற்ற பேராசிரியர், எழுத்தாளர்.

திறனாய்வு



# கவனிக்கத்தக்க சிறுகதைகள்

முனைவர் க.கிருஷ்ணமூர்த்தி

தஞ்சை மாவட்டம் கும்பகோணம் வட்டம் அம்மாசத்திரம் கிராமத்தைச் சேர்ந்தவர் ஜி.சரவணன். இவர் 2000 ஆம் ஆண்டிலிருந்து பல்வேறு இதழ்களில் சிறுகதைகளும் கட்டுரைகளும் எழுதிவருகிறார். தம்முடைய சிறுகதைகளைத் தொகுத்து 'தெற்குபார்த்த வீடு' எனும் தலைப்பில் முதல் சிறுகதைத் தொகுப்பையும், 'பார்த்தாவுக்கு எழுதாத கடிதம்' எனும் தலைப்பில் இரண்டாவது சிறுகதைத் தொகுப்பையும் எழுதி வெளியிட்டுள்ளார். பார்த்தாவுக்கு எழுதாத கடிதம் எனும் நூலை விமர்சிக்கும் வகையில் இக்கட்டுரை அமைகிறது.

இந்நூலின் ஆசிரியர் என்னுரையில், 'பெரும்பாலான கதைகளில் கிராமியத்தை விடவும் முடியாமல் நகரியத்தை ஏற்கவும் இயலாமல் அல்லாடிய மக்களைத்தான் சொல்ல முயன்றிருக்கிறேன்.' என்று கூறியுள்ளதை இக்கதைகளைப் படிப்பவர்கள் நன்கு உணரமுடியும்.

**வாலிபால்**

'வாலிபால்' சிறுகதையில் இந்திராகாந்தி தலைமையிலான மத்திய அரசு, பள்ளிகளில் தொடங்கி வைத்த சிறுசேமிப்புத் திட்டம் கதையின் தொடக்கத்திலும், கிராமங்களுக்கு ராஜீவ்காந்தி வழங்கிய பஞ்சாயத்துபோர்டு டி.வி. கதையின் முடிவிலும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இக்கதையில் ஐந்து வரை கிராமத்திலுள்ள பள்ளியில் படித்த சிறுவன் ஆறாம் வகுப்பினை நகரத்திலுள்ள பள்ளியில் படிக்கச் செல்வதில் கதை தொடங்குகிறது. இந்நிலையில், கிராம விளையாட்டையும், நகரப் பந்துவிளையாட்டையும் ஒப்பிட்டுக் கூறியுள்ளார்.

கைப்பந்து என நினைத்து கூடைப்பந்தினை ஏலத்தில் எடுத்து, அதனால் பிறர்படும் சிரமங்களை மிகவும் எதார்த்தமாகவும் நகைச்சுவையாகவும் பதிவு செய்துள்ளார்.

**பார்த்தாவுக்கு எழுதாத கடிதம்**

'பார்த்தாவுக்கு எழுதாத கடிதம்' எனும் கதையில் மார்கழி மாதத்தின் அதிகாலையில் ஆனந்தா எனும் பெண்ணைக் காணச் செல்கின்ற இளைஞனுக்கு அவளையும் அவள் போடும் கோலத்தையும் பிடித்துப்போவதை அழகுறக் காட்சிப்படுத்தியுள்ளார். "ஆனந்தா தரையில் பரவும் வண்ணத்துப்பூச்சிக்கு சிறகை விரித்துக் கொண்டிருந்தாள். கால்களை அகட்டி நின்று குனிந்தபடி கோலம் போடுவதில் மட்டுமே லயித்திருந்தாள்."*(ப.19)*

ஆனந்தா வரைந்திருந்த வண்ணத்துப்பூச்சி கோலத்தில் எவ்வாறு கிடந்தது என்பதை அழகுற வர்ணிக்கிறார். "ஒவ்வொரு வண்ணத்துப்பூச்சிக்கும் வெவ்வேறு நிறம் கொடுத்திருந்தாள். நாளெல்லாம் பறந்து திரிந்து ஆயாசமாக ஓய்வெடுக்க தரையில் பரவிய நிலையில் சிறகு விரித்துக் கிடப்பது மாதிரி வரைந்திருந்தாள்."*(ப.20)*

நகரத்திற்குச் செல்வதற்கு முன் இந்நிகழ்வு நடப்பதால், இதுபோன்று கோலம்போடும் வழக்கம் நகரப் பகுதிகளில் இல்லாததை எண்ணி ஆசிரியர் கதையின் வழியாக வருத்தம் கொள்கிறார்.

ஆனந்தா கோலம் போடுவதை ஒளிந்து பார்க்கும் நிலையில் தத்துவார்த்தமான கருத்தினை ஆசிரியர் வெளிப்படுத்தியுள்ளார். "எல்லாவிடத்திலும் எல்லோருக்கும் மனசை உணர்த்துகிற மாதிரியான எந்தக் கருவியும் இல்லாதது எத்தனை துயரமானது. உணர்வு பூர்வமான கருத்துகளையும்கூட சிலரிடம் சொல்லமுடியாமல் போவது எத்தனை துரதிருஷ்டவசமானது."*(ப.18)*

கதையின் முடிவில் பார்த்தாவுக்கு கடிதத்தின் வழியாகச் சொல்ல நினைத்ததாக, "எதையும் ரசித்துப் பார்க்கவே நினைக்கிற எல்லோருக்கும் ரசிக்க வேண்டியதெல்லாம் அத்தனை சரியாய் கிடைக்கிறதில்லை" எனும் எதார்த்த வாழ்வின் உண்மையைப் புலப்படுத்தியுள்ளார்.

**பிற கதைகள்**

தெற்கு பார்த்த வீடு எனும் கதையில் மங்கலத்தாயியின் வீட்டுத் திண்ணையும், சக்கரத்தார் சாவு கதையில் சீனிச்சாமியின் வீட்டுத் திண்ணை குறித்தும் கிராமம் சார்ந்த நிலையில் கதையின் ஊடாகப் பேசப்படுகிறது.

நகரத்தில் மைக் மூலம் விளம்பரம் செய்த நபர் சக்கரத்தாரின் இறப்புச் செய்தியைக் கிராமத்தில் முதன் முறையாகக் கூறுவதும், அதனால் மக்களால் அவர் பட்ட துன்பத்தையும், உண்மை தெரிந்தபின் வெள்ளந்தியாய் மக்கள் பேசும் பேச்சினையும், சீனிச்சாமி என்பவர் அவருக்குக் குடிக்கத் தண்ணீர் கொடுப்பதையும் அழகாய்க் காட்சிப்படுத்தியுள்ளார்.

தனித்த மரம் சிறுகதையில் கிராமம் நகரமயமாகும் நிலையைக் கதையின் போக்கில் விளக்கிச் செல்கிறார். "வயல்களில் வீடுகள் முளைத்து நிற்கின்றன. வாய்க்கால்களைத் தூர்த்து தார்ச்சாலையாக்கிவிட்டார்கள். காவிரியில் நீருமில்லை. கரையோரம் நிழலுமில்லை. குளங்கள் நீர்த்தேக்கமின்றி குட்டைகளாகச் சிறுத்துவிட்டன." *(ப.37)*

மேலும், ராசமக்கா வாழ்வின் வழியாக, 'தனித்து விடப்பட்ட பெண்களுக்கு தைரியம் பெருக்கெடுத்து விடுகிறது' என்னும் வாழ்க்கைத் தத்துவத்தை பதிவு செய்துள்ளார்.

பட்டு எனும் கதையின் மூலம் மனித மனம் ஏதேனும் ஒன்றில் லயித்துப் போனால், அதற்காக ஏங்குவதும், அதை மட்டுமே நாடுவதும் தேடுவதுமாக இருக்கும். ஒருவேளை கண்டடையவில்லை என்றால் என்றேனும் ஒருநாள் கண்டுவிடலாம் என்ற நம்பிக்கையில் காணும் வரை தேடிக் கொண்டே இருக்கும் என்பதைப் புலப்படுத்தியுள்ளது தனிச்சிறப்பு.

கணவன் - மனைவி இடையேயான சிக்கலை பொம்மையும் பொம்மைகளும் எனும் கதையில் ஆசிரியர் பேசுகிறார். மனைவியிடம் ஆறேழு மாதங்களுக்கு மேல் அடிவாங்கும் கணவன், வாழ்வை வெறுத்த நிலையில் வீட்டை விட்டு வெளியேறி ரயில் பயணத்தை மேற்கொள்கிறான். பயணத்தில் சந்திக்கும் குடும்பத்தின் ஆரவார நிலை, சிறுவனுடன் ஏற்படும் உறவு, பயணத்தின் போது வந்து போகும் மனைவியின் புலம்பல், தஞ்சாவூரில் இறங்கிய ரவி மீண்டும் வீட்டிற்குத் திரும்ப முடிவு செய்து ரயிலுக்குக் காத்திருப்பதாகக் கதையை நிறைவு செய்கிறார். இதில் மனித மனதின் ஊடாட்டத்தை நுணுக்கமாகச் சித்தரித்துள்ளார்.




**பார்த்தாவுக்கு எழுதாத கடிதம் | ஜி.சரவணன்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை**
**விலை: ரூ.100**

திரைப்படத் துறையில் சாதிக்கும் எண்ணத்தில் அப்பாவிடம் சொல்லாமலேயே வீட்டை விட்டுச் சென்னைக்குச் சென்ற மகனுக்கும் அப்பாவிற்குமான நிலைப்பாட்டினை சரண் எனும் கதையில் ஆசிரியர் படம்பிடித்துக் காட்டியுள்ளார். திடீரென்று சென்னை வந்து மகனைச் சந்திக்கும் அப்பாவிற்கும் மகனுக்கும் இடையிலான உரையாடலின் மூலம் தலைமுறைகளுக்கு இடையிலான முரண்பட்ட சிந்தனைகளைத் தெளிவுற பதிவு செய்துள்ளார்.

மன இருக்கை எனும் கதையினை ஒரு பெண்ணின் நிலையிலிருந்து ஆசிரியர் பதிவு செய்துள்ளது புதிய முயற்சி என்றே எண்ணத் தோன்றுகிறது. குறிப்பாக பேருந்துப் பயணத்தின்போது, இல்லாததை விரும்பும் பெண்ணின் மனநிலையையும், ஆண்களின் மீதான சந்தேகப் பார்வையையும், முடிவெடுத்தலில் தெளிவற்ற நிலையையும் கதையின் வழி வெளிப்படுத்தியுள்ளார். இதேபோன்று சீத்து என்கிற சிறுமியைக் குறித்த கதையையும் பெண்ணின் நிலையிலேயே ஆசிரியர் கூறியுள்ளார். சித்திரை மாதத்தில் பிறந்ததால் சித்திரைச் செல்வி என்று தந்தை சூட்டிய பெயரை, முதலில் சித்து என்று சுருக்கி, பின்னர் சீத்து என்று சுருக்கிக் கூப்பிட ஆரம்பித்ததிலிருந்து அச்சிறுமி படும் இன்னல்களையும், சீத்தப்பா எனத் தன்னைக் கேலி செய்பவர்களை எதுவும் செய்யாமல் நகரும் தந்தையின் பயந்த சுபாவமும், பெயர் பிடிக்காமல் போனதால் அவளுக்கு எல்லாமும் பிடிக்காமல் போவது, கல்யாணம் ஆகப்போகும் புதிய சூழலால் தன்னைத் தேற்றிக் கொள்வது எனப் பெண்ணின் மனநிலையிலிருந்து கதையைப் பதிவு செய்துள்ளார்.

நீதிமன்றத்தின் அனுமதியுடன் மக்கள் குடியிருக்கும் வீடுகள் எந்திரத்தால் இடிக்கப்பட்டு மூட்டை முடிச்சுகளுடன் மக்கள் இடம்பெயர்வதையும், காலம் காலமாய் மக்கள் வழிபட்டு வந்த வீரனார் கோயிலை இடித்து நெடுஞ்சாலை போடப் பேச்சு நடக்கும் சமயம் பூசாரி அதிகாரிகளை அடிப்பதும், அதனால் கைது செய்யப்பட்ட பின்னர், தரைமட்டமாக ஆக்கப்பட்டு சாலை அமைப்பதையும், வெளிவந்த பூசாரி பைத்தியமாய்த் திரிவதையும் யானையடிக் குதிரை கதையில் பதிவு செய்துள்ளார்.

பிச்சை என்பவனை மையமாக வைத்து அவனுக்குள் இருந்த நெருப்பினை உள் நெருப்பு எனத் தலைப்பிட்டு ஆசிரியர் கதையாக வடித்துள்ளார். தான் மதிப்பும் மரியாதையும் வைத்திருந்த மிராசுதார் வீராசாமியின் செயலைக் கடைசி வரை வெளிப்படையாகக் கூறாமல் கதையின் முடிவில் அவர் வீட்டின் முன் பிச்சை பிணவண்டியை நிறுத்தியதும், மிராசுதார் தப்பி ஓடுவதன் மூலமே மிராசுதார் மீது வாசகனுக்குக் கேள்வி எழுகிறது. பிச்சைக்கும் அவன் மனைவிக்கும் இடையே நடந்த சண்டைக்கான காரணத்தினைக் கதையின் முடிவில் ஆசிரியர் கூறாமல் கூறி கதையைச் சட்டென முடித்துள்ளார்.

இந்தச் சிறுகதை நூலின் ஆசிரியருக்குள் ஒரு கவிஞன் ஒளிந்துள்ளதை ஒரு பூவும் இன்னொரு சிரிப்பும் எனும் கதையின் தலைப்பு உணர்த்துகிறது. தலைப்போடு நின்றுவிடாமல் கதைக்குள்ளும் கவித்துவம் புலப்பட்டுள்ளது. ‘பூக்கள் ஒரு அழகு என்றால் பூச்செடிகள் இன்னொரு அழகு.’ என்று கவித்துவமாகக் கதையின் போக்கில் ஆசிரியர் வர்ணித்துச் செல்கிறார்.

மேலும், நகர வாழ்வு கற்றுக் கொடுத்திருக்கிற நாகரிகமாக பின்வரும் கருத்தினை ஆதங்கமாகப் பதிவு செய்துள்ளார். ”ஒரு பூச்செடியை பராமரிக்கிற ஞானத்தையும் கூட இன்னொருவரிடம் கேட்டுப் பெற வேண்டியதிருக்கிறது என்பதும், நாய்க்குட்டி வளர்ப்பு முறை கூட நீண்ட நேரப் பயிற்சிக்குப் பிறகுதான் நமக்கு சாத்தியப்படுகிறது.” *(ப.78)*

ரயிலில் வந்தவள் கதையில் பின்னோக்கு உத்தியை ஆசிரியர் கையாண்டுள்ளார். ரயிலுக்காகக் காத்திருத்தலில் கதை தொடங்கி, ரயிலில் பயணம் செய்தபடி வத்சலா என்ற பெண்ணைப் பின்னோக்கு உத்தியில் நினைவுகூர்ந்து, வத்சலாவை நினைவுபடுத்தியபடி எதிரில் அமர்ந்திருக்கும் பெண்ணிடம் பேசத் தொடங்குவதில் கதை முடிகிறது.

ஒரு மரணம் மற்றும் சில கடமைகள் எனும் சிறுகதையில், எல்லோருக்கும் தெரிந்த

பேச்சாளரான அண்ணாச்சி என்பவர் கண்ணகி சிலை அருகில் நிகழ்ந்த விபத்தொன்றால் இறந்து பிணக்கிடங்கில் வைக்கப்பட்டிருக்கும் நிலையில் கதை தொடங்குகிறது. மனித இறப்பிற்குப் பின் பிற மனிதர்கள் சிறப்பித்துப் பேசும்நிலை, பிணக்கிடங்கின் சூழல், பிணக்கிடங்கிற்குள் அடையாளம் காட்டச் செல்பவர் எதிர்நோக்கும் இன்னல்களும், அவரின் மனநிலையும் கதையின் போக்கில் விவரிக்கப்படுகிறது.

உடலை அடையாளம் காட்டக் காத்திருக்கும் நிலையில் மனித வாழ்க்கை குறித்தும் காலம் பற்றியும் தத்துவார்த்தமான கருத்துகளை ஆசிரியர் சொல்லிச் செல்கிறார். "மரணம் எத்தனை துயரமானது என்பதை உணர்ந்திருந்தாலும் இத்தனை எளிதாய் இத்தனை சுலபமாய் நிகழ்ந்துவிடுகிற மரணங்களிலிருந்து மீள்வது எத்தனை கொடுமையானது.

பல்லாயிரம் சிறகுகள் கொண்ட விசித்திரக் கழுகு மாதிரி காலம் விண்ணெங்கும் பறந்து சென்று கொண்டேயிருக்கிறது. தன் நீண்ட அலகால் சில மனிதரை கொத்திக் கொள்வதும் சிகரமேற்றுவதும் வழியிலேயே தவறவிட்டு விடுவதுமாய் பயணித்துக் கொண்டேயிருக்கிறது." *((ப.92)* இவ்வாறு கதையின் போக்கிற்கேற்ப கருத்துகளைப் பதிவு செய்வது ஆசிரியரின் முதிர்ச்சியையே காட்டுகிறது.

இக்கதையின் முடிவில் தான் வாழ்ந்த காலங்களில் எத்தனையோ மேடைகளில் பேசி பார்வையாளர்களின் கைத்தட்டல்களைப் பெற்ற பேச்சாளருக்கு அமைதியாக இறுதிச் சடங்கு நடந்து முடிந்த பின்னர் அனைவரும் வண்டியில் வீடு நோக்கிப் பயணிக்கின்றனர். இந்நிலையில் ஒரு குறியீட்டு உத்தியாகக் கதையை இவ்வாறு ஆசிரியர் நிறைவு செய்கிறார். "ஓயாது கேட்டுக்கொண்டேயிருக்கிறது கைத்தட்டல். வண்டியில் ஓட்டுனர் தவிர மற்ற யாவரும் சலனமற்று உறங்கிக் கொண்டிருக்கின்றனர். கைத்தட்டல்களைச் சுமந்துகொண்டு வாகனங்கள் கலைய விரைகிறது வண்டி ஊரை நோக்கி." *(ப.95)*

இந்நூலின் கடைசிக் கதையாக கடவுளின் வருகை எனும் கதை இடம்பெற்றுள்ளது. இதில் நண்பனொருவன் தன் வீட்டில் சீட்டு விளையாடியதால், தன் தாய் கோபம் கொண்டு முதுகில் ஓங்கி அடித்து சாணிக் கரைசலைத் தலையில் கவிழ்த்துவிடுகிறாள். இருமுறை குளத்தில் குளித்தும் சாணிவாடை போகவில்லை. இதனால் மனமுடைந்த சிறுவன் ஊரைவிட்டே வடக்கு நோக்கி ரயிலில் பயணம் செய்கிறான். ரயில் பயணத்தில் சந்தித்த சிவப்பு சீருடைக்காரர்களின் உதவியால் ரயிலில் உணவு விற்கும் வேலை செய்கிறான். ஒருவேளை தெரிந்தவர்கள் யாரும் வந்தால் மீண்டும் ஊருக்குச் செல்ல நேரிடும் என்ற எண்ணத்தால் அவர்களின் உதவியால் ரேணிகுண்டா செல்கிறான். இந்த இடத்தில் கதையில் முன்னோக்கு உத்தியை ஆசிரியர் கையாண்டுள்ளார்.

மாதே என்ற ஒரிஸா பெண்ணைத் திருமணம் செய்து வாழும் நிலையில் குழந்தை இல்லாமையால் இருவரும் குழந்தைக்காக ஏங்கித் தவிக்கிறார்கள். இதனால் கணவனுடன் அடிக்கடி மாதே சண்டை போடுகிறாள். இப்படியாக இடைவெளியும் நெருக்கமும் மாறி மாறி குழந்தையின்மையால் ஏற்படுகிறது. இருவரின் மனநிலையும் கதையின் போக்கில் பதிவு செய்யப்படுகிறது.

ஒருநாள் மாலையில் பேருந்து நிறுத்தமொன்றில் அமர்ந்திருக்கும்போது, தமிழ்நாட்டு முகச்சாயலில் பத்து வயது சிறுவனைப் பார்க்கிறான். தன்னைப் போல ஊருக்குச் செல்ல மறுக்கும் அவனைத் தன்னையே பார்த்த நிலையில், அவனுடன் பேசி வீட்டிற்கு அழைத்து வருகிறான். பசிக்குது என்றவனுக்கு சாப்பாடு வாங்கிக் கொடுத்து, 'சாப்பிடுகையில் அவனின் பசியை இவன் உணர்ந்தான்' என்று அவனின் அனுபவ உணர்விலிருந்து பதிவு செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

விடியற்காலையில் வீட்டிற்குள் உறங்கும் சிறுவனை மனைவியிடம் காட்டுகிறான். "ஆச்சர்ய மிகுதியோடு வீட்டுக்குள் சென்று அவனைப் பார்த்தபோது மின்னலென கடவுளின் முகம் வந்துபோனது அவளுக்கு. அவனது கன்னத்தில் கைவைத்துப் பார்த்துப் பூரித்துப்போனாள். எதுவும் பேசத் தோன்றாமல் இவனைக் கட்டிக்கொண்டாள். இறுக அணைத்த நிலையில் இருவரும் சிரித்துக்கொண்டார்கள். சிறுவன் உறக்கம் கலைந்து எழுந்திருக்கட்டும் எனக் காத்திருந்தனர்." எனக் கதையை ஆசிரியர் நிறைவு செய்கிறார். எத்தனையோ நாட்கள் குழந்தைக்காகக் காத்திருந்த இருவரும் சிறுவன் தூங்கி விழிக்கும் வரை காத்திருக்கமாட்டார்களா என்ன என்றே எண்ணத் தோன்றுகிறது. இன்றும் இவர்களைப் போன்று குழந்தை இல்லாதவர்களாக வாழ்பவர்களில் எத்தனை பேர் குழந்தையைத் தத்தெடுத்து வளர்க்க முன்வருகிறார்கள் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

இச்சிறுகதை நூலின் அணிந்துரையில் பேராசிரியர் இரா.காமராசு குறிப்பிட்டதைப் போல, கதைத் தேர்வும், வழங்கல் முறையும் கைகூடிய இக்கதைகள் தமிழ்ச் சிறுகதை நெடும்பரப்பில் கவனிக்கத்தக்கவை. தனக்கெனத் தனித்ததொரு தடத்தில் பயணிக்கும் ஜி.சரவணன் நவீனத்தமிழுக்கு நல்வரவு என்பது எள்ளளவும் மிகையில்லை என்றே எண்ணத் தோன்றுகிறது.

●

கட்டுரையாளர், உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
தருமமூர்த்தி இராவ்பகதூர் கலவல கண்ணன் செட்டி
இந்துக் கல்லூரி, பட்டாபிராம், சென்னை 72

கட்டுரை




# நூற்றாண்டு: ஜனமித்திரன் இதழ்

## *(1924- 2024)*

**அண்டனூர் சுரா**

"பத்திரிகை இல்லாத நாடு சூரியன் இல்லாத பகலையும், சந்திரன் இல்லாத இரவையும், பக்தியும் இரக்கமில்லாத நெஞ்சையும், நன்னடத்தை இல்லாத படிப்பையும், கண்ணில்லாத முகத்தையும் ஒத்தது" என்கிறார் ஜனமித்திரன் இதழ் தொடங்கப்பட்டபோது அந்த இதழுக்கு வாழ்த்து மொழி எழுதிய ஜி.சுந்தேரச சாஸ்திரி அவர்கள்.

**தமிழகத்தின் முதல் அச்சிதழ்**

தமிழகத்தின் முதல் அச்சிதழ் மெட்ராஸ் கூரியர். 12.10.1785 அன்று ரிச்சர்டு ஜான்சன் இவ்விதழைத் தொடங்கினார். இந்த இதழ் ஆங்கிலத்தில் வெளிவந்தது. தமிழில் வெளிவந்த முதல் இதழ் அரசாங்க வர்த்தமானி (1802) இதழாகும். இது இலங்கை அரசிதழாகும். இந்த இதழ் கொழும்பிலிருந்து வெளிவந்தது. அடுத்து 1812 ஆம் ஆண்டு வெளியான 'மாசத் தினச் சரிதை' எனும் இதழைப் பலரும் தமிழில் வெளியான முதல் இதழ் என்கிறார்கள். இது கிறித்துவ சமயத்தைப் பரப்பும் நோக்கில் இந்த இதழ் கொண்டுவரப்பட்டது. ம. ஞானப்பிரகாசம் கொழும்பு நகரிலிருந்து இந்த இதழைக் கொண்டுவந்தார். இதற்கடுத்து திருச்சபை இதழ் (1815) கொழும்பிலிருந்து வெளிவந்தது.

1823 ஆம் ஆண்டு புதுவை அரசு புதுவை அரசிதழ் எனும் இதழைக் கொண்டு வந்தது. 1829 ஆம் ஆண்டு சுஜந ரஞ்சனி எனும் கதை இதழ் பெங்களூர் நகரிலிருந்து வெளிவந்தது. இப்படியான இதழ்களுக்குப் பிறகு 1831 ஆம் ஆண்டு 'தமிழ் மேகசின்' எனும் கிறித்துவ இதழ் சென்னையிலிருந்து வெளியானது. தமிழகத்திலிருந்து தமிழில் வெளியான முதல் இதழ் இதுவாகும்.

**புதுக்கோட்டையின் முதல் இதழ்**

புதுக்கோட்டை சமஸ்தானம் பத்திரிகையில்லாத நாடாக இருந்து வந்தது. சமஸ்தானத்தில் நடந்தேறிய பல்வேறு மாநாடுகளில் புதுக்கோட்டையில் ஓர் பத்திரிகை தொடங்கப்பட வேண்டுமென தீர்மானங்கள் நிறைவேற்றி வந்தார்கள். பி.எஸ்.விசுவநாதர் அய்யர் அவரது சகோதரர் பி.எஸ். சுப்பிரமணிய ஐயர் இவர்கள் மூலமாக பத்திரிகை கனவு செயல்வடிவம் கண்டது.

1924 ஆம் ஆண்டு அக்டோபர் 17 அன்று புதுக்கோட்டை சமஸ்தானத்தில் முதல் பத்திரிகை ஜனமித்திரன் இதழ் தொடங்கப்பட்டது. வெள்ளிக்கிழமை தோறும் வெளிவரும் வாரப் பத்திரிகை என்கிற குறிப்போடு இந்த இதழ் வெளிவந்தது. இதே ஆண்டு புதுக்கோட்டை சமஸ்தானத்தில் மக்களைக் கொண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் சட்டசபை அமைக்கப்பட்டது. இந்த இதழின் ஆசிரியராக இருந்தவர் பி.எஸ். சுப்பிரமணிய ஐயர். புதுக்கோட்டையில் முதலில் ஜனமித்திரன் பிரஸ் தொடங்கிய இவர், அந்த பிரஸிலிருந்து இந்த இதழைக் கொண்டு வந்தார். இந்த இதழ் சமஸ்தான காலத்தில் நடந்தேறிய அரசு நிகழ்வுகளை வெளியிட்டு வந்தது.

பரந்த இந்திய வரைபடத்தில் நான்கு கைகள் கொண்ட பாரதத்தாய் ஒரு கையில் சூலமும் இன்னொரு கையில் மலர்ச்செண்டும் பிடித்தபடி ஒரு கையைக் கட்டி மற்றொரு கையை நாணத்தோடு முகவாயில் வைத்தபடி நிற்கும்படியான வரைபடத்தில் மேலே ஜன மித்திரன் என்றும் வலதுபுறத்தில் புதுக்கோட்டை என்றும் வரைப்பட்ட ஓவியம் இந்த இதழின் அடையாளச் சின்னமாக இருந்தது. இந்த ஓவியத்திற்கும் கீழே பாரதியாரின் தேசிய கீதங்களிலிருந்து ஒரு பத்தி இடம் பெற்றது.

ஏழையராகி யினி மண்ணிற் றுஞ்சோம் / தன்னலம் பேணி யிழிதொழில் புரியோம் /தாய்த்திரு நாடெனி லினிக்கையை விரியோம் / கன்னலுந் தேனும் கனியு மின்பாலும் / கதலியும் செந்நெலும் நல்குமெக் காலும் / உன்னத ஆரிய நாடெங்கள்நாடே! /ஓதுவ மிஃதை யெமக்கிலை யீடே!

வருடச் சந்தா ( உள்நாடு ) - ரூபாய் 6.00 , வெளிநாட்டு சந்தா - ரூபாய் 7.00, தனி இதழ் - 2 அணா என்று இதழில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த இதழ் புதுக்கோட்டை சமஸ்தான நிகழ்வுகள், கவிதை, சிறுகதை, தொடர், இரங்கல் செய்தி, விளம்பரம் என்று பல பகுதிகளைப் பிரசுரம் செய்தது. கவியோகி சுத்தானந்த பாரதியாரின் கவிதை, கட்டுரைகளை இதழ் தொடர்ச்சியாக வெளியிட்டது. உலகவியல் எனும் தலைப்பின் கீழ் இவர் எழுதிய கட்டுரை உலக அரசியலைப் பேசும் தொடராக வந்தது. இதுதவிர மதுரை ஸ்ரீமான் கே. ராமனாதய்யர் பி. எ எழுதிய சுவர்ணமுகி தொடர் பெண்கள் விரும்பி வாசிக்கும் தொடராக இருந்துள்ளது. புதுக்கோட்டையில் பஞ்ச நிலைமை, புதுக்கோட்டை சட்டசபை, சமஸ்தான தமிழ்கலாசாலைகள், நீதிமன்ற நடவடிக்கை என்று பல்வேறு கட்டுரைகள் வெளியாகியுள்ளன. இந்த இதழ் வெளிவந்த காலத்தில் இந்தியாவில் பட்டணங்கள்- 2316, கிராமங்கள் - 6, 85,665, பட்டணங்களின் ஜனத்தொகை - 3, 24, 75, 276, கிராமங்களின் ஜனத்தொகை - 28,64,76,205 இருந்துள்ளன என்பதை இந்த இதழ் தரும் ஒரு கட்டுரையிலிருந்து அறிய முடிகிறது. இது பாகிஸ்தான் பகுதி இந்தியாவுடன் இணைந்திருந்த காலத்திய புள்ளிவிபரமாகும்.

**ஸ்ரீமான் ஜி.சுந்தரேச சாஸ்திரியின் வாழ்த்துமொழி**

இவர் புதுக்கோட்டை சமஸ்தான சட்டசபையின் தலைவராகவும் வக்கீல் குழுமத்தின் தலைவராகவும் இருந்தவர். இதழ் தொடங்கப்பட்ட காலத்தில் இதழுக்கு இவர் எழுதிய வாழ்த்துச் செய்தி முக்கிய செய்தியாக இடம் பெற்றுள்ளது. எனது அன்பார்ந்த நண்பர் ஸ்ரீமான் விசுவநாத ஐயர் சமஸ்தானத்தில் ஓர் பத்திரிகை இயற்ற முன் வந்தார். சகோதரர் வாஞ்சையே உருவெடுத்து வந்ததெனச் சொல்லும்படி விளங்குபவர்களில் ஒருவரான அவர் இளைய சகோதரர் ஸ்ரீமான் பி.எஸ். சுப்பிரமணிய ஐயர் அவருக்குப் பக்கத் துணையாக நிற்கின்றனர். இப்பத்திரிகைக்குப் பொருளும் பெயரும் ஒருங்கே வாய்ந்து ஜனமித்திரன் என்ற பெயரும் அமைந்திருக்கிறது.

நமது நாட்டிற்கு ஓர் பத்திரிகை இல்லாதது பெருங்குறைவென்று கருதாதவரிலர். ஆயினும் அவ்வரும்பெருங்காரியத்தைச் செய்ய முன்வரும் பாக்கியம் எனது நண்பருக்கே கிடைத்தது. அவருடைய வாய்மையும் தூய்மையும் ஜனங்கள் பால் அளவில்லா அன்பும், பொது ஜன நன்மையில் தீவிரமான அவாவும், குறைவுபடாது பொங்கும் ஊக்கமும், அவரை இவ்வழியில் தோன்றி நிற்கின்றன. அவர் பல வருஷங்களாகப் பழகித் தேர்ந்திருக்கும் தொழிலில் அவருக்கு மேன்மேலும் லாபமும் கீர்த்தியும் ஏற்படும் என்பதற்கு ஐயமில்லை.

அவர் முன்னேற்றத்தை மட்டில் கவனித்தால் அவருக்கு இப்பத்திராதிபத்தியம் அவசியமில்லை என்றும் நான் துணிவாய் சொல்லுவேன். இப்பெரும் காரியத்திற்கு அவசியமான பொருளைப் பற்றியும்

அவர் சிந்தித்தவரல்லர். அதற்கு வேண்டிய மற்ற பல சகாயங்களில் ஒன்றையும் அவர் தேடினதாக இல்லை. ஈஸ்வரனுக்கேற்கவும் தன் மனசாட்சிக்கேற்கவும் மிகவும் மேன்மையான காரியமிது என்ற ஓர் எண்ணத்தையே கடைப்பிடித்துக்கொண்டு இக்காரியத்தில் தலைப்பட்டிருக்கின்றனர்.

முயற்சியுடையார் இகழ்ச்சியடையார் என்பது சிறந்த முதுமொழியன்றோ? அதிலும் அவருக்கு இது விஷயத்தில் ஏற்பட்ட எண்ணம் எப்படிப்பட்டதென்பதை சற்று கவனிப்போம்.

ஆங்காங்கு அவ்வவருக்குத் தெரிந்திருக்கும் கல்வியும் செய்தியும் அவரவரிடம் அங்கிங்கு அடங்கிவிடாமல் நாடும் முழுமையும் பரவி அவரவர் மனதிலுள்ள தோற்றங்களையும், எண்ணங்களையும், பரிஷ்கரித்து வெளிப்படுத்தச் செய்து அவைகளை மற்றவர்கள் தெரிந்து உய்யவும், பிறரை உய்யச் செய்யவுமான வழியைத் தேடுவது நிகரற்ற, உண்மையான, கல்விக்கிளர்ச்சியல்லவோ?

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வமென்று ஒளவையார் சாதித்திருப்பதன் காரணம் மனிதர்களுடைய உடலை அன்பையும், பிதாவும் உண்டாக்கிக் காப்பதாலன்றோ? அழிவுக்கென்றே உண்டான உடலைக் கொடுத்துப் போசிப்பவர்களுக்கே அத்தகைய மகத்துவம் உண்டாகுமாயின் ஞானக் கண்களைக் கொடுப்போருக்கு என்ன மேன்மையுண்டென்று புகழவும் வேண்டுமோ?

பத்திரிகையில்லாத நாட்டில் பத்திரிகையை நாட்டி, நிகழ்காலம், சென்றகாலம், வருங்காலம் என்ற முக்கால செய்திகளையும், அறிவையும் புகட்டும் காரியம் உத்தமமானதெனச் சொல்லாமலே விளங்கும். இதுகாறும் பத்திரிகையில்லாதிருந்த இச்சமஸ்தானம் பெரிய ஊமையாக இருந்ததைப் பேச செய்ததாகவே ஆகும். இந்நன்மைக்கு கைமாறான உதவியாதுமில்லை. ஆதலின் சமஸ்தானத்திலுள்ளோர் அனைவருக்கும் மற்றவர்களுக்கும் உண்மையில் ஆத்ம மித்திரனான ஸ்ரீமான் விசுவநாதய்யரும் அவர் சகோதரரும் யதார்த்தமான பெயர் படைத்த "ஜனமித்ரன்" என்னும் பத்திரிகையும் சீக்கிரத்தில் எங்கும் பிரக்கியாதி பெற்று நீடித்து ஓங்கி வாழ்ந்து வருகவென எல்லாம் வல்ல இறைவனை அனுதினம் பன்முறை வணங்கி போற்றுவோமாக."

**ஜனமித்திரன் தடையும் கைதும்**

ஜனமித்திரன் தொடங்கிய வெளிவந்த ஒன்றரை ஆண்டிலும் பிறகு 1927 ஆம் ஆண்டிலும் புதுக்கோட்டை சமஸ்தான நிர்வாகம் அந்த இதழுக்குத் தடை விதித்து இதழின் கௌரவ ஆசிரியரைக் கைது செய்து சிறையில் அடைத்தது. கி.பு.கோ 112 வது பிரிவின்படி, புதுக்கோட்டை அடிஷனல் சீப் மாஜிஸ்டிரேட் அவர்களால், புதுக்கோட்டை நகரத்தில் ஜனமித்திரன் அச்சுக்கூடத்தை நிறுவியவரும் ஜனமித்திரன் ஆசிரியருமான எஸ்.விஸ்வநாதய்யர் 1925 ஆம் ஆண்டு முதல் 1927 ஆம் ஆண்டு வரை சில முக்கிய தேதிகளில் ராஜதுவேஷமான விசயங்களை வெளியிட்டதன் காரணமான இதழுக்குத் தடை விதிக்கப்பட்டதுடன் ஆசிரியர் கைது செய்யப்பட்டார்.

புதுக்கோட்டை மன்னராக இருந்த மார்த்தாண்ட பைரவத் தொண்டைமான் மன்னர் பதவியைத் துறந்ததன் பிறகு அவரது மகன் சிட்னி மார்த்தாண்டாவிற்குப் பட்டம் சூட்டக்கூடாதென்றும் ஒரு இந்தியரும் இந்து வாரிசுக்குத்தான் ராஜாங்கம் கிடைக்க வேண்டுமென்று பத்திரிகையில் எழுதி வந்ததே காரணமாக அமைந்தது.

புதுக்கோட்டை மன்னர்களில் மக்களால் பெரிதும் கொண்டாடப்பட்டவர் மார்த்தாண்ட பைரவர். இவரது ஆட்சிக் காலத்தில் மன்னர் கல்லூரி தொடங்கப்பட்டது. முத்துலெட்சுமி ரெட்டி அவர்கள் உயர்கல்வி கற்பதற்குக் கல்லூரியில் இடமளித்தவர் இவரே. இவர் வெளிநாட்டிற்கு அடிக்கடி சென்று வருகையில் மெல்போர்ன் பாரிஸ்டரின் புதல்வி இ.எம்.பிங்க் எனும் பெண்ணின் மீது காதல் கொண்டு திருமணம் செய்துகொண்டார். இந்தத் திருமணத்திற்குப் பிற்கு அவர் மன்னராக நீடிக்க சமஸ்தான நிர்வாகம் ஏற்கவில்லை. மேலும் சுதந்திரப் போராட்ட வீரர்கள் எதிர்ப்புத் தெரிவித்தார்கள். ஆகவே தன் மன்னர் பதவியை அவர் ராஜினமா செய்யவேண்டியிருந்தது. இதன்பிறகு அடுத்த மன்னரைத் தேர்வு செய்வதில் குழப்பம் ஏற்பட்டு வந்தது. மார்த்தாண்ட பைரவர் - பிங்க் தம்பதிகளுக்கு ஒரு ஆண் மகவு பிறக்க அந்தக் குழந்தைக்குச் சிட்னி என்று பெயர்சூட்டினார்கள். புதுக்கோட்டையின் அடுத்த மன்னராக சிட்னி மார்த்தாண்டரை அறிவிக்கும் முயற்சியில் சமஸ்தானம் இறங்கியது. புதுக்கோட்டையின் மன்னராக ஒரு முழு ஹிந்துவே இருக்க வேண்டும் என்று ஜனமித்திரன் எழுதி வந்தது.

ராஜாங்கம் விசயத்தில் தலையிட்டு எழுதியதற்காக கோபம் கொண்ட சமஸ்தானம் 124 - ஏ பிரிவின்படி பத்திரிகையின் மீது வழக்குத் தொடர்ந்தது. பத்திரிகை அலுவலகம் மற்றும் அச்சுக்கூடத்தைப் போலீஸ் பரிவாரங்களால் முற்றுகையிட்டு, சோதனையிட்டதுடன் ஜனமித்திரன் இதழைத் தடை செய்தது. இதழின் கௌரவ ஆசிரியராக இருந்த எஸ். விசுவனாதய்யர் பி.எ அவர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். நீதிமன்ற விசாரணையில் இதழின் ஆசிரியர் அரசு வழக்கறிஞர் என்பதால் அவர் இதழ் நடத்தியது தவறு என்று மாஜிஸ்திரேட் தண்டனையும் அபராதமும் விதித்தார். மேல்முறையீட்டில் சீப் கோர்ட்டார் அத்தீர்ப்பை ரத்து செய்தார்.

இதன்பிறகும் சமஸ்தான போலீஸார்கள் இதழாசிரியர் மீது அடுத்தடுத்த புகாரின் மீது கி.பு.கோட்

108 ஆவது பிரிவின்படி நடவடிக்கை எடுத்தார்கள். அதையும் கோர்ட் தள்ளுபடி செய்தது. பிறகு சமஸ்தான ஏஜெண்ட் துரை மிஸ்டர் C.W.E.காட்டன் அவர்கள் வழக்கை திரும்பப் பெற்றுக்கொண்டதன் பேரில் பிரச்சனை முடிவுக்கு வந்தது.

நீதிமன்றம் தடையை விலக்கிக் கொண்டதன் பிறகு இதழ் வெளிவர பொருளாதார நெருக்கடி இருந்தது. ஜனமித்திரன் இதழ் தேவையைக் கருத்தில்கொண்டு சமஸ்தானப் பகுதி மற்றும் அதற்கும் வெளியிலிருந்து வாசகர்கள் இதழுக்கு நிதியுதவி செய்தார்கள். ஊருபாய் 1083 அளவில் சேர்ந்திருந்த நிதியைக் கொண்டு இதழ் மீண்டும் வெளிவந்தது.

பி.எஸ். சுப்பிரமணிய அய்யர் இதழின் ஆசிரியராக பொறுப்பேற்றதன் பிறகு ஜனமித்திரன் இதழின் வடிவமைப்பு மாற்றம் கண்டது. முகப்பு பக்கத்தில் காந்தியின் கைராட்டை, ஒரு பக்கம் பாரதியாரின் ஜாதி மதங்களைப் பாரோம் எனும் பாடலும் இன்னொரு புறம் ஒன்றுபட்டாலுண்டு வாழ்வே என்கிற பாடலும் இடம் பெற்று கீழே சுத்தம், சுதந்திரம், சமத்வம் என்கிற குறிப்புடன் வெளியானது.

**தி ஹிண்டு பத்திரிகையின் ஆதரவு**

எஸ். சுப்பிரமணிய ஐயர் பத்திரிகையின் ஆசிரியராக பொறுப்பேற்றதன் பிறகு பத்திரிகை எந்தத் தடையுமின்றி ஐந்து ஆண்டுகளை நிறைவு செய்தது. வாசகர்கள் இதற்காக ஒரு பெரியளவு பாராட்டு விழா எடுத்தார்கள். அந்த விழாவிற்கு தலைமையேற்க தி ஹிண்டு இதழின் அன்றைய ஆசிரியர் ஏ. ரெங்கஸ்வாமி அய்யங்கார் அவர்களைக் கேட்டுக்கொண்டார்கள். அவர் நிகழ்வுக்கு வருவதாக ஒப்புக்கொண்டார். விழாவிற்கும் முன்னதாக அவர் வேறொரு நிகழ்வில் கலந்துகொள்ள வேண்டியிருந்ததால் அந்த விழாவில் தலைமையேற்க முடியவில்லை. அதற்காக வருத்தம் தெரிவித்து கடிதம் எழுதினார். பிறகு இந்த விழா சுதந்திரப் போராட்டத் தியாகியும் இந்திய தேசிய காங்கிரஸ் பேரியக்கத்தின் தலைவர்களில் ஒருவரான எஸ். சத்தியமூர்த்தி அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

**தீரர் சத்தியமூர்த்திக்குத் தடை**

எஸ்.சத்தியமூர்த்தி புதுக்கோட்டை சமஸ்தானத்திற்குள் நுழைய தடை விதிக்கப் பட்டிருந்தது. அந்தத் தடை விலகிக்கொண்டதன் பிறகு அக்டோபர் 24, 1929 அன்று ஜனமித்திரன் விழா நடைபெற்றது. புதுக்கோட்டை மக்களுக்கு நன்மை செய்யும் நோக்கில் தொடங்கப்பட்ட ஜனமித்திரன் இதழ் செய்த பங்களிப்புகளாக கதர் இயக்கம், மது ஒழிப்பு, கிராம சீர்த்திருத்தங்கள், கட்டாயக் கல்வி ஆகியவற்றை நினைவுகூர்ந்து வாழ்த்தினார்கள்.

அன்றைய நிலையில் ஜனமித்திரன் இதழின் சந்தாதாரர்கள் ஐநூறிலிருந்து அறுநூறு என்கிற அளவில் இருந்தது. இதழுக்கு தொடர்ந்து விளம்பரம் கொடுத்துவந்த சமஸ்தான நிர்வாகம் விளம்பரம் தருவதை நிறுத்திக்கொண்டதற்குப் பிறகு கடுமையான பொருளாதார சூழலில் வார பத்திரிகையாக இதழ் வெளிவந்தது. இந்த விழாவில் பேசிய எஸ். சத்தியமூர்த்தி அவர்கள், ‘‘மகாராஷ்டிரா மொழியில் வெளியில் வெளிவந்த ‘கேசரி’க்கு எவ்வளவு கீர்த்தி உண்டோ அவ்வளவு கீர்த்தி ஜனமித்திரனுக்கு உண்டு. பத்திரிகையில்லாத அரசாங்கம் தலைவிரிக்கோலமாய் ஆடும் என்பதற்கு சந்தேகத்திற்கு இடமில்லை" ஜனமித்திரன் பத்திரிகையை விருத்தி செய்து இன்னும் சிறப்பாக நடத்துமாறு கேட்டுக்கொண்டார்.

**காந்தியின் வருகையைப் பதிவு செய்த ஜனமித்திரன்**

1927 ஆம் ஆண்டு செப்டம்பர் 21 ஆம் தேதி புதன்கிழமை மாலை 4.00 மணிக்கு திருச்சியிலிருந்து புதுக்கோட்டைக்கு மகாத்மா காந்தியடிகள் வருகை தந்தார். காந்தியடிகளோடு அவரது துணைவியார் கஸ்தூரிபாய், ராஜகோபாலாச்சாரியார், மகாதேவ் தேசாய், ராமனாதன், தேவதாஸ்காந்தி, டாக்டர் ராஜன் ஆகியோர் வருகைதந்தார்கள். காந்தியின் வருகைக்கு அன்றைய புதுக்கோட்டை சமஸ்தான நிர்வாகம் எதிர்ப்பு தெரிவித்தது. காந்திய உரையின் சாராம்சமாக பசு வளர்ப்பு, கைராட்டை, கதர் இயக்கம், மது ஒழிப்பு இருந்துள்ளன.

காந்தியடிகள் புதுக்கோட்டைக்கு வருகைதந்த நாளன்று புதுக்கோட்டை நகரத் தொகுதிகளில் சட்டசபைத் தேர்தல் நடைபெற்றது. காந்தியின் வருகையினால் நகரத் தொகுதி தேர்தல்களில் வாக்குப் பதிவு பெரிதும் பாதிக்கப்பட்டது. அதாவது 45 விழுக்காடு மட்டுமே வாக்குப்பதிவானது.

இப்படியான வரலாற்றுச் செய்திகளை வெளியிட்டு வந்த ஜனமித்திரன் இதழ் பொருளாதார நெருக்கடி மற்றும் இன்னும் பிற காரணங்களால் 1939 ஆம் ஆண்டோடு இதழ் பணியை நிறுத்திக்கொண்டது. ஆயினும் அச்சகப் பணியில் தொடர்ந்து செயலாற்றி வந்தது. புதுக்கோட்டை சுற்றி நடைபெறும் நாடகங்களுக்கு விளம்பர சுவரொட்டிகள், நூல்கள், துண்டுப் பிரசுரங்கள் யாவும் ஜனமித்திரன் பிரஸ் மூலமே அச்சடிக்கப்பட்டது. இந்த பிரஸ் அச்சடித்த நூல்களில் ‘ஸ்ரீராஜகோபால விஜயம்’ மிக முக்கியமான நூலாகும். இந்த இதழ் இந்தியாவிலுள்ள நூலகங்களில் புதுக்கோட்டை ஞானாலயா நூலகத்தில் மட்டுமே ஆவணமாக இருக்கிறது. இத்தகைய இதழ்களை அரசு மின் ஆவணமாக மாற்றினால் வருங்கால சந்ததியினர் பெரிதும் பயன்பெறுவார்கள்.

●

கட்டுரையாளர், எழுத்தாளர்

கட்டுரை

# தகவமைப்பதற்கான முன்னெடுப்புகள் சிறுபாணாற்றுப்படையை முன்வைத்து



முனைவர் சூ.ஜா.இதயராஜா

பத்துப்பாட்டு பனுவல்கள் தொகுப்பு நூல்களாகச் சுட்டப்பட்டாலும் இத்தொகுப்பில் அடங்கியுள்ள ஒவ்வொன்றும் தனித்தன்மையுடைய பனுவல்களாகத் தம் சொல்லாட்சிப் பாங்கிலும் கருத்துப்பொருண்மையிலும் அமைகின்றன. பத்துப்பாட்டினுள் அமைந்துள்ள நூல்களைக் காலவரிசைப்படுத்தும் இராசமாணிக்கனார் அறிஞர்கள் பொருநராற்றுப்படை பட்டினப்பாலை. பெரும்பாணாற்றுப்படை. குறிஞ்சிப்பாட்டு ஆகிய பனுவல்கள் ஒரு காலத்தன எனவும் அதன் தொடர்ச்சியாய் மலைப்படுகடாம், மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை போன்றன ஒரு காலத்தன எனவும், சிறுபாணாற்றுப்படை அதற்கடுத்த காலச்சூழலிலும் தோன்றியதாகக் போன்றோர் கால எல்லைகளைத் தீர்மானிக்கின்றனர். இப்பாட்டுத் தொகுப்பினுள் ஆற்றுப்படை வகைமையிலும், அகம், புறம், அகம் புறம் இணைவு எனும் பொருண்மையிலும் பகுப்புமுறையை வைக்கலாம். எதுவாக இருப்பினும் பழந்தமிழ் பனுவல்கள் அனைத்தும் வாய்மொழித் தன்மைக் கூறுகளை உள்வாங்கிய எழுத்துமொழி ஆக்கங்களாகவே காணக்கிடக்கின்றன. வாய்மொழி மரபின் வழிவந்த அலைகுடிகளை நிலைத்த குடிகளால் கட்டமைக்கப்பட்ட நிறுவனச் சமூகத்தின் அதிகார வரம்பிற்குள் கொண்டு வரும் சமூக, பொருளாதார, அரசியல் காரணிகளைப் பயன்படுத்தி தமக்குள் உள்வாங்கிக்

கொண்டதை அவ்விலக்கியங்களின் பொருண்மைச் சேர்மங்கள் உணர்த்துகின்றன. வரையறுக்கப்பட்ட கோட்பாட்டின் படிநிலைகளுக்கு உட்படாத கூட்டுச்சமூக அமைப்பினரை நிறுவனமயமாக்கும் முன்னெடுப்புக்களை இவ்விலக்கியங்கள் மேற்கொண்டன.

அறிவார்ந்த பண்பாட்டுக் கூட்டங்களான பாணர். பொருநர். கூத்தர், விறலியர், போன்ற சாமானிய சமூகத்தில் உலவித்திரியும் கூட்டத்தாரை அன்றைய சமூக நிறுவன உருவாக்கங்கள் பயன்படுத்திக் கொண்டன. காலத்தால் தொன்மையான பொருநராற்றுப்படை இதனைத் தெள்ளிதின் உணர்த்தும். அதுபோலவே அத்தொகுப்பில் உள்ள பனுவல்கள் பல்வேறு நிலைகளில் இலைமறைக்காயாகக் கோடிட்டுக் காட்டும். சமூகத்தின் மையக்கருவிற்குள் வினைபுரியும் பலதரப்பட்ட கருத்தியல் சேர்மங்கள், அதன் விளைவாக பிறப்பெடுக்கும் முட்டல்கள், முரசல்கள், சமரசப் போக்குகள் போன்றவைகளை அவ்விலக்கியங்களை வாசிக்கும் போது அறிந்துகொள்ள முடியும். அதன் நோக்கில் சிறுபாணாற்றுப்படையை மறுவாசிப்புக்கு உட்படுத்தி அதன் நோக்கில் வாய்மொழி மரபினக் கூட்டங்கள் தங்களை உள்வாங்க முனையும் அதிகார வரம்புகளை மீறவும், தம்மை நிலைப்படுத்திக்கொள்ளவும் முயன்றிருப்பதை அப்பனுவலின் கருத்தியலிருந்து உய்த்து உணரலாம்.

சிறுபாணாற்றுப்படையைப் பாடியவர் இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் எனக்குறிப்பிடப்படுகிறது. இவரைப் பற்றிய முழுமையான தரவுகளைத் தமிழ் இலக்கிய வரலாற்றுப் பதிவுகளில் காணமுடியவில்லை. இவர் பாடியதாக இவ்வொரு பாடல் தான் குறிப்பிடப்படுகிறது. புதுவைக்கு 45கி.மீ தொலைவில் உள்ள இச்சிறிய ஊர். உப்பங்கழிகள் சூழ்ந்த நிலப் பகுதியாகக் காட்சியளிக்கிறது. கடலுக்கும் ஊருக்கும் இடைப்பட்ட பரந்துபட்ட உப்பங்கழிகளைக் கொண்டது. இதனைக் கருத்தில் கொண்டு தான் அப்பகுதி இடைக்கழிநாடு எனப் பேசப்படுகிறது. அப்பகுதியில் உள்ள ஓர் சிற்றூர் தான் நல்லூர் அவ்வுரில் பிறந்தவரானதால் நாட்டையும் ஊரையும் இணைத்து இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார் என அழைக்கப்பட்டார். இந்நல்லூருக்கு மேற்கில் ஓய்மாநாடு இருந்துள்ளது. இவ்வுரில் அவர் தம் சிலை நிறுவப்பட்டுள்ளது. சிறுபாணாற்றுப்படை ஓய்மா நாட்டு நல்லியக்கோடனைச் சிறப்பித்துப் பாடப்பட்டுள்ளது 269 அடிகளால் ஆனது. பாட்டு, யாழ், இசை என்ற நோக்குகளில் பொருள்படும் 'பண்' எனும் சொல்லின் அடிப்படையில் வந்தது தான் பாண் எனும் சொல்லாகும். அதன் வழிவந்தவர்கள் பாணர், பொருநர், கூத்தர் எனப் பலப்பெயர்களில் வழங்கலாகும் அலைகுடிப்பெருமக்கள். இப்பனுவல் வாய்மொழி மரபினரின் இருப்பை உறுதிசெய்யவும், முதுகுடிகளான சீறூர் சமூக அமைப்பு சிதைந்து விடாமல் போராடக்கூடிய ஒரு சூழலையும் காட்டமுனைகிறது.

"இனக்குழுச் சமுதாய எச்சங்களைத் தாங்கிய 'அரசு' என்னும் அமைப்பு உருவாகாத வன்புலச் சமுதாயத் தலைவர்களான சீறூர் மன்னர்களின் இயல்பும் சீறூர்த் தலைவியின் சமுதாயத் தொடர்பும் இச்சமுதாய வழிபாட்டு முறைகளும் உணவுமுறைகளும் போர்நோக்கங்களும் சமுதாய நலம் பேணுதல் என்பதை மட்டுமே மையமாகக் கொண்டிருந்தன. புலவர்களால் வரவேற்கத்தக்க பண்புடையவர்களாக விளங்கினர்." *(பெ. மாதையன் 2004:31)*

